விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 21 } சுக்கில௵ புரட்டாசிமீ :: 1929-ம் ௵ செப்டம்பர்மீ { பகுதி 9

விவேக போதினி

பொது ஜனங்களின் அறிவைப் பரவச் செய்து அவர்கள் க்ஷேமத்துக்காக சென்ற 21-ஆண்டுகளாக உழைத்துவரும் ஒரு மாதப் பத்திரிகை. பற்பல கவர்ன்மெண்டுகளும், பள்ளிக்கூடங்கள், உபாத்தியாயர்கள், மாணவர்கள் உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும், முனிசிபாலிடிகளும், பொதுமக்கள் உபயோகத்துக்காக பஞ்சாயத்துக்களும், "விவேக போதினி" யை வாங்கி ஆதரித்து வருகின்றன.

தபால் செலவுடன், சந்தா விபரம்

		உள் நாடு			வெளி நாடு		
ஒரு வருஷத்துக்கு	ரூ.	3	8	0	ரூ. 4	8	0
தனிப் பிரதி	ரூ.	0	5	0	ரூ. 0	6	0
மாதிரிப் பிரதி	ரூ.	0	2	0	இனும்.		

போஷகர்களுக்கு ரூ. நூறு

ஜீவிய சந்தா (ரூ. 50) ரூபாய் ஐம்பது

சந்தாத் தொகை, விளம்பரக் கட்டணம் இவைகளை ஒரு ஏஜண்டினிடமும் கொடுக்கக்கூடாது. சகல தொகைகளும் எங்கள் காரியாலய மானேஜருக்கு அனுப்பிவிடல் வேண்டும். சந்தாதாரர்கள், குறைந்த விலைக்கு புத்தகங்கள் ஆர்டர் செய்கையில், தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும்.

ஒப்பந்த விளம்பர விகிதம்

ஒரு வருஷத்துக்கு முழுப் பக்கத்துக்கு ரூ.	125	0	0
ஒரு வருஷத்துக்கு அரைப்பக்கத்துக்கு ரூ.	75	0	0
ஒரு வருஷத்துக்கு கால் பக்கத்துக்கு ரூ.	45	0	0

வியாசம் எழுதுபவர்களுக்கு

வியவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவைகளைப்பற்றிய வியாசங்களும், அழகான சிறு கதைகளும் தேவை. அவைகள் எளிய தமிழ் நடையில், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் மையினால் எழுதியனுப்பப்படல் வேண்டும். ஒப்புகொள்ளப்பட்ட வியாசங்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். இப்பத்திரிகைக்கு அநேகம் பெண்பாலரும் விஷய தானம் செய்துவருவது கவனிக்கத்தக்கது.

சம்பாவனை செய்யப்பட்ட வியாசங்களை, மறுபடி புத்தக ரூபமாகப் பிரசுரிக்கும் பாத்தியதை, இப்பத்திரிகையின் பிரசுரகர்த்தர்களை சேர்ந்ததாகும்.

THE VIVEKA BODHINI

An Illustrated Tamil Monthly devoted to diffusion of knowledge and popular education, Published for the past **21** years. The Viveka Bodhini is subscribed for by the Governments, several Local Boards, Panachayats & Municipalities for the use of Teachers and others in the schools etc., under their control.

Rates of Subscription (Post Free)

	Inland			Foreign		
	Rs.	A.	P.	Rs.	A.	P.
Per annum	3	8	0	4	8	0
Single copy	0	5	0	0	6	0
Sample copy	0	2	0	Free.		

For Patrons Rs. One Hundred

:: Life Subscription (Rs. 50.) Rs. Fifty ::

Rates of Advertisement

Full Page ...	Rs.	125	0	0	per annum
Half Page ...	,,	75	0	0	per annum
Quarter Page ...	,,	45	0	0	per annum

The above rates are all net and subject to no discount whatever. Advertisement orders should be accompanied with advance.

Notice to Contributors

The Editor solicits contributions on all subjects relating especially to Science, Agriculture, Industry and Commerce and neatly written short stories. Articles should be written in simple colloquial Tamil and on one side of the paper only and in ink. Accepted articles will be paid for on publication. It is distinctly understood that the Publishers may at their discretion publish in book form, Articles and Short Stories which have been paid for at the time of publication in the columns of the Bodhini.

No moneys should be paid to our agents. Concession rates on book orders are allowed only to *Subscribers who are not in arrears.* Subscribers when ordering for books at concession rates will kindly mention their Register Number. All remittances, letters &c., should be addressed to the Manager, Viveka Bodhini.

விவேக போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரமே புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும்

முருகன் வழிபாடு
WORSHIP OF LORD MURUGA

கந்தரநுபூதி

[சதுர்வேதி - சிவத்தியாநாநந்த மஹர்ஷி]

தீராப்பிணி தீர

கெடுவாய் மனனே கெதி கேள் கரவா
திடுவாய், வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

பிறவிநோயாகிய தீராத வியாதி ஒருவனை விட்டொழிய, அவன் மோட்சநிலை பெறற்கு ஆறு உரைக்கும் மறையிது.

ஸ்துதி : வடி வேல் இறை.

தந்திரம் : 'உன் செயலே யன்றி யென் செயலொன்று முலகிலில்லை' என்னும் பாவனையையும், உடல் பொருளாவி யென் றெல்லா முனக்கே யொழித் தழித்தேன்' என்னும் பாவனையையு முட்கொண்டு செய்கை முறுக்க மொழிந்த மனமுற வேண்டுமென அறிதல்.

பிரயோகம் : இல்லை யென்னுமற் கொடுத்தலும், இறைவன் அருள் முயற்சியி னிற்றலும், ஆகாமியச் செயல்களை யொழித்தலும் செய்து, பிறவி யினி இல்லையென எண்ணி மேற்சொன்னபடி யொழுகலுமாம்.

உரை : உலகப் பொருள்களின் ஆசையால் கெட்டு நிற்கும் மனமே! பிறவி நீங்கும் மார்க்கத்தினைக் கேட்பாயாக. கையில் உள்ளதை யொளிக்காமல் இரப்பவர்க்குக் கொடுப்பாயாக. சக்தி வேலைக் கையகத் தேந்திய மேலோனாகிய முருகனது தாளைத் தியானிப்பாயாக. நீண்ட வேதனையாகிய பிறவித் துன்பம் பொடிபடுமாறு, மாயையை அவனது திருவடி ஞானத்தாற் சுட்டொழிப்பாயாக. அல்லல்களுக்கு ஆதாரமாகிய இருவித வினைகளையும் விட்டு நீங்குவாயாக.—வேல், சக்திக் கறிகுறியாம். வேலையே மேருதிண்டமாகவும் அதன் இலையையே சிரமாகவும் காணல் யோகியர் நிலையாம். இதனால், வேலிறை என்ற வாற்றானே குண்டலினி தத்துவமும் தக்ஷிணாமூர்த்தி தத்துவமும் கினைவு முற்படலைத் தெளிந்துணர்கவென்பார், 'வடிவேலிறைதாணினைவாய்' என்றார். இறை ஞானமாகிய அக்கினியாற் சுடப்பட்ட பொறிகளை யுடையார் சுத்த மாயையினராகிய ஜீவன் முத்தர்களான தன்மையை யறிதல் வேண்டு மெனச் சுட்டுவார், 'சுடுவாய் நெடுவேதனை தூள்படவே'யென்றார். உள்ளமானது ஒன்றிலும் முயல்வற்று நின்றபோதே கருவிகள் ஓய்ந்து நிற்கும். அக்கருவிகளோய்ந்தால் ஆகாமிய நீங்கும். அதனால் சோம்பவித்திச் சுகப் பயன் கொள்ளலாகு மானது பற்றி 'விடுவாய் விடுவாய்' என இருமுறை வற்புறுத்தினார். நல்வினைப்பயனும் பொன்விலங்குபோல ஆஸ்தானங்களிற் கட்டுண்டிருப்பதாகிய துன்பத்தின் நீக்காமை பற்றி 'வினையாவையுமே'என்றார். சுதி மோனை நோக்கிக் கெதி எனலாயது.

குடிகளைத் தன் வசமாக்க

அமரும் பதி கேள் அகம் ஆம் எனும் இப்
பிமரங் கெட மெய்ப்பொருள் பேசியவா!
குமரன் கிரி ராஜ குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே

சூழ வசிக்கும் குடி ஜனங்களைத் தன் இஷ்டப்படி நடக்குமாறு செய்விக்கும் உபாயங் கூறும் மறை இது.

ஸ்துதி : குமரன் கிரிராஜ குமாரி மகன் சமரம் பொருதானவ நாசகன்.

தந்திரம் : ஆசையற்ற இறைவன்கீழ் ஆசை மிகுந்த பக்த கோடிகள் அடங்கி நடப்பதை யுணர்ந்து ஊர், உறவு, இல் என்னும் அபிமானங்கள் பற்றாத நிலையை மேற் கொளல்.

பிரயோகம் : தந்திரம் கூறிய அந் நிலையிலிருந்த வண்ணமே மனம் வாக்குக் காயங்களைத் தொழிற்படுத்தல்.

உரை : குமரனும், பர்வதராஜ குமாரியின் புத்திரனும், யுத்தம் செய்யும் தானவர்களாகிய அசுரர்களை யழிப்பவனுமான முருகக்கடவுள், யான் வசிக்கும் பதியினிடத்தும், எனது கேளிரிடத்தும், எனது இல்லினரிடத்தும் எனக்கிருந்த மயக்கவுணர்வு கெட, எனக்கு உண்மைப் பொருளை உபதேசம் செய்தவாறு என்னே! அவ்வருஞ் செயற்கு யான் தருங் கைம்மாறு இலதென்றபடி.

நாசகனே என்பதிலுள்ள ஈற்றேகாரம் ஈற்றசையே யன்றி விளிப்பொருளில் வந்ததல்ல. ப்ரமரம், சுழற்சி, பிமரமெனத் திரிந்தது. 'அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம் பொழுக, மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு, கைத்தலமேல் வைத்தழு மைந்தருஞ் சுடுகாடுமட்டே, பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாபமுமே' முதலிய உண்மை நீதிகளை யுணர்த்தித் தன்னைத் தனிப்படுத்து நிறுத்தினா ரென்பார் 'மெய்ப் பொருள் பேசியவா!' என்றார். அல்லது, எல்லாப் பற்றுமற்ற பேரறிவு நிலையே ஆன்ம நிலையெனப் போதித்த வுண்மையநுபூதியை யறிந்து வியந்து கூறினதாகக் கொள்ளலும் தகும். "வேண்டி னுண்டாகத் துறக்க; துறந்த பின், ஈண்டியற்பால பல" என்றார் பிறரும்.

சினத்தால் அறுத்த மூக்குச் சிரித்தால் வருமா?

மகாத்மா காந்தி

MAHATMA GANDHI

அக்டோபர்௴ 2௳ இந்தியா முழுமையும் மகாத்மாவின் ஷஷ்டி பூர்த்தி (61-வது பிறந்த தினம்) கொண்டாடப்பட்டது. இந்தியாவில் பல வேறிடங்களிலும், அன்று பெருந் தினமாகக் கொண்டாடப்பட்டது. மகாத்மா காந்தி தலைமை வகிக்கும் காங்கிரஸ் சபையைச் சேர்ந்தோருமின்றி, மற்றும் பல ராஜீயக் கட்சிகளைச் சேர்ந்தோரும் இக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

அன்று அநேக இடங்களில் மகாத்மாவின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றியும் அவருடைய குணநிசயங்களைப்பற்றியும் அநேகர் பிரசங்கம் செய்துள்ளார்கள். மஹாகனம் வி எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள், அன்று சென்னையில் சொன்னதுபோல், காந்தியடிகள் கடவுள் எனக் கருதப்படுமாறு, கடவுள்பால் அவ்வளவு ஈடுபட்டுள்ளார்; ஆகவே கடவுள் மாதிரி அவர் வெவ்வேறு மனிதர்களுக்கு வெவவேறாய்த்தோன்றுகிறார். ஒவ்வொருவரும் அவரைப் பின்பற்றலாம். அவரவர்க்கு மகாத்மாவின் குணங்களில் ஏதேனும் ஒன்றிலாவது பற்றுதல் ஏற்படும். இக் காரணங்கொண்டே அவர் பிறந்த நாளைத் திருநாளாக எல்லோரும் கொண்டாடினர்.

இந்தியா வல்லாது உலக முழுமையும் கடவுளிடம் பயமுள்ள ஒவ்வொரு அந்நியரும் மகாத்மாவைப் போற்றுகின்றனர். அநேகர் இவரது கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றனர். மற்ற ராஜ்யங்கள் இந்தியாவை மதிப்பதற்குக் காரணமிருந்தால் அது மகாத்மா காந்தியால்தான் என்று ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் சொன்னார்; அது முற்றும் நிஜமே. அநேகர் 'மகாத்மா காந்தி உங்களிடையே இருந்தும் நீங்கள் சுயராஜ்யம் பெறவில்லையா'' என்று ஆச்சரியப்படுகின்றனர்.

இவரது பெருமை ராஜீய வழிகளில் மாத்திரமல்ல. இவரது அரிய தியாகங்களும், மனிதராய்ப் பிறந்தோர் எல்லோரிடத்திலும் அன்பு பாராட்டுதலும், இந்திரியங்களை அடக்கி ஜபித்துள்ளதும், சத்தியத்தில் இவருக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையும், இவர் எப்பொழுதும் சத்தியமான முறைகளில் நடந்துகொள்வதுமே இவரது விசேஷப் பெருமைக்குக் காரணமாகும்.

ராஜீயத் துறையில், உலகத்துக்கே இவர் புது வழி யொன்றைக் காண்பித்துள்ளார். அடிமை நாட்டார் தாங்கள் சுயேச்சை பெற வேண்டின், தங்கள் எஜமானர்களோடு கத்தியேந்தியோ, துப்பாக்கியை உபயோகித்தோ, மற்றெந்த ஆயுதம் தாங்கியோ யுத்தம் செய்தால்தான் முடியுமென்று நினைத்திருந்தனர். அம்முறையின்றி, ஆத்ம சக்தியால், அதாவது ஆயுதங்களை துவுமின்றி, அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு, சுயராஜ்யப் போர் நடத்தலாம் என்று காண்பித்தவர் இவரேயாம். இம் முறையைக் கைப்பிடித்து, தென் ஆப்பிரிக்காவில் குடியேறியிருந்த இந்தியர்களுக்குப் பெருநலம் செய்வித்துள்ளார். இந்தியாவிலே கெய்ராவில் இம் முறையையே கையாண்டு, குடியானவர்களுக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறார். இவரது முக்கிய சிஷ்யரான வல்லபாய் படேலும், பர்தோலியில் இம் முறையைக் கையாண்டு வெற்றியடைந்ததைப் பார்த்திருக்கிறோம்.

சுதேசி இயக்கத்துக்குப் புத்துயிரளித்து அதை ஒழுங்காய் நடக்கும்படி செய்தது மகாத்மா காந்தியேயாம். துணி மணிகளால் மாத்திரம் நம் நாட்டிற்கு வருஷா வருஷம் எவ்வளவோ கோடி ரூபாய்கள் நஷ்டமேற்படுகிறது. இதைத் தடுத்து, அதை நம் நாட்டிலேயே தங்கும்படி செய்தால் இந்தியர் மிகவும் க்ஷேமமடையலாம். அது காரணம்பற்றியே அவர் கதர் இயக்கத்தை ஆரம்பித்தார். இக் கதர் இயக்கம் நாளுக்கு நாள் பலப்பட்டு, எவ்வளவோ இடையூறுகளுக்கிடையே நடந்து வருகின்றது எல்லோரும் அறிந்த விஷயமே.

இதுவுமன்றி தீண்டாமை விலக்கில் அதிக ஊக்கமாய்ப் பாடுபடுவர் இவரேயாம். இவர் ராஜீயத் துறையில் வருமுன், கிறிஸ்தவர்களே தீண்டாதவர்களைத் தங்கள் மதத்தில் சேர்த்து, தங்கள் எண்ணிக்கையை அதிகப் படுத்திக் கொண்டிருந்தனர். இவர் வந்ததும், ராஜீய விஷயங்களில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது 'தீண்டாமை விலக்கே' என்று வற்புறுத்தி, இதுகாறும் அதற்காக உழைத்து வருகிறார்.

மகாத்மா காந்தி வந்தபிறகே இந்தியரின் புத்திப்போக்கும் மாறிவிட்டது. அவர்களுக்குத் தங்களுடைய சுயமரியாதை தெரிந்ததும், பிறநாட்டார் அவர்களை முன்னிலும் அதிகமாய் மதித்தலும் மகாத்மா காந்தியால்தான். கதர் இயக்கம் ஆரம்பமானது முதல் ஜனங்களுடைய மனப்பாங்கிலும் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. மிகவும் ஆடம்பரமாக உடுத்திக்கொண்டிருந்தவர்கள் அநேகர், இப்பொழுது சாதாரணமாய் கதர் வேஷ்டியும் சொக்காயுமே அணிந்துவருவதினாலேயே, நம் நாட்டில் டம்பாச்சாரித்தனம் குறைந்துவருவது நன்கு தெரியும்.



மகாத்மா காந்தி

ராஜ்ய விஷயங்களுக்காக தண்டனையடைந்து சிறைச்சாலை செல்வது கௌரவக் குறைவல்ல என்று ஸ்தாபித்தவர் காந்தியேயாம். தென் ஆப்பிரிக்காவில் அவர் முதலில் போராடினபோது ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவரைப் பின்பற்றி சிறைச்சாலை சென்றதும், அவர் அப் போராட்டத்தை முழுதும் ஆத்ம சக்தியால் நடத்தி வெற்றி பெற்றதும் நம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

தற்காலத்துக் கல்வி முறைகளைப்பற்றி மகாத்மா காந்தியின் அபிப்பிராயம் குறிப்பிடத் தக்கது. இப்பொழுது நமது சிறுவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி (1) நம் நாட்டு நாகரிகத்திற்கும் மனப்பான்மைக்கும் ஏற்றதல்ல; அந்நிய நாட்டுப் பழக்க வழக்கங்களும் நாகரிகமுமே நமது சிறுவர் சிறுமிகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. (2) மனது, உடம்பு இவைகளின் அபிவிருத்தியைத் தேடினதாயில்லை. மூளைக்கு மாத்திரம் வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. (3) நம் நாட்டில் கற்பிக்கப்படும் கல்வியெல்லாம் அநேகமாய் அந்நிய பாஷையிலேயே கற்பிக்கப்படுகிறது. மேற்சொன்ன காரணங்களால் சிறுவர்கள் படித்து முடிந்ததும் அவர்களது மனப்பாங்கே வேறு மாதிரியாய்விடுகிறது. தங்கள் நாட்டு நாகரிகமெல்லாம் சுத்த அநாகரிகமென்றும், மூடநம்பிக்கைகளுள்ளதென்றும் அவர்கள் கருதத் தலைப்படுகிறார்கள். அவர்கள் படிப்பு முடிந்ததும் தாங்கள் வேலைசெய்வது கௌரவக் குறைவு என்று கருதத் தலைப்படுகிறார்கள். முற்றும் விவசாயத்தினால் பிழைக்கவேண்டிய இந்நாடு, இத்தகைய மனப்பான்மை யடைந்தால், இதைவிட வேறு கேடு இந்தியாவுக்கு வேண்டியதில்லை. மூன்றாவதாக, நம் நாட்டுத் தாய்ப் பாஷைகளும் அவைகளி லடங்கியுள்ள அரிய விஷயங்களும் காலக்கிரமத்தில் நசித்துவிடும். அவைகளை மறுபடியும் கௌரவ பதவிக்குக் கொண்டுவந்து அவற்றிலுள்ள ஸாராம்சங்களை யறிந்து முற்

சிவன் போனால் சீர்த்தியும் போமா ?

படுவது அவசியமாகும். குஜராத் தேசிய வித்யாபீடத்தில் மகாத்மா காந்தியின் கொள்கைகளை மேற்கொண்டு கல்வி கற்பிக்கப்படுகிறது. அங்கு மேற்சொன்ன விஷயங்கள் பின்பற்றப்பட்டு, சிறுவர்களுக்குச் சரியான தேசியக் கல்வி புகட்டப்பட்டுவருகிறது.

ஆகவே மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம் ஒரு பெரிய புத்தகம் போலாகிறது. அவரவர்க்கு வேண்டியதை அவரவர்கள் அதிலிருந்து வாசித்து, எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் அவரவர்க் கியன்றவாறு அவரைப் பின்பற்றி, தேச முன்னேற்றத்தைப் பலப்படுத்தலாம்.

அறுபது வயதாகியும் அவர் தம் உடம்பையும் சௌகரியத்தையும் கருதாது, வைத்தியர்களின் எச்சரிக்கைகளையும் லக்ஷியம் பண்ணாது தேசத்துக்காக உழைத்து வருகிறார். அவர் நீடூழி வாழ்க. அவருக்குத் தீர்க்காயுளையும், திடசரீரத்தையும் இறைவன் அருள வேண்டுகிறோம்.

மகாத்மா காந்தி

வாழ்க நீ ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாந்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி,
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா ! நீ வாழ்க ; வாழ்க!

அடிமை வாழ்வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்,
குடிமையுயர்வு, கல்வி,
ஞானமும் கூடியோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்.

—சுப்பிரமணிய பாரதி.

சந்திரனில் உயிர்வாழ்க்கை உண்டா ?

IS THE MOON INHABITED ?

[ஸ்ரீமான் P. N. அப்புஸாமி, பி. ஏ., பி. எல்.]

சந்திரனில் ஆள் உண்டா ? என்பது யாரும் எளிதாகக் கேட்கக்கூடிய கேள்வி. அதற்கு விடை சொல்லுவது மிகவும் கஷ்டம்.

பூமியைச்சுற்றி ஓடும் சந்திரன் ஓர் உப கிரகம். அது பூமியிலிருந்து 2,38,840 மைல் தூரத்துக்கப்பால் இருக்கிறது. இடைவிடாது பூமியைச் சுற்றிக்கொண்டே இருக்கிறது. அது உருண்டை வடிவமானது. அதன் குறுக்களவு 2,163 மைல் : அதன் அளவு, பூமியில் ஐம்பதில் ஒரு பங்கு எனினும், அதன் கனம் பூமியில் எண்பதில் ஒரு பங்கேயாகும்.

பூமியைச் சுற்றியுள்ள மற்ற கிரகங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சந்திரன் நம்மிடமிருந்து இருக்கும் தூரம் மிகச் சிறியதே யாயினும் நமது பூலோக அளவுகளைக் கொண்டு நோக்கும்போது அது வெகு தூரத்துக்கப்பால் இருக்கிறதென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே எவ்வளவு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடிகளைக் கொண்டு சந்திர மண்டலத்தை ஆராய்ந்தாலும் அங்குள்ள மலை கடல்போன்ற பெரிய பெரிய பொருள்கள் நமது கண்ணுக்கு ஒருவாறு புலனாகுமேயன்றி அவற்றைக் காட்டிலும் சிறிய பொருள்கள் நமது கண்ணுக்குக் கொஞ்சங்கூடத் தெரியமாட்டா.

ஆதலால் சந்திரனில் ஆள் உண்டா இல்லையா என்பதை வெறும் கண்ணாலாவது தூரதிருஷ்டிக் கண்ணாடிகளைக் கொண்டாவது நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளுவதற்கில்லை.

நாம் இதைப்பற்றிச் சொல்லப்போகும் விஷயங்கள் எல்லாம் அறிஞர் தூரதிருஷ்டிக் கண்ணாடி, சாயாதர்சினி (Spectroscope) போன்ற கருவிகளைக்கொண்டு அறிந்த விஷயங்களை ஒழுங்குபடுத்தி, அவற்றைத் தாம் பூமியின்கண் நேரில் கண்டறிந்த விஷயங்களோடு ஒப்பிட்டு, அவற்றினின்று ஊகித்தறிந்து

சுக்கு அறியாத கஷாயம் உண்டா ?

கொண்டவையே யாகும். அறிவு பெருகப் பெருக அவர் இவ்வாறு ஊகித்தறிந்து உண்மையெனக் கொண்ட விஷயங்கள் சரியா, சரியல்லவா என்பது தெளிவாகும்.

சந்திரனில் ஆள் உண்டா என்பது மிகவும் விநோதமான விஷயம்; அதுவும் தவிர, வான சாஸ்திரிகள் இந்த விஷயத்தை ஊன்றி ஆராய்வதற்கு மற்றும் ஒரு காரணம் உண்டு. அதாவது, நமது சூரிய மண்டலத்தைச் சேர்ந்த அநேக கிரகங்களுக்குச் சந்திரன்கள் இருக்கின்றன. நமது சந்திரனில் ஆள் இருந்தால் அந்தச் சந்திரன்களிலும் ஆள் இருக்கலாம் என்று ஒருவாறு கொள்ளலாகும்.

பூமிக்கும் சந்திரனுக்கும் அநேக ஒற்றுமைகள் உண்டு. வேற்றுமைகளும் பல உண்டு. உதாரணமாக, சந்திரனில் ஒரு நாள் என்பது நமது நாள்படி இருபத்தேழு நாளுக்குச் சிறிது மேற்பட்டது. அங்கே ஒரு வருஷம் என்று சொல்லத் தகுவது நமது பூமியின் ஒரு வருஷமேயாகும். ஆனல், சந்திர நாள் கணக்குப்படி பன்னிரண்டு நாளுக்குச் சிறிது அதிகங் கொண்டதே ஒரு வருஷம். அங்கே மாதம் என்பது கிடையாது.

பெரிய கிரகமாகிய பூமிக்கு ஒரு நாள் இருபத்து நான்கு மணி நேரமானல் சிறிய உபகிரகமாகிய சந்திரனுக்கு அதைவிடக் குறைந்ததல்லவோ இருக்கவேண்டும்? அளவின் கணக்குப்படி ஐம்பதில் ஒரு பங்கு அதாவது சற்றேறக் குறைய அரைமணி நேரமே ஒரு சந்திர நாளாக இருக்கவேண்டும். அப்படியில்லாமல் கிட்டத்தட்ட பூமியின் ஒரு மாதத்தை சந்திரனது ஒரு நாள் என்று சொல்லுவது எப்படி?

இது சரியானல் சந்திர வருஷம் அவ்வாறே அத்தனை மடங்கு அதிகப்படவேண்டும்; அப்படிக் கில்லாவிட்டால் நாம் முதலில் சொல்லிய படி ஐம்பது மடங்கு குறைவாக வாவது இருக்கவேண்டுமே; இரண்டுமில்லாதபடி பூமியின் வருஷமும் சந்திரனின் வருஷமும் ஒன்றாயிருப்பது எப்படி? இவை எல்லாம் சிறிதும் ஒழுங்காகவே தோன்றவில்லையே? என்று கேட்கலாம். அதற்கு விடை வருமாறு:— பூமியில் ஒரு நாள் என்பது முதன் முதலில் கடியாரத்தின் விநாடிகள் இத்தனை கொண்டது என்று ஏற்படுத்தப்படவில்லை. நாள் இத்தனை என்று ஏற்பட்ட பிறகே விநாடிகளைக்கொண்டு அதன் அளவு நிர்ணயிக்கப்பட்டது. ஒரு நாள் என்பது பூமி ஒரு தடவை தன்னைத்தானே சுற்றிக்கொள்ள ஆகும் நேரம். பூமியானது சற்றேறக் குறைய இருபத்து நான்கு மணி நேரத்தில் தன்னைத் தானே சுற்றிக்கொள்ளுகிறது.

ஆகையால் சந்திரனில் ஒரு நாள் என்பது சந்திரன் தன்னைத்தானே ஒரு தரம் சுற்றிக்கொள்ள எவ்வளவு நேரம் ஆகும் என்பதைப் பொறுத்தது. சந்திரன் ஒரு தடவை தன்னைத்தானே சுற்றிக்கொள்ள இதற்குச் சுழற்சி என்று பெயர். இருபத்தேழு நாளுக்குச் சிறிது அதிக நேரம் பிடிக்கிறது. ஆயினும் அதே காலத்தில் பூமியும் சூரியனைச் சுற்றி ஓடிக்கொண்டிருப்பதால் சந்திரன் மறுபடியும் அதே இடத்துக்கு வந்ததுபோல் காண இருபத்தொன்பதரை நாளாகிறது. இதுதான் ஒரு சந்திர நாள்.

பூமியானது சூரியனைச் சுற்றிவரும் காலத்தைக்கொண்டே வருஷம் ஏற்படுகிறது. பூமியைச் சுற்றிவரும் சந்திரன் அதனோடு கூடவே சென்று சூரியனைச்சுற்றி முடிப்பதால் சந்திர வருஷம் பூமி வருஷத்தின் அளவையே உடையதாகிறது. இக்காலம் சந்திர நாள் அளவுப்படி பன்னிரண்டு நாளுக்குச் சிறிதே மேற்பட்டது.

பூமியில் ஒரு மாதம் என்பது சந்திரன் பூமியை ஒருதரம் சுற்றுவதால் ஏற்பட்டபடியால், சந்திரனில் மாதம் என்பதற்குச் சமமானது கிடையாது.

பூமி இருபத்து மூன்று டிகிரீ சாய்ந்து சுழன்று சுற்றுவதால் உண்டாகும் பருவங்கள் ஒன்றரை டிகிரியே சாய்ந்து சுற்றும் சந்திரனில் கிடையா.

நமது பூமியைச்சுற்றி நானூறுமைல் வரை வாயு மண்டலமானது அதைப் போர்வைபோல் போர்த்திக்கொண்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே. சந்திரனைச்சுற்றி இவ்வளவுள்ள, இத் தன்மையான இத் திண்மை பொருந்திய வாயுமண்டலம் ஒன்று இல்லை என்பது உறுதி. வாயுமண்டலம் சந்திரனில் இல்லவே இல்லை என்று சிலர் கூறுகின்றனர். இது உண்மைதானா என்பது இன்னும் நிச்சய

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.

மாய்த் தெரியவில்லை. ஆனால் அநேகமாக அப்படியே இருக்கலாம். ஏனென்றால், எவ்வளவு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு சந்திர மண்டலத்தைப் பரிசோதித்தாலும் அங்கே மேகங்கள் காணப்படவில்லை. சந்திரன் மிகவும் மந்தமாகவே சுழன்று வருவதால் வியாழன், சனி இவற்றில்போல் அங்கு மேகங்கள் மேகலை போன்று பட்டையாகத் திரண்டு சேராது மூலைக்கு மூலை சிதறிக் கிடக்கவேண்டும். ஆயினும் எவ்வளவு சிதறி இருந்தபோதிலும் அங்கு மேகங்கள் இருந்தால் நமக்கு எவ்வகையாயினும் புலப்படாது போகாது.

அங்குள்ள மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள் ஆகிய பெரும் பகுதிகளின் ஓரங்களும் விளிம்புகளும் நமக்கும் அவற்றுக்கும் இடையிலுள்ள மேகமாகும். நீராவியின் ஊடாகவே காணப்பட்டால் அந் நீராவியின் கனத்துக்கும் அளவுக்கும் ஏற்ப, அவை ஒரே மாதிரியாகக் காணப்படாது, வெவ்வேறு வேளைகளில் வெவ்வேறான காட்சிகளைத்தரும். வெறும் காற்றாலாகிய வாயுமண்டலம் இருந்தாலும் இப்படியே நாம் சந்திர மண்டலத்தை எப்பொழுது கவனித்துப் பார்த்தாலும் இப்பேர்ப்பட்ட மாறுபாடான தோற்றங்கள் ஒன்றும் உண்டாவதில்லை; ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றது. ஆகையால் சந்திரனைச் சுற்றி வாயுமண்டலமாவது, நீராவி மண்டலமாவது இல்லை என்றுதான் ஊகிக்கவேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக, சந்திரனைச் சுற்றி வாயுமண்டலம் இருந்தால் சந்திரன் நக்ஷத்திரங்களை மறைக்கும்போது நாம் எளிதில் அறிந்துகொள்ளமுடியும். ஏனெனில் சந்திர பிம்பத்தால் மறைக்கப்படுமுன் சந்திரனைச் சுற்றிய வாயுமண்டலத்தின் வழி நக்ஷத்திரம் காணும்போது அதன் உருவம், இடம் எல்லாம் சிறிது மாறுபடும். சந்திரனைக் காட்டிலும் 3,500 மடங்கு அதிக தூரத்திலுள்ள சனியின் வாயுமண்டலத்தால் ஏற்படும் விகாரங்களைக்கூட இங்கிருந்து கவனிக்க முடிகிறது. அவ்வகையான மாறுபாடுகள் ஒன்றும் சந்திரனால் நக்ஷத்திரம் மறைக்கப்படும்போது ஏற்படாததால் சந்திரனைச்சுற்றி வாயுமண்டலம் ஒன்றுமே இல்லை என்று கூறமுடிகிறது.

மேலும் சந்திரபிம்பம் பிறையாகக் காணும்போது அதில் ஒளி மிகுந்த பாகம் இருண்ட பாகம் என்று இரு கூறாகக் காணப்படுகிறதேயன்றி அவை இரண்டுக்கு மிடையில் அரை இருளும், அரை ஒளியுமாக ஒரு பாகமும் காணப்படுவதில்லை. இதினின்றும் சந்திரனில் வாயுமண்டலம் இல்லை என்று நிச்சயமாகக் கூறலாம்.

இதெல்லாம் ஒரு கக்ஷி. சந்திரனில் வாயு மண்டலம் இருந்திருக்கவேண்டும். இப்பொழுதும் இருக்கிறது என்று சொல்வதற்கும் ஒன்றிரண்டு ஆதாரங்கள் உள.

சூரிய வமிசத்தைச் சேர்ந்த பூமியையும் பிற கிரகங்களையும் போலவே சந்திரனிலும் வாயு மண்டலம் இயல்பாகவே இருத்தல்வேண்டும் என்பது ஒன்று.

இரண்டாவது, சந்திரபிம்பத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் ஆராய்ந்ததில் அங்கே அதன் உடல் முழுவதும் அவிந்துபோன எரிமலைகளின் வாய்களாகவே காணப்படுவதால், ஒரு காலத்தில் அங்கே எரிமலைகள் விசேஷ சுறுசுறுப்பைப் பெற்றிருந்தனவென்பது தெளிவு. பொருள்கள் எரிய வேண்டுமாயின் காற்று அவசியம் என்பது யாவரும் அறிந்ததே. மேலும், எரிமலைகளின் வெடிப்பால் அநேக வகையான காற்றுகளும் அங்கு உண்டாக்கப்பட்டிருக்கவேண்டுமென்பதையும் மறுக்கமுடியாது.

வேறு சிலர் இவ்விரண்டு கொள்கைகளையும் தழுவி, இப்பொழுதும் சந்திரனில் வாயுமண்டலம் இருக்கிறது, அது நமக்குத் தோன்றாப் பின்புறத்தில் இழுக்கப்பட்டு, அப் பக்கத்தில் மட்டிலுமே இருக்கின்றது; நமக்குத் தோன்றும் முன் புறத்தில் காற்றுக் கிடையாது என்று கூறுகின்றனர்.

சந்திரனது உருவநடுவைக் காட்டிலும் அதனது கவர்ச்சி நடுவானது 33½ மைல் கிட்ட இருக்கிறது என்று புரொபஸர் ஹான்ஸென் கூறுகிறார். ஆதலால் சந்திரன் நல்ல உருண்டையன்று என்பதும் அதன் முன்புறத்தைவிட அதன் பின்புறம் அளவில் மாறுபட்டதென்பதும் விளங்கும். காற்றும் நீராவியும் அந்தப் பக்கத்துக்கே இழுத்துக் கொள்ளப்பட்டன என்றும், ஆதலால்தான் நமக்குத் தோன்றும் பக்கத்தில் வாயுமண்டலம் இருப்

சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி இடம் கொடுக்கமாட்டான்.

பதாகக் காட்டும் குறிகள் ஒன்றும் இல்லையென்றும் சிலர் சொல்லுகின்றனர்.

சந்திரனது நிறத்தைக் கவனித்து ஆராய்ந்தால் அதிலிருந்து சில விஷயங்களை அறியலாகும். சந்திரன் ஒரே வெண்மையாகக் காண்கிறது. நமது பூமியிலிருந்தே காற்றும் நீராவியும் முற்றிலும் அகற்றப்பட்டதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது பூமிக்கு வெளியிலிருந்து பார்ப்போருக்கு பூமி என்ன காட்சியைத்தரும்! சந்திரனிலிருந்து பார்த்தால் அது சூரியனது வெள்ளிய கிரணங்களில் மூழ்கிப் பளபளப்பாய்ப் பிரகாசிக்கும். ஆயினும் அது பார்வைக்கு நமது சந்திரனைப்போல இராது. பூமியின்கண் உள்ள பெரிய மணற்பாங்கான வனாந்திரங்கள் யாவும் ஒரே நிறத்தோடு தோன்றும். அதேமாதிரி மரம் செடி அதிகம் இல்லாத மிக அகன்ற சேற்றுப் பூமிகளும், பிரெய்ரீகளும் (Prairies) இன்னும் இவைபோன்ற பெரும் பரப்புக்களும் வெவ்வேறு நிறங்களோடு ஒளிரும். மாமடர்ந்த மலைகளும் காடுகளும் பசுமையாய்த் தோன்றும். மிகப் பெரிய கடல் வெளிகள் இவற்றினின்று வேறாக நன்கு தெரியும். வடக்கு முனையிலும் தெற்கு முனையிலும் உள்ள பனிப்போர்வை போர்த்த துருவங்களும், வெள்ளிபோன்ற பனிமுடி சூடிய மலைத் தொடரின் உச்சிகளும் சூரிய வெளிச்சத்தைக் கண்ணாடிபோல பிரதிபலித்து உருக்கி வார்த்த வெள்ளிபோலத் தோன்றும்.

சந்திரனும் அத்தகைய வெண்மை நிறத்தையே நமக்குக் காட்டுகிறது. ஆதலால் சந்திரன் பனியால் மூடப்பட்டது என்று ஊகிக்கலாமல்லவா ?.

மேலும் இவ்வாறு நமது பூமியிலுள்ள காற்றுக்களும், நெகிழ் பொருள்களும் முற்றிலும் உறைந்து பனிக்கட்டியாகி விட்டால் நமது பூமி எவ்வாறான காட்சியைத் தருமென்பதை ஆராய்வோம். இது நிகழக்கூடிய காரியமேயன்றி நடக்கக் கூடாத நிகழ்ச்சி அல்ல.

ஏனெனில் முன்னொரு காலத்தில் அகன்று பரந்த தீ ஆவி குளிரக் குளிரக் கட்டியாகிச் சூரியன் பூமி முதலிய உண்டாயின என்பது தூமபடல வாதம். ஆகவே பூமி சூட்டின் மிகுதியால் ஆவியாயிருந்து பிறகு சற்று சூடு குறைந்து உருகி நெகிழ்ந்த பொருள்களை உடையதாகி பின்பு சிறிது காலத்துக்கு முன்பாகத் தான் கட்டியாகி இருக்கிறதென்பதும், இப்பொழுதுங்கூட பூமியின் மேற்புறமட்டுமே கட்டியாகி இருக்கிறதென்பதும், உட்புறம் சூட்டின் மிகுதியால் நெகிழ்ந்தும் அழுத்தத்தின் மிகுதியால் கட்டியாகியும் இருக்கிறதென்பதும் அறிவாளர் துணிவு. ஆகவே காலம் செல்லச் செல்ல, பூமி இன்னும் சூட்டை இழந்து ஒரு காலத்தில் நன்றாகக் குளிர்ந்து போமென்பது திண்ணம். உட்புறம் இவ்வளவு சூடாயிருக்கும் இக்காலத்திலுமே வட தென் துருவங்களிரண்டிலும் உயர்ந்த மலைகளின் உச்சிகளிலும் நீர் உறைந்து பனிக்கட்டியாக இருக்குமளவு குளிர்ச்சி பூமியின்மீது காணப்படுகிறதென்பது கவனிக்கத்தக்கது.

பூமி வரவரக் குளிர்ந்து அதன்மீதுள்ள கடல்கள் உறைந்து பனிக்கட்டியால் மூடப்பட்டால் சந்திரனிலிருந்து அதைப் பார்ப்போருக்கு இப்பொழுது நமக்குச் சந்திரன் தோன்றுவதுபோலவே தோன்றும். அளவு மட்டும் பெரிதாயிருக்குமே தவிர, மற்றப்படி எல்லாம் ஒரே மாதிரிதான் காணும் என்று ஒளியைப் பற்றிச் சோதனை செய்த பௌதிக நூல் விற்பன்னர் கூறுகின்றனர்.

சந்திரன் இவ்வாறு குளிர்ந்து போய்விட்டதென்று வைத்துக்கொண்டால் மேலே கூறிய சில கஷ்டங்கள் நீங்கிவிடும். அப்போது அதிலுள்ள நீர் குளிர்ந்து உறைந்து கட்டியாகியும் காற்றுக் குளிர்ந்து நீராகியும் போய்விடுமாதலால் அதில் வாயுமண்டலமும் மேகங்களும் இல்லாது போகின்றன. அதனால்தான் சந்திரபிம்பம் எக்காலத்தும் தெளிவாகக் காண்கிறது. சந்திரனில் குளிர் இதைவிட அதிகமாகக்கூட இருந்தாலும் இருக்கலாம். பூமியில் இராசாயன நூல் விற்பன்னர் இதுவரை செய்த முயற்சிகளால் காற்றில் காணப்படும் ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், நைட்ரஜன் இவற்றை நீராகச் செய்ய முடிந்ததேயன்றி அவற்றை இன்னும் கட்டிப் பொருளாகக் குளிரச் செய்ய முடியவில்லை. ஒருகால் சந்திரனில் இவை கட்டிப் பொருளாய்க் குளிர்ந்து உறைந்து காணக்கூடும்.

மேற்கூறிய விஷயங்களின்று ஊகித்துக் கொள்ளக்கூடிய விஷயங்களே மற்றவை. காற்றுச் சிறிதும் இல்லாத இடத்தில் காற்றைச் சுவாசித்து வாழும் மனிதனைப்போன்ற பிராணிகள் வசிக்க முடியாதென்பது திண்ணம். பி

சாப்பிள்ளை பெற்றவளுக்குச் சந்தோஷம் வருமா ?

ஆடுதுறை சர்க்கார் நெல் உற்பத்தி பண்ணையினால் குடிகளுக்கு ஏற்பட்ட பிரயோசனங்கள்

BENEFITS OF GOVERNMENT FARM, ADUTURAI

[ஸ்ரீமான் K. வேங்கடராமன், எம்., ஏ.,
உதவிநெல் நிபுணர், ஆடுதுறை.]

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லா காவேரிப் பாசனமுள்ள நிலங்களில் 10 லக்ஷம் ஏகர்களுக்கு மேற்பட்ட விஸ்தீர்ணத்தில் சாகுபடியாகும் நெல் வகைகளின் மகசூலை விருத்தி செய்யும் பொருட்டு, ஆடுதுறையில் 1922 வருஷத்தில் சர்க்காரால் ஒருநெல் பொறுக்கு விதைப் பண்ணை ஸ்தாபிக்கப்பெற்றது. இப்பண்ணையின் நிலங்களின் வளமானது பெரும்பாலும் காவேரிப் பாசன நிலவளத்தை ஒத்திருக்கிறது. ஆகையினால் இப்பண்ணையில் பொறுக்கி எடுக்கப்படும் உயர்தர நெல் வகைகள் காவேரிப் பாசன நிலங்கள் எங்கும் நன்கு விளையக்கூடியவை. இப் பண்ணையில் 8 வருஷ காலமாக சர்க்கார் அதிகாரிகளின் முயற்சியினால் 9 வித உயர்தர நெல் வகைகள் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றன. இவ்வகைகளைச் சாகுபடி செய்வதினால் சாதாரண மகசூலை விட 100-க்கு 10 லிருந்து 25 பங்கு அதிகமான மாசூலைக் கொடுப்பதென்பது திண்ணம்.

இப்படி தஞ்சாவூர் காவேரிப் பாசன நிலங்கள் பூராவும் ஆடுதுறை சர்க்கார் அபிவிருத்தி பண்ணையில் கொடுக்கப்படுகிற உயர்தர நெல் விதைகளை சாகுபடி செய்வதினால் குறைந்தது ஏகருக்கு 10 அதிக மாசூல் (பத்து லக்ஷம் ஏகர்களுக்கு ரூ. 100 லக்ஷம் பொறுமான அதிக மாசூல்) ஏற்படுமென்பது நன்கு விளங்கும். அப்படி ஏற்படுவது எவ்விதமென்றால் மிராசுதார்கள் அனைவரும் பெரும்பாலும் ஒன்றுசேர்ந்து ஆடுதுறை உயர்தர நெல் வகைகளைப் பயிரிட்டு பரவச்செய்து, தத்தம் நேயர்களுக்கும் அதை அறிவிப்பதுயே யாகும். அவ்வண்ணம் மிராசுதார்கள் செய்வார்களேயானால் தாங்கள் நன்மை யடைவதுடன், தேச க்ஷேமத்தை அபிவிருத்தி செய்து, சர்க்கார் விவசாய இலாகாவுக்கு கீர்த்தியையும், பெருமையையும் அளிப்பார்கள்.

ஆடுதுறை உயர்தர நெல்களின் விவரங்கள்

அடியில் விவரித்திருக்கும் 9 தினுசு பொறுக்கு நெல் விதைகள் விவசாயத்திற்கு மிகச் சிலாக்கியமானவை. அநேக கிருஷிகர்கள் அவைகளைக் கொண்டாடி நல்ல அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆடுதுறை பொறுக்கு நெல் நெம்பர் 1:— தஞ்சை ஜில்லாவின் முக்கியமான சம்பா தினுசாகிய சிவப்பு சிறுமணியன் நெல்லினின்று பொறுக்கிய விதை இது. இது நாற்றுப் பரவுவதினின்று சுமார் ஆறு மாதத்தில் அறுவடைக்கு வந்துவிடுகிறது. பொறுக்கி எடுக்காத விதையினின்று கிடைக்கும் மாசூலைவிட, நூற்றுக்கு 16 பங்கு வீதம் அதிகக் கண்டுமுதல் கிடைக்கிறது. தஞ்சை ஜில்லாவில் முக்கியமாய் சீகாழி, மாயவரம், நாகப்பட்டணம் தாலூக்காகளில் இப் பொறுக்கு நெல் விஸ்தாரமாய்ப் பரவியிருக்கிறது.

ஆடுதுறை பொறுக்கு நெல் நெம்பர் 2:— தஞ்சை ஜில்லாவின் முக்கியமான சம்பா தினுசுகளில் மற்றொன்றாகிய வெள்ளைச் சிறுமணியன் நெல்லினின்று பொறுக்கிய விதை இது. மேற்சொன்ன ஆடுதுறை நெம்பர் ஒன்றாகிய சிவப்பு சிறுமணியன் பயிரைவிட 15 நாட்களுக்கு முந்தியே இப்பயிர் அறுவடையாகும். பொறுக்காத வெள்ளைச் சிறுமணியன் விதையினின்று கிடைக்கும் மாசூலைவிட நூற்றுக்கு 10 பங்கு வீதம் அதிகக் கண்டுமுதல் கிடைக்கும். இதை தஞ்சாவூர் ஜில்லா கீழ்ம்பாகத்தில் விசேஷமாய்ப் போடுகிறார்கள்.

ஆடுதுறை பொறுக்கு நெல் நெம்பர் 3:— இது குருவை தினுசினின்று பொறுக்கிய விதை. முக்கியமாய் பயிர் மூத்தும் விசேஷத்திற்காகவே இதைத் தேர்ந்தெடுத்தது. இப்பயிரின் வயது 90 நாட்கள்தான். இதற்கு எவ்விடத்திலும் நல்ல கிராக்கி இருக்கிறது. இத்தினுசு ஜனங்களுக்கு நிரம்பப் பிடித்திருக்கிறது என்பது இப்பயிரிருக்கும் நிலத்தின் விஸ்தீர்ணம் தஞ்சை ஜில்லாவிலும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலும் நாளுக்கு நாள் துரிதமாய்

அதிகரித்துக்கொண்டு வருவதினின்றே விளங்கும்.

ஆடுதுறை பொறுக்கு நெல் நெம்பர் 4 :— இதுவும் குருவை தினுசினின்றுதான் பொறுக்கி எடுத்தது. முக்கியமாய்ப் பொறுக்காத விதையினின்றும் கிடைக்கும் மாசூலை விட 100-க்கு 12 பங்கு வீதம் அதிக மாசூல் கிடைக்கிறது. இது ஜனங்களுக்கும் நன்றாய்ப் பிடித்திருக்கிறது. இதின் வயசு 105 நாள். இப் பொறுக்கு விதையின் குணமாகிய ஒவ்வொரு கதிரிலும் கொஞ்சம் பதரிருக்கும் சுபாவத்தை மாற்ற இன்னும் பொறுக்கு வேலை செய்யப்பட்டுவருகிறது.

ஆடுதுறை பொறுக்கு நெல் நெம்பர் 5 :— தஞ்சை ஜில்லாவின் முக்கிய சம்பா தினுசாகிய நெல்லூர் சம்பாவினின்று இவ்விதை தேர்ந்தெடுக்கப்பட்டது. இதின் வயசு சுமார் 185 நாளாகும். இது மெத்த நல்ல மாசூலைக் கொடுக்கக்கூடியது. பொறுக்காத விதையைவிட நூற்றுக்கு 25 பங்கு வீதம் அதிக மாசூல் கொடுக்கிறது. தஞ்சை ஜில்லாவில் மேல்பாக நஞ்சைப் பிரதேசங்களில் இது பரவிக்கொண்டு வருகிறது.

ஆடுதுறை பொறுக்கு நெல் நெம்பர் 6, ஆடுதுறை பொறுக்கு நெல், நெம்பர். 7. (சிவப்பு ஒட்டடனும் வெள்ளை ஒட்டடனும்):— நாற்று பாவினதினின்று சுமார் ஏழு மாதத்தில் முற்றக்கூடியதாகிய, ஒட்டடன் தினுசுகளினின்று இவ் விதைகள் பொறுக்கி விருத்தி செய்யப்பட்டன. ஊடு குருவை அதாவது ஒட்டடன் குருவையில் ஊடு கலப்பதற்குச் சிறந்த தினுசுகளென்று பரீக்ஷை பார்க்கப்பட்டிருக்கிறது. இவ்விதப் பயிர் செய்யுமிடங்களில் இவைகள் பரவுமென்று நம்பப்படுகிறது.

ஆடுதுறை பொருக்கு நெல் நெம்பர் 8 :— இத் தினுசானது வெள்ளைச் சிறுமணியன் நெல்லினின்று தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ்வகை நெல் ஆடுதுறை பொறுக்கு நெல் நெம்பர் 2 ஐயைக் காட்டிலும் 15 நாள் முன்னதாக அறுவடைக்கு வந்துவிடுகிறது. இவ்விளம் பயிரின் குணமே சிலாகிக்கத்தக்கது.

மேற்சொன்ன 8 வகை பொறுக்கு நெல் தினுசுகளைத் தவிர ஏ.ஈ.பி. (A.E.B.) 65 என்று சொல்லப்படும் நெல்லூர் சம்பா பொறுக்கு விதை யொன்று இருக்கிறது. இது ஆடுதுறை நெம்பர் 5 என்ற நெல்லூர் சம்பாவைப் போன்றது. ஆனால் தானியம் அதை விடச் சிறியது. திருச்சிராப்பள்ளி ஜில்லா குடித்தனக்காரர்கள் இவ் விதையைத்தான் விசேஷமாய் உபயோகிக்கிறார்கள். அவர்களுக்கு சிறிய நெல்தான் மிகப் பிடித்தம். மாசூல் அதிகரிப்பதின் பொருட்டு இதினின்று விதை பொறுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டுவருகிறது.

அன்பு

LOVE

[திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், நவசக்தி பத்திராசிரியர்.]

அன்பு என்பது காணக்கூடியதன்று. ஆனால் அஃது உணரக்கூடியது. அன்பு நிகழ்ச்சியளவில் உள்ளத்தினூறல் அவரவர் அநுபவத்தில் அறியக்கிடப்பது. அன்பு நிகழ்ச்சி எப்பொழுது உறுகிறது? அழுக்காறு வெகுளி முதலிய தீக்குணங்கள் ஒழிந்த வேளைகளில் அன்பு நிகழக் காண்கிறோம். அன்பு என்பது அழுக்காறு முதலிய தீக்குணச்செறிவில் நிகழாதது என்பது கவனிக்கத்தக்கது.

* * *

கடவுள் என்பது தத்துவங்கடந்த தனிப்பொருள் என்று சொல்லப்படுகிறது. தத்துவங்கள் என்பனயா? சுருங்கக்கூறின் அழுக்காறு அவா வெகுளி முதலியன தத்துவக் கூட்டங்களேயாம். இவைகளைக் கடந்து பொலிவது அன்பு என்று மேலே குறிக்கப்பட்டிருக்கிறது. எனவே அன்பு என்பதும் கடவுள் என்பதும் ஒன்றே என்பது பெறப்படுகிறது. இவ்வன்பு நிலைகண்ட பெரியோர்களும் அன்பே கடவுள் என்று அறிவுறுத்திப் போந்தார்கள்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
    புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
    யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
    திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
    இன்பமே யென்னுடை அன்பே

என்றார் நம் வாதவூரடிகள்.

* * * *

சாப்பிள்ளை பெற்றவளுக்குச் சந்தோஷம் வருமா ?

என்றும் அன்புளங்கொண்டு இவ்வுலகில் வாழ்வோர் கடவுளோடு கலந்து வாழ்பவராவர். மக்களிற் பெரும்பான்மையோர் அன்புளங் கொண்டு வாழ்கிறாரில்லை என்பது வெள்ளிடைமலை. ஓரோ ஒருபொழுது மக்களுள்ளத்தில் அன்பெழுந்து ஒடுங்குதலுண்டு. மற்ற வேளைகளில் அவர்கள் உள்ளத்தில் அழுக்காறோ வெகுளியோ வேறு எத்தீக்குணமோ குடிகொண்டிருக்கும். அவ்வேளையில் அன்புக் கடவுள் கோயில் கொள்வதில்லை.

* * *

உள்ளம் அன்பில் தோயும்போது விளையும் இன்ப நிலை அநுபவத்திலன்றோ உணரல் வேண்டும்? அன்புத் தெய்வம் மறைந்து வெகுளிப்பேயெழும்போது விளையுந் துன்ப நிலையைப்பற்றி விரித்துக் கூற வேண்டுவதில்லை. மக்களோ என்றும் இன்பத்தையே விரும்புகிறார்கள்; துன்பத்தை வெறுக்கிறார்கள். வாளா ஒன்றை விரும்புவதாலும் ஒன்றை வெறுப்பதாலும் ஒருபயனும் விளையாது. விருப்பத்தைச் செயலிற் கொணர்வதே அறிவுடைமை. இன்ப வாழ்வை விரும்புநர் அழுக்காறு வெகுளி முதலிய சேற்றில் விழாமல் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். அப் பாதுகாப்பு இன்ப வாழ்விற்கு அடிகோலுவதாகும்.

* * *

அழுக்காறு முதலிய தீமைகளினின்றும் பிழைத்துய்வதற்குரிய வழிகளென்னை? வழிகளை விரிக்கிற் பெருகும். கல்வி அறிவு ஒழுக்கம் உணவு சேர்க்கை முதலியன உய்யுநெறி காட்டும். இவைகளெல்லாவற்றிலும் சிறந்தவழியொன்றுளது. அஃது ஆண்டவனை அன்பு வடிவாக் கொண்டு உன்னுவது. அன்பாகிய கடவுளை உள்ளத்தில் அன்புக் கயிற்றால் பிணித்து உன்ன உன்ன அழுக்காறு முதலிய பேய்கள் ஓடியொழியும். ஆகவே மக்கள் அழுக்காறு முதலிய தீமைகளினின்றும் விடுதலையடைய வேண்டுமேல் அன்பாங் கடவுளை மனதிலிருத்திப் போற்றவேண்டுமென்க.

* * *

கடவுளை மக்கள் பலவாறு போற்றுகிறார்கள். எவர் எவ்வாறு போற்றினும் கடவுளை அன்பு என்னும் எண்ணத்தோடு போற்றுதல் வேண்டும். அன்பல்லாத ஒன்றைப் போற்றுதல் அழுக்காறு அவா முதலிய பேய்களைப் போற்றிப் பேய்க் குணங்களைப் பெறுவதாகும். அன்பே கடவுள் என்னும் எண்ணத்தின் திண்மை பின்னை அன்பு நிலையை எளிதிற்கூட்டும். ஆதலால் முதலில் அன்பே கடவுள் என்னும் எண்ணம் வேண்டற்பாலது. அவ்வெண்ணம் பின்னை மொழிவழி மெய்வழி வாழ்வாக அரும்பும்.

* * *

அன்பு உள்ளத்தில் பதியப்பதிய அழுக்காறு முதலியன தேய்ந்து தேய்ந்து மறையும். அம்மறைவிற் கேற்ற அளவு ஆன்மசக்தி எழும்பும். அவை முற்றும் மறைந்ததும் முழு ஆன்மசக்தி கூடும். ஆன்மசக்தி எனுந் தெய்வத் திருவருள் நிலை அன்பின் வழிகூடுவதென்பது பெரிதும் கருதற்பாலது. இவ்வுண்மைகண்ட மாணிக்க வாசக சுவாமிகள்,

அன்பினா லடியே னாவியோ டாக்கை
    ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
    யானிதற் கிலனோர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
    முத்தனே முடிவிலா முதலே
தென்பெருத் துறையாய் சிவபெரு மானே
    சீருடைச் சிவபுரத் தரைசே.

என்றருளிச் செய்திருத்தல் காண்க.

* * *

அன்பினால் குழைந்து குழைந்துருக ஆண்டவன் அருள் கூடக்கூட ஆண்டவன், "முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த" ஒரு பெருநிலை விளங்குதல் காண்க. இது குறித்து மீட்டும் மணிவாசகனார்,

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
    அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
    பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
    திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோருணர்வே
    யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே

எனவருந் திருப்பாட்டாலும் கடவுட்டன்மை அறிவுறித்தல் காண்க.

* * *

சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி இடம் கொடுக்கமாட்டான்.

அன்பே கடவுள் என்னும் உறுதிகொண்டு உருகும் உளத்தார்க்குக் கடவுள் எல்லா உயிர்க்கும் உயிராயிருப்பதும், அந்நிலே கூடப் பெற்றோரது பிறப்பறுதலும், குணங்களெலாங் கடந்த வெளியில் இன்பமயமாக இறைவன் விளங்குதலும், இவையனைய பிறவும் புலனாகு மென்க. இதனை மாணிக்கவாசகனார்,

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா உயிர்கட்கு முயிரே
எனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்தது வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கடா மில்லா இன்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

மக்கள் பிறவியில் பெறற்குரியது அன்புநிலை என்க. அந்நிலை கூடுமாறு மனிதன் தன் வாழ்வு நடாத்தல் வேண்டும்.

* * *

உலகியலில் வீழ்ந்து கிடப்போர் சிலவேளைகளைக் குறித்துக்கொண்டு அவ்வேளைகளில் அன்புக் கடவுளை உன்னுதல் வேண்டும். சிலர் மூன்றுவேளை ஆறுவேளை ஆண்டவனைத் தியானித்தலுண்டு. வைகறைத் துயிலெழும்பொழுதும், உறங்கப் போம்பொழுதும், உணவு கொள்ளும் முன்பும் அன்புப் பொருளை மனதிடையிருத்தி வழுத்துவது நலம். இப்பயிற்சி என்றும் அன்புக் கடவுளை நினைக்குமாறு செய்யும். அந்நினைவு மனிதனைத் தெய்வமாக்குமென்பதில் ஐயமில்லை. என்றும் எங்கும் ஆண்டவனை எண்ணும் நிலை கூடும்வரை தியானத்துக்கென ஒரு தனியிடம் வகுத்துக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பூசைக்கென ஒரு தனியிடமிருத்தல் வேண்டும். தொடக்கத்தில் அமைதியான ஓரிடம் வேண்டற்பாலது. தியான உணர்வு முதிர்ந்த பின்னர் எத்தகை முழுக்சுத்திடையும் கூச்சலிடையும் இறைவனையுன்னும் பேறு இயல்பாக அமையும்.

* * *

மனிதன் மாட்டுள்ள தீக்குணங்களைக் களையப் பலவழிப் புகுந்துழல்வதினும் அன்புக கடவுளை இடையறாது உன்னுவதால் அவைகளை எளிதில் களையக்கூடும்.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெனியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே பிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

என வருஉம் திருவாசகத்தை யோர்க.

* * *

அந்தோ! இந்நாள் வாழ்வைப்பற்றி நினைக்க எம் மனம் நடுக்குறுகிறது. இக்கொடிய வாழ்வில் சிக்குற்றுக் கிடக்கும் மனிதன் அன்புக் கடவுளை எங்ஙனே நினைப்பான்? அவன் பொருமை, போர், வாணிபம் முதலிய பேய்களையல்லவோ போற்றுகிறான்? இக்காலத்தில் அன்பு என்றால் கவனிப்போர் யாவர்? அன்புத் தொண்டு யாண்டும் வேண்டற்பாலது. சபாமதியில் ஒருவர் அன்பு அன்பு என்று அறை கூவுகிறார். செவி சாய்ப்போர் காணோம். பெருதற்கரிய மக்கள்வாழ்வு பொருமைக்கும் பிற தீச்செயலுக்கும் இரையாகிறதே! என் செய்வது? அன்பின்றி உரிமையாண்டிருந்து கிடைக்கும்? அன்புக் கடவுளை உளத்திற் போற்றி உயிர்களில் அவ்வன்பைக் கண்டால் ஒற்றுமையுணர்வு உண்டாகும். தேசமக்களுக்குள் பிளவையும் பிரிவையும் உண்டுபண்ணும் அரசியல் கட்சிகளால், தொண்டுகளால் நாடு பாழ்படுகிறது. இவ்வேளையில் அன்புப் பிரசாரம் அன்புத் தொண்டு முதலியன வேண்டற்பாலன.

ஏழைத் தொழும்பனேன்
எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன்
பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத
நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா
தோணோக்க மாடாமோ. —மணிவாசகம்.

தேசிங்கு ராஜன் :—சரித்திர ரூபமான வசனம். இது சதாவதானம் தெ. கிருஷ்ணசாமிப் பாவலரவர்கள் எழுதியது. இனிய, எளிய நடை. நான்கு சித்திரப் படங்களும் சேர்த்திருக்கிறது. சிறுவர், சிறுமியர் அவசியம் வாசிக்க வேண்டிய நூல். விலை அணா 10, சந்தாதாரர்க்கு மாத்திரம் அணா 8.

நூல்களைப் படித்தல்

STUDY OF LITERATURE

அறிவெல்லாம் இன்பம். அறியாமையெல்லாம் துன்பம். நாம் ஏதேனும் அரிய பெரிய விஷயம் ஒன்றைக் கண்டறியும்போது உண்டாகும் ஆனந்தமும், அறியவேண்டிய ஒன்றை அறிய முடியாதபோதும் ஒன்றை மறந்துவிட்டபோதும் உண்டாகும் கஷ்டமும் அநுபவத்தில் நாம் கண்டிருக்கின்றோம். இந்த அறிவு இரண்டு வகைப்படும். அவை இயற்கையறிவும் செயற்கை யறிவுமாம். மக்களுக்கு இயற்கையில் அறிவு இருப்பினும் அதனைச் சீர்படுத்துவதும் வளர்ப்பதும் செயற்கை யறிவேயாம். அதனையே கல்வி யறிவென்பர். கல்வி யறிவில்லாதபோது இயற்கை யறிவு சிறப்புறாது. அதனாலேயே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்,

> கல்லாதா னொட்பம் கழியநன் றாயினும்
> கொள்ளார் அறிவுடையார்

என்றார். இதன் கருத்து—படியாதவனது அறிவுடைமை நல்லதாகாது; அஃது ஒருகால் மிக நன்றாயிற்றாயினும் நீர்மேல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடாதலால் நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதிக்கமாட்டார் என்பதாம். சிறந்த நூல்களைக் கற்றல் மிக்க இன்பந் தருவதாகும். அதனாலேயே நாயனார்,

> தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந்தார்.

என்றும்,

> நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
> பண்புடையாளர் தொடர்பு

என்றும்,

கூறினார். இவற்றின் பொருள் :—(1) (கற்றறிந்தார்) தாம் இன்பமடைவதற்குக் காரணமாகிய கல்விக்கு உலகத்தவர் இன்பமடைதலால் அந்தச் சிறப்பை நோக்கி அவர்கள் பின்னும் அக் கல்வியையே விரும்புவர். (2) (நற்குணமுடைய மனிதர் தம்மில் செய்த சிநேகம் பழகுந்தோறும் இன்பஞ் செய்யும்) அது நூல்களின் பொருள் படிக்குந்தோறும் படிப்பவர்க்கு இன்பஞ் செய்தலை ஒக்கும் என்பதாம். நல்ல நூல்களைப் படியாது வீணாகக் கழிக்கும் நாள் நல்லோரிடமில்லை. இதனை நாலடியாரில்,

> கல்லாது போகிய நாளும் பெரியோர்கண்
> செல்லாது வைகியவைகலும்-ஒவ்வ
> கொடாஅ தொழிந்த பகலும், உரைப்பின்
> படா அவாம் பண்புடையார்கண் என்றார்.

அதாவது :— படிக்காமல் வீணே சென்ற தினமும் பெரியோரிடத்துப் போகாது கழிந்த தினமும், இயன்றவற்றைக் கொடாதொழிந்த தினமும் மேன்மக்களிடம் இல்லையென்பதாம். கற்பவர்கள் இவ்விடத்தில்லாமல் வெவ்வேறு தூர தேயங்களிலுள்ளவற்றையும் அதாவது எல்லாவிடத்துப் பொருள்களையும் இக்காலத்திலல்லாமல் வெவ்வேறு காலத்திலுள்ளவற்றையும் அதாவது எல்லாக் காலத்திலுள்ளவற்றையும் காணும் ஞானக் கண்ணுடைமையால் அவர்களையே கண்ணுடையவர் என்னவேண்டும். கல்லாதவர் அப்படிப்பட்ட ஞானக் கண்ணில்லாமல் நோய் முதலியவற்றால் துன்பஞ் செய்யும் ஊனக்கண்ணே யுடைமையால் அவர்களைப் புண்ணுடையவர் என்னவேண்டும். யாவரையும் அவர்கள் மகிழும்படி கலந்து அளவளாவி இனி நாம் இவரை எவ்வாறு எவ்விடத்தில் எப்பொழுது சேர்வோம் என்று நினைக்கும்படி கல்வியறிவுடையவர் நல்லொழுக்க முடையவராய் அப்பொழுதும் பிற்பொழுதும் இன்பந்தரும்படி பிரியமும் இதமுமான சொற்களைச் சொல்வர். அதனால் அவரிடத்தில் எல்லாரும் அன்புடையவராவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சிலர் சிறிதே கற்றுப் பெருமிதம் பாராட்டுகின்றார்கள். அஃது அமையாது; மேன்மேல் கற்கவேண்டும். மணலிலுள்ள சிறு குளம் தோண்டிய அளவாக நீர் சுரப்பது போல மனிதர்க்கு அறிவும் கற்ற அளவாகத்தான் வளரும். பேரறிவைச் சம்பாதிப்பதற்கு மிகுதியாகக் கற்கவேண்டும். அறியவேண்டியவைகளை யெல்லாம் அறிந்து நிரம்புவதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாமல் ஒருவன் கற்றார் சபையில் ஒன்றைச் சொல்லப்போனால் அவன் சொல்லும் வார்த்தையில், சொல்லும் சரியாயிராது, பொருளும் சரியாயிராது. ஆதலால் அவன் தனது பேதைமை வெளிப்பட்டு அவமான முறுவன்.

> கல்லாது நீண்ட வொருவன் உலகத்து
> நல்லறிவா ரிடைப்புக்கு—மெல்ல

இருப்பினும் நீரிருந்தற்றே இராஅது
உரைப்பினும் நாய்குரைத்தற்று

என்னும் நாலடியாராலும் கல்வி யறிவில்லாதவன் சபையில் இகழ்ச்சி யுறுவனென்பது விளங்கும். நூல்களைக் கல்லாத ஒருவன் தான் அறிவுடையவனென்று தன்னைத் தானே மதிக்கும் மதிப்பு தன்னை வந்து கண்ட அறிவுடையவனொருவனோடு தான் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லும் வரையிலுமே நிற்கும். சொன்னால் தனது அறியாமை வெளிப்பட்டு அம்மதிப்புப் போய்விடும். இதனாலேயே சிவப்பிரகாச சுவாமிகள் தமது நன்னெறியில்

எழுத்தறியார் கல்விப் பெருக்கமனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை

என்றார். கற்றவன் சொல்லும் சொல்லுக்குக் கல்லாதவன் ஏற்ற உத்தரஞ் சொல்ல அறியாது விழிப்பனென்க. விளைவுக்கு ஏலாதகளர் நிலமானது தானும் உழுதல் முதலிய தொழில்களால் விரும்பிச் சிறப்பிக்கப் படுதலன்றி உயிர்களுக்கும் உணவு முதலியவற்றை உதவாதது போல, கல்லாதவர் தாமும் கௌரவமழிந்து மற்றவர்க்கும் அறிவு முதலியவற்றை உதவார். ஆதலால் உலகத்தில் வடிவத்தோடு காணப்பட்டு 'இவர்கள் இல்லாதவரல்லர்; சீவித்திருக்கிறார்கள்' என்று சொல்லுமளவினராதலன்றிப் பயன் படும்படி சீவித்திருப்பவரல்லர். கல்லாதவர் பிறந்தும் பிறவாதவர் போல்வர் என்க. விஷயங்களை விரைவில் சூக்ஷமமாய்க் காணுதலும் மறவாமை முதலியனவும் அறிவிற்குச் சிறப்பாகும். அஃது இல்லாதவனுடைய உடம்பின் வளர்ச்சியும் அழகும் சிறப்பில்லாதனவாம். இதனாலேயே,

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு

என்றும்,

மயிர் வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர் வனப்பும் காதின் வனப்பும் செயிர் தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு

என்றும் கூறினர் புலவர். இதனால் கல்லாதவரது உடலழகு சுண்ணச் சாந்தினால் மாட்சிமைப்பட அலங்கரித்துச் செய்யப்பட்ட சித்திரப் பிரதிமையினுடைய எழுச்சியும் அழகும் போலும் என்பதில் ஆக்ஷேபமென்ன? செல்வத்தைச் சம்பாதித்தலும் காத்தலும் பயன் கொள்ளுதலும் அறிவுடையார்க்கே கூடுவன. ஆதலால் கற்றவரே செல்வத்திற்கு உரியவர்; அங்ஙனம் சம்பாதித்தல் முதலியன அறிவில்லாதவர்க்கு இயலாவாதலால் அவரே தரித்திரத்திற்கு உரியவரும் ஆவர். அங்ஙன மன்றி, கற்றார் தரித்திரராயினும் ஒழுக்கம் முதலிய எவ்வகையிலும் கெடார். கல்லாதவரோ செல்வமுடையவராயின் செருக்கு முதலியவற்றால் பல வகையிலும் கெடுவர். படித்தவர்கள் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவரானாலும் பெருமையுடையவரே. இவரது பெருமை யளவாகிய பெருமை, உயர்ந்த ஜாதியில் பிறந்த படியாதவர்க்கு இல்லை. திருவள்ளுவர் தாழ்ந்த ஜாதியராயினும் சிறிய புலவர் ஆதலால் உயர்ந்த ஜாதியில் பிறந்தும் அவ்வளவு கல்வி யறிவில்லாத சங்கப் புலவரினும் மேற்பட்டார். இதுபற்றியே சோமேசர் மொழி வெண்பாவில்,

மெய்த்த திருவள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலம்
துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசா! உயிர்த்தறி[யின்
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு

என்றார்.

கடை நிலத்தோராயினும் கற்றறிந்தோரைத்
தலை நிலத்து வைக்கப்படும் —நாலடியார்.
தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டானென் றிகழார் காணாய்
அவனதுணையா வாறு போயற்றே நூல் கற்ற
மகன் துணையா நல்ல கொளல் —நாலடியார்.
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பாலொருவனும் அவன் கண் படுமே
—புறநானூறு.
நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றிலனாயின் கீழிருப்பவனே —நறுந்தொகை.
எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்
—நறுந்தொகை.

ஆக்கு மறிவா னலது பிறப்பினால்
மீக்கொளுயர் விழிவு வேண்டற்க—நீக்கு

சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.

பவரார் ? அரவின் பருமணிகண் டென்றும்
கவரூர் கடலின் கடு —நன்னெறி

என்பனவும் ஜாதியினும் கல்வியே சிறப்பென் பதை வற்புறுத்தும். மிருகங்களுக்கும் மனிதர்க்கும் உணவு தூக்கம் அச்சம் ஆசை முதலியன பல பொதுப்பட்ட குணங்களாக இருப்பினும் மிருகங்களினும் மனிதர் சிறந்தவரென்பதற்கு ஏற்ற விவேக முதிர்ச்சி கல்வி கற்றவர்க்கே உள்ளது. நூல்களைக் கற்றலை பெரும்பான்மைத் தொழிலாக உடையவர் நம் நாட்டில் மிகச் சிலரே. மற்றை நாடுகளிலோ நூற்கல்வியே தொழிலாக வுடையவர் பலர் உள்ளார்.

நம் நாட்டில் இப்பொழுது உள்ள சிறிது கல்வியும், பெரும்பாலும் இராஜாங்கத்தார் பரீக்ஷைக்காகவே ஏற்பட்டதாயிருக்கிறது. எனவே நம் நாட்டுக் கல்வி ஜீவனார்த்தமாக ஏற்பட்ட கல்வியென்று சொல்வது தவறாகாது. படிக்கிறவர்களின் தொகை இங்கிலாந்து முதலிய பிற நாட்டில் அதிகமென்பதற்கு அந்நாட்டில் வெளிவரும் நூல்களின் தொகையும் அவை விரைவாக அடுத்தடுத்துப் பிரசுரமாவதும் சாக்ஷியாகும். ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய மஹாகவிகள் இயற்றிய நூல்கள் எத்தனைப் பதிப்புகள், எத்தனை யெத்தனை உருவங்களுடன் வெளிவந்துள்ளன. நம் நாட்டில் தெய்வப் புலவர்களாகிய கம்பர், திருவள்ளுவர் ஆதியோர் இயற்றிய அரிய பெரிய நூல்கள் எத்தனை பதிப்புகள் வெளிவந்துள்ளன? மிகவும் சொற்பமே யென்பதை வெளியிடவும் வேண்டுமோ? பிற நாட்டிலுள்ளார் சபைகளிலும் சங்கங்களிலும் கல்வி யறிவை நாடிப் பழகுவதில் ருசியுடைமைபோல நம் நாட்டவர்கள் உடையவர்களா? அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்குங்கால் நூல்களைப்பற்றியும், பத்திரிகைகளைப் பற்றியும் வெகுவாகப் பேசுவது வழக்கமென்று செவியுறுகிறோம். நம் நாட்டவர்களோ அங்ஙனமின்றி வீண் வார்த்தைகளையே பேசுவது வழக்கமாக விருக்கிறது. நம் நாட்டவர்கள் கல்வி யறிவை மிகுதியாகச் சம்பாதித்தாலொழியப் பெருஞ் செல்வமும் அதிகாரமும் மிகுதியாகப் பெறுரென்பது அறிவுடையவர் வார்த்தையாக இருக்கிறது. அருங்கலை விநோதர்களாலேயே நம் நாடு முற்காலத்தில் பெருமை பெற்றது. அத்தகைய பெருமையை மீண்டும் பெறவேண்டு மாயின், கல்வி யறிவைப் புருஷர்களும் ஸ்திரீகளும் மிகுதியாகச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்.

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும நாட்டும் உறுங்கலொன்று
உற்றழியும் கைகொடுக்கும் கல்வி இனுங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை
—நீதிநெறி விளக்கம்

எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண்ணுதே
—திருமந்திரம்.

வீட்டைச் சுற்றித் தோட்டம் ஏன்?

THE NEED FOR GARDENS AROUND HOUSES

[மிஸ். ஸி. கார்டன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.]

நாலா பங்கங்களிலும் தோட்டங்க ளிருப்பதே லக்ஷணமான வீடாகும். தோட்டம் ஏன் இருக்கவேண்டும் என்பதற்கு நாலு காரணங்கள் உண்டு. அவையாவன:—

(1) வீட்டின் எல்லாப் பக்கங்களுக்கும் தாராளமாய்ப் பரிசுத்த காற்றைக் கொடுக்கும். பரிசுத்த காற்று என்று சொல்லுவானேன்? நாம் வெளிவிடும் அசுத்த கரிமல வாயுவை சூரிய வெளிச்சத்தில் செடிகள் கிரகித்துக் கொண்டு மானிடர்களுக்கு அத்தியாவசியமான பிராணவாயுவைக் கொடுக்கின்றன.

2. மா நிழலில் ஏகாந்தமாய் உட்கார்ந்து இளைப்பாறலாம். மனதிற்கும் தேகத்திற்கும் உற்சாகத்தைக் கொடுக்கின்றன.

3. ஆகாராதிகளுக்கு உபயோகமான கறிகாய்களையும், பழவகைகளையும், புஷ்பங்களையும் கொடுக்கின்றன.

4. அப்போதைக்கப்போது சேரும் எருவை லாபமான வழியில் செடிகளுக்கு உபயோகிக்கக் காரணங்கள் ஏற்படுகின்றன.

இதற்காகத் தோட்டம் மிகப் பெரிதா யிருக்க வேண்டு மென்பதில்லை. சுமார் 25 அடி நீளம், 25 அடி அகலத்துக்கு மேல் பெரிதா யிருந்தாலும் செவ்வனே வைத்திருப்பது கஷ்டம். இந்த அளவுள்ள ஒரு பூமியை மட்டமாக்கி, அழகான பாத்திகள் கட்டி, நல்ல உர

சிறுக விதைத்தவன் சிறுக அறுப்பான்.

மிட்டு, விதைகளை நட்டு, தண்ணீர் பாய்ச்சி நன்ருய்க் கவனித்து வந்தால், சாதாரணமாக ஐந்தாறு பெயர்களுள்ள ஒரு குடும்பத்திற்கு வேண்டுமான காய்கறி, இலை வகைகளைக் கொடுக்கும். அதிக சிரமமில்லாமல் வளரக் கூடிய சில பூஞ்செடிகளையும், க்ரோடன்ஸ் (crotons) களையும், தொட்டிகளில் வளர்த்து அலங்காரமாக வைத்தால் கண்ணுக்கும் மனதுக்கும் ஆனந்தத்தைத் தரும். ஒரு விஷயம் இங்கு கவனிக்கத்தக்கது.

அதாவது, வேலி ஓரங்களில் வளரவிடும் செடி கொடிகளில் பாம்பு, பச்சை ஓணான் முதலிய விஷ ஜந்துக்கள் குடி புகும் வண்ணம் அவ்வளவு அடர்த்தியாக வளராதபடி அடிக்கடி கழித்துக்கொண்டே வரவேண்டும். மாட்டுத் தொழுவம், குதிரை லாயம், கோழிகள், வாத்துகள், புருக்கள் தங்குமிடங்களிலிருந்து பெருக்கி எடுக்கப்படும் குப்பைகள் சிறந்த எருவாகின்றன வென்ருலும், அவைகளை ஒரு ஆழமான பள்ளத்தில் கொட்டி, இரண்டு மூன்றங்குல கனம் மண்ணைப் பரப்பி மூடிவைக்க வேண்டும். யூனியன் கிராமங்களிலோ, முனிஸிபல் நகரங்களிலோ நாம் வசிக்கும் பக்ஷத்தில், நம் வீட்டுக் கழிவு வஸ்துக்களை எப்படி அப்புறப் படுத்தவேண்டிய தென்பதை அந்த அதிகாரிகள் கவனிப்பார்கள். பள்ளத்தில் கொட்டிய வஸ்துக்கள் நன்ருய் மக்கி மூன்று நான்குமாத காலத்திற்குள் சிறந்த உரமாகின்றன. ஆனல் இதனுடைய ஸாரம் பூமிக்குள் ஊறி கிணற்றுக்குள் வராதபடி வெகு தூரத்தில் குழி வெட்டவேண்டும். காகிதங்கள், சருகுகள், சிறு குச்சிகள் போன்ற குப்பைகளை அப்போதைக்கப்போது கொளுத்தி சாம்பலை எருவோடு சேர்க்கலாம். கும்பலாய்ச் சேமித்து வைக்கவே கூடாது. தோட்டக்காரனே அல்லது வீடு பெருக்குகிறவளோ, குப்பைகளையும், செத்தைகளையும் சோம்பேறித்தனத்தால் மூலைக்கு மூலை குவித்து அப்படியே விட்டுவிடுவார்கள். அது காற்றில் பறந்து வீட்டில் வசிப்பவருக்கு பலவிதத்தில் அருவெறுப்பை உண்டாக்கும். ஆகையால் வேலைக்காரர்களை தினந்தோறும் கவனித்து வருவதும் முக்கியமாகும்.

வீட்டின் பின்பக்கத்தில் கொஞ்ச தூரத்தில் காற்றேட்டமாயும், சூரிய வெளிச்சம் தாராளமாய்ப் படுவதாயுமுள்ள ஒரு பெரிய கக்கூஸ் இருக்க வேண்டியது அவசியமல்லவா? கக்கூஸ்தானே என்று அலக்ஷியம் செய்யலாகாது. வீடு எவ்வளவு சுத்தமா யிருக்கிறதோ அதற்கு மேலாகவே கக்கூஸும் இருக்கும்படி அடிக்கடி சுண்ணும்பு அடித்து, தார் தடவி, கிருமிகளைக் கொல்லும் மருந்துகளை அடுத்தடுத்து உபயோகித்தல் புத்திசாலித்தனமாம். குறைந்த பக்ஷம் தினம் இரு வேளையாவது கக்கூஸைத் துலக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

குதிரை, பசு, ஆடு, கோழி, வாத்து புருக்களை வைத்திருப்பவர்கள் அவைகளைக் கட்டும் இடங்களையும் வெகு சுத்தமாயிருக்கும்படி கவனிப்பார்களாக. இல்லையேல் பல வியாதிகள் உண்டாகி பிராணிகள் மடிய நேரிடும். லாயத்தின் கூரை ஒழுக்கில்லாமலும், காற்றும் வெளிச்சமும் விசேஷமாய் உலவும்படியாயும், தரையில் சந்து பொந்துகள் இல்லாமல் நன்ருய்ச் சிமிட்டி போட்டும், கோமயங்கள் வடிவதற்கு ஒரு புறம் சரிவாயும், அது தங்குவதற்கு வெளியே ஒரு பள்ளமும் இருக்கவேண்டும். அப்பள்ளத்தில் அடிக்கடி மண்ணைக்கொட்டி, மறுபடியும் வாரி தூரத்தில் கொண்டுபோய்க் கொட்டி விடலாம். மறுபடியும் கோமயம் வந்து தங்குவதற்கு இடமுண்டாகும்.

தண்ணீர் சுத்தமா யிருக்கவேண்டு மென்பதைப்போல நாம் உபயோகிக்கும் பாலும் வெகு சுத்தமானதா யிருக்கப் பாருங்கள். பசு கட்டும் தொழுவத்தின் கூரை, சுவர்கள், தரை, பசுகட்டும் கயிறு, தண்ணீர்த் தொட்டி, துடைப்பம், முறம் முதலிய எல்லாம் அழுக்கில்லாதிருக்கவும். பசு, கன்று, பால் கறக்கும் பாத்திரம், அளக்கும் ஆழாக்கு, பால் கறப்பவனுடைய கை, தேகம், உடை எல்லாம் எப்பொழுதும் மிகச் சுத்தமா யிருக்கும்படி கவனிக்கவும். எக்காரணத்தினுலும் பாலோடு, தும்பு தூசியும், அழுக்கும் சம்பந்தப்படவே கூடாது.

ஒருவருடைய கொல்லைப் பக்கம் மிகச் சிறியது என்ருலும், அதிலும் ஒரு சாண் இடத்தைக்கூட வீணக்காமல் எந்தெந்த விதத்தில் உபயோகிக்கலாமோ, அந்தந்த விதத்தில் சுத்தமாய் உபயோகித்து ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொரு இடமும், அந்தந்த இடத்தில் அந்தந்த வஸ்துவும் இருக்கும்படி நாம் தினசரி பழகி அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

விவேகநாதன் அல்லது சரஸ்வதீபீடத்தின் மர்மம்

VIVEKANATHAN — A THRILLING DETECTIVE NOVEL

[ஸ்ரீமான் A. ராமசாமி முதலியார், பி. ஏ.]

XI

சரஸ்வதீ பீடத்தின் மர்மம்

(308-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடந்த அத்தியாயத்திற் கூறியுள்ள சம்பவங்கள் நிகழ்ந்த மறுநாட் காலை விவேகநாதன் வைகறையில் துயில் நீத்தெழுந்து காலைக் கடனை முடித்துக்கொண்டு, தூய்மையான தண்ணீரில் ஸ்நானம் செய்து, வெள்ளை வஸ்திரந்தரித்து உத்தூளிதமாக நீறணிந்து, சடாக்ஷர மந்திரத்தை முறையுடன் ஜபித்து, ஷண்முகநாதனைத் துதி செய்துகொண்டு வசந்த விலாஸத்தின் தலைவாயிலண்டை நின்றிருந்த சமயம் இரமணீ விலாஸத்தினின்றும் துரிதமாக ஓடிவந்த வண்டி முன் முற்றத்தில் நின்றது. முன்பக்கத்தில் உட்கார்ந்திருந்த குமான் கீழே குதித்தான். பின்புறமிருந்து சுப்பிரமணிய பிள்ளை, அமராவதி யம்மாள், வள்ளியம்மை ஆகிய மூவரும் இறங்கினார்கள்.

வாயிலின் முன் நின்றுகொண்டிருந்த விவேகநாதனைக் கண்ட அமராவதி யம்மாள், "என்ன தம்பீ! பொய்யைச் சொல்லி என்னை ஏமாற்றி வந்துவிட்டீர்கள்!" என்றுரைக்க, "நான் அவவிதமொன்றுஞ் செய்யவில்லை. எல்லாம் தங்களுடைய அருமையான மருமகப் பிள்ளையின் வேலைதான்" என்று விவேகநாதன் பதிற்பகர அமராவதியம்மாள் சிரித்துக்கொண்டே வீட்டிற்குட் சென்றாள். வள்ளியம்மையும் மலர்ந்த முகத்துடன் நாணத்தால் தலைகுனிந்த வண்ணம் தன் தாயைப் பின்பற்றிப் போனாள்.

விவேகநாதன் :—இவ்வனிதா ரத்தினத்தைத் தங்களுக்கென்று பிரமன் படைத்திருக்கும்பொழுது ஆதிமூலம் பிள்ளைக்கும் மற்றொருவருக்கும் எவ்விதம் கிட்டும்? அவர்களெல்லாம் இறக்கவேண்டியதுதான்.

சுப்பிரமணிய பிள்ளை :—என்னுடைய நன்மையை யுத்தேசித்து அவர்கள் மரிக்கவேண்டுமென விரும்பமாட்டேன். நிற்க, நண்ப! தங்கள்மீது எனக்கு மிகவும் கோபமுண்டாகிறது. ஏதேதோ சங்கதிகளைப் பேசிக் காலத்தைக் கடத்துகிறீர்களே யன்றி இங்கு நடந்துள்ள விஷயங்களின் மர்மத்தைத் தெரிவிக்க மாட்டேனென்கின்றீர். இரவு முழுதும் நித்திரை யென்பது கிஞ்சிற்றேனும் வரவில்லை. நேற்று நிகழ்ந்த விஷயங்கள் ஒன்றன்பின்னொன்றாக என் மனதில் தோன்றிக்கொண்டேயிருந்தன. சில சமயங்களில் எல்லாம் நன்றாக விளங்குகின்ற மாதிரி தோன்றுகின்றன. ஆனால் மறு நிமிஷம் அவைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது சிக்கலாக முடிகின்றன. ஆகலின் தயைகூர்ந்து தங்களுடைய ஆராய்ச்சியின் முடிவைக் கூறி என் மனதிலுள்ள பாரத்தைக் குறைக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

விவேக :—தாங்கள் எதை ஆராய்ந்து பார்த்தீர்களென்பதையும் அது எவ்விதம் முடிந்ததென்பதையும் தெரிவியுங்கள், பார்ப்போம்.

சுப்பிர :—நான் தங்களைக் கேட்டால் தாங்கள் என்னைக் கேட்கிறீர்கள். மறுப்பது முறையன்றாதலின் தெரிவிக்கிறேன், கேளுங்கள். சதானந்தனின் அபிப்பிராயத்திற் கிணங்கக் கொலை நடந்திருந்தால் ஆதிமூலம் பிள்ளை பிறர் காணாமல் மிகவும் எளிதாகத் தன்னை மறைத்துக்கொள்ளச் சுரங்கவழியும் நிலவறையும் இருக்கின்றன. அவர் அவ்விடமிருந்து எதற்காக, எப்பொழுது எந்தவழியாக வெளிக்கிளம்பி எங்குச் சென்றிருப்பாரென்பது புரிவதாயில்லை. மேலும் நிலவறையின் துணையிருப்பதினால் சுந்தரம் பிள்ளையின் பிரேதத்தை அவ்விடத்திற் கொண்டுபோய் மறைத்து வைத்துவிட்டு ஆதிமூலம் பிள்ளை வெளியில் வந்து, தன் தமையன் எவ்விடத்திற்கோ சென்றிருப்பதாகச் சொல்லி எல்லோரையும் நம்பும்படி செய்து இரவில் ஒருவருக்குந் தெரியாமல் சவத்தை அடக்கம் செய்திருக்கலாம். அவ்விதமில்லாமல் ஆதிமூலம் பிள்ளையே ஓடிப்போயிருக்கிறார். இதற்குத் தகுந்த முகாந்திரமிருந்திருக்க வேண்டும். அது என்னவென்பதும் விளங்கவில்லை. தவிர, தாங்கள் முன்

சமர்த்துள்ள சேவகனுக்குப் புல்லும் ஆயுதமாம்.

உரைத்துள்ள சந்தேகங்களும் நிவர்த்தியாகாம லிருக்கின்றன. இவ்வாறாக எதையும் நிர்ணயித்துக் கூறமுடியாம லிருப்பதினால் தாங்கள்தான் ஒவ்வொன்றையும் விளக்கி யுரைக்க வேண்டும்.

விவே :— இன்ஸ்பெக்டர் முதலியவர்களை இங்கு வருமாறு கேட்டுக்கொண் டிருக்கிறேனாதலின் அவர்கள் வந்தவுடன் தங்களுடைய சந்தேகங்களைப் போக்கித் தங்கள் மனக்கவலையை அறவே நீக்கிவிடுகிறேன். ஏதோ வண்டி வரும் சப்தம் கேட்கிறது. குமாரா! நீ சென்று யாருடைய வண்டியென்று பார்.

எனக் கட்டளையிட, குமான் புறப்படுமுன் வண்டியொன்று வேகமாய் ஓடிவந்து அவ்விடத்தில் நின்றது. அதினின்றும், போலீஸ் இன்ஸ்பெக்டர் அமிர்தநாயகம், சப் இன்ஸ்பெக்டர் நெல்லையப்ப முதலியார், அருணாசலம் பிள்ளை, டாக்டர் ஆகிய இவர்கள் இறங்கினார்கள். உடனே விவேகநாதனும் சுப்பிரமணிய பிள்ளையும் விரைந்து சென்று அவர்களுக்குக் காலை வந்தனங் கூறிக் கைலாகு கொடுத்து அழைத்துவந்து கூடத்திற் போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்த்தித் தாங்களும் உட்கார்ந்துகொண்டனர்.

விவே :—பிரேதத்தைப் பரிசோதித் திருப்பீர்களென்று நம்புகிறேன் என டாக்டரைப் பார்த்துக் கேட்டார்.

டாக்டர் :—ஆம் தங்களிடம் சொன்னவாறு அதை முடித்த பிறகுதான் இங்கு வந்திருக்கிறேன்.

விவே :—அப் பரிசோதனையிலிருந்து தாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயமென்ன?

டாக் :—கத்தியால் குத்தப்பட்டது மாத்திரமன்றி விஷமும் கொடுக்கப்பட் டிருக்கிறதென்பதும், முதலில் விஷத்தை உட்செலுத்தி அது தன் வேலையைச் செய்து அதனால் மரணமேற்படுவதற்குச் சற்று முன்னதாகக் குத்தியிருக்க வேண்டுமென்பதும், எவர் இப் பாப கிருத்தியத்தைச் செய்தாரோ அவர், தான் கைக்கொண்டிருக்கும் காரியத்தை எதிரிக்குத் தெரியாமலும் சுலபமாகவும் முடிக்கக்கருதி விஷத்தைக் கொடுத்திருக்கவேண்டு மென்பதும், விஷங்கொடுத்த விஷயத்தைப் பிறர் சந்தேகிக்காம லிருக்கும் பொருட்டுக் கத்தியாற் குத்தியிருக்க வேண்டுமென்பதும் என் முடிவான அபிப்பிராயமாகும்.

விவே :—பேஷ்! தங்களுடைய புத்திக் கூர்மை பெரிதும் பாராட்டத் தக்கதேயாகும். வைத்தியப் பரீக்ஷையில் தேறி, பட்டமும் பெற்று உண்மையின்னதென்பதைத் தெரிந்துகொள்ள முடியாத போலி டாக்டர்கள் தற்காலத்தில் ஆயிரக்கணக்கா யிருக்க, தாங்கள் உண்மையை யுணர்ந்துகொண்டது மாத்திரமன்றி அதன் அந்தரங்கத்தையும் அறிந்துகொண்டதானது தங்களுடைய பேரறிவின் உன்னதத் தன்மையை நன்கு காண்பிக்கின்றது. தங்களைப்போன்ற டாக்டர்கள் நாட்டிலிருப்பது சாலவும் நன்மையைப் பயப்பதாகும்.

அருணாசலம் பிள்ளை :—ஐயா! விவேகநாதரே! தாங்களும் டாக்டரவர்களும் வார்த்தையாடிக் கொண்டிருக்கிறதைக் கேட்கக் கேட்க எனக்கு மேன்மேலும் ஆச்சரிய முண்டாகிறது. விஷயம் தெரியாமல் உளறிக்கொட்டுகிறீர்களென்றே நினைக்கிறேன். இவ்விதம் நான் சொல்லுகிறதைப்பற்றி நீங்களிருவரும் கோபித்துக்கொள்ளக் கூடாது. சுந்தரம் பிள்ளையைப் பெரிய முட்டாளென்று கருதியிருக்கிறீர்கள்போலும்! அவரென்ன சிறு குழந்தையா? பிறர் தனக்கு விஷமிடுவது அவருக்குத் தெரியாமற் போய்விடுமா? அல்லது அவரை மயக்கி விஷத்தை அவருக்கு ஊட்டி விட்டார்களா? அன்றி, அவரே வேண்டுமென்று விஷத்தைச் சாப்பிட்டுவிட்டாரா? டாக்டரவர்கள் உரைப்பதும், அதனைத் தாங்கள் சந்தோஷமாக ஆமோதிப்பதும் பெரிய விந்தையாகத் தோன்றுகின்றன.

விவே :—ஐயா! நேற்று இவ்வில்லத்தில் நடந்த கொலையானது விந்தையினும் விந்தையானதாதலின் அதைப்பற்றிப் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் பிறர்க்கு விந்தையாகத் தோன்றுவது விந்தையாகாது.

இன்ஸ்பெக்டர் :— விவேகநாதரே! அஃதென்ன? அவ்வறை பூட்டப்பட்டு அதற்கு இரண்டு போலீஸ்காரரைக் காவல் வைத்திருக்கிறீர்களே? அவ்விடத்தில் ஏதேனும் விசேடமுண்டோ?

நெல்லையப்ப முதலியார் :— இன்னுமொரு சங்கதியைக் கவனித்தீர்களா? நாமெல்லோரும் இங்குவந்து இவ்வளவு நேரமாகியும் எதற்கும் தானென்று முன்னால் வந்து நிற்கக்கூடிய சதானந்தர் இன்னும் வராமலிருப்பது ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?

விவே :—அப்புண்ணிய புருஷர்தான் அவ்வறையில் அடைக்கப்பட் டிருக்கிறார்.

என்றுரைத்து, கான்ஸ்டேபிள்களுக்குச் சைகை செய்தார். அவர்களிருவரும் உடனே கதவைத்திறந்து அறையினுள் வாடிய முகத்துடன் உட்கார்ந்திருந்த சதானந்தனை யழைத்துக் கொண்டுவந்து விவேகநாதனின் முன்பு நிறுத்தினார்கள்.

அரு :—இதுவென்ன அநியாயம்! இவருக்கு ஏன் விலங்குகள் மாட்டப்பட் டிருக்கின்றன? சுந்தரம் பிள்ளைக்கு விஷங் கொடுத்தவர் இவர்தானென்று சொல்லப்போகிறீர்களோ?

விவே :—என்ன சதானந்தரே! தாங்கள் மௌனமா யிருப்பதின் காரணம் இன்னதெனப் புரியவில்லை. விஷயங்களை யெல்லாம் ஆதியோடந்தமாக, நடந்ததை நடந்தவாறே சொல்லி விடுகிறீர்களா? அல்லது நான் ஆராய்ந்தறிந்ததைத் தெரிவிக்கலாமா?

சதா :—விவேகநாதரே! உம்மை ஒரு பெருந்தகையோரெனக் கருதி உமக்கு மரியாதை கொடுத்து அழைத்து வந்ததுமன்றி நீர் இங்குத் தங்கிப்போவதற்கும் அனுமதி கொடுத்ததின் கைம்மாறாக எனக்கு விலங்குகள் மாட்டி யிருக்கின்றீர். இப்பொழுது ஏதோ நடந்ததைச் சொல்லும்படி கேட்கின்றீர். எதைக் குறித்து என்ன சொல்லச் சொல்லுகிறீர் என்பது எனக்கு விளங்கவில்லை. மேலும், நீர் என்னை எதைப்பற்றியும் கேட்க உமக்கு எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. அவ்விதம் நீர் கேட்டு அதற்குத் தகுந்த மறுமொழி பகர நான் எவ்வகையிலும் கடமைப்பட்டவனுமன்று. நிற்க, நான் சொல்லாவிடில் தம்முடைய ஆராய்ச்சியின் முடிவைத் தெரிவிப்பதாகக் கூறுகின்றீர். பூச்சிகாட்டிக் குழந்தையைப் பயமுறுத்துவது போலன்றோ விருக்கிறது தங்களுடைய வார்த்தை. பாமர சனங்களை ஏமாற்றிப் பொய்யை நிஜமாக்கியதின் காரணமாகத் துப்பறிவதில் மிகவும் சமர்த்தரென்னும் போலிக் கீர்த்தியைப் பெற்றிருப்பதாலுண்டாய செருக்கால் நன்மை தீமைகளைக் கவனியாது இறுமாந்திருக்கிறீர் போலும். உம்முடைய புகழ் இன்றுடன் அழிந்ததென்பதை மனதில் உறுதியாக வைத்துக் கொள்வீராக. என்னுடைய கரங்களிலிருக்கும் விலங்குகள் தங்களுடைய கைகளுக்குக் கூடிய சீக்கிரத்தில் வரப்போகின்றனவென்பதையும் நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளும்.

சுப்பி :—சதானந்தா! தகாத வார்த்தைகளைப் பேசி வீணாக உன்னை அவமானத்திற்குள்ளாக்கிக் கொள்ளாதே.

சதா :—அவரவர்களுடைய மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள அவரவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதற்கு வக்கீலினுடைய புத்திமதி வேண்டியதில்லை.

அரு :— இன்ஸ்பெக்ட ரவர்களிடமிருந்து சில விஷயங்களைக் கேட்டறிய விரும்புகிறேன். சதானந்தருக்கு விலங்குகள் மாட்டப்பட்டு இவ்விடத்தில் அவரை இவ்வாறு நிறுத்தி வைக்கவேண்டிய காரணமென்ன? இவர்கள் மூவரும் இவ்விதம் வம்புவளர்க்க வேண்டிய அவசியத்தையும் காணோம். இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு தாங்கள் வாளாவிருப்பதும் விந்தையாக விருக்கிறது. எனக்குத் தெரிந்தமட்டில் இவ்வீட்டிற்குச் சதானந்தர் சர்வாதிகாரி யென்றே கருதுகிறேன். அவருக்கு இஷ்டமில்லையெனின் நாமெல்லோரும் இவ்விடமிருந்து புறப்பட வேண்டியதுதான். அவ்விதமிருக்க அவருக்கு விலங்கிட்டிருப்பதைப் பார்க்க ஏதோ பெரும் பிழை நேரிட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கிறேன்.

இன்ஸ் :— நமது நண்பர் விவேகநாதர் அகாரணமாக இக்காரியத்தைச் செய்திருக்க மாட்டாரென உறுதியாக நம்புகிறேன்.

விவேக :—(அருணாசலம் பிள்ளையைப் பார்த்து) ஐயா! இங்கு நிகழ்ந்திருக்கும் விஷயங்களின் அந்தரங்கத்தைத் தாங்கள் ஒரு சிறிதும் அறியீராதலின் இத்தகைப சந்தேகத்தைத் தாங்கள் கொள்வது இயல்பேயாகும். நேற்றுவரை சதானந்தரை நான் பார்த்ததில்லை.

அவருக்கும் எனக்கும் எவ்விதமான மனஸ்தாபமாவது விரோதமாவது கிடையாது. அவ்வாறிருக்க, முக்கியமான முகாந்திரமின்றி நான் அவருக்கு விலங்கிடும்படி செய்திருக்க மாட்டேனென்பதைத் தாங்களே தெரிந்துகொண்டிருக்கவேண்டும். அவ்விதமின்றித் தங்களுடைய சந்தேகத்தை வெளியிட்டு விட்டீர்கள். இதை முன்னமேயே நான் எதிர்பார்த்து இதனை நிவர்த்தித்திருக்க வேண்டியது என் பொறுப்பெனினும், சதானந்தர் நிகழ்ந்தவற்றை முற்றிலும் உரைத்துத் தன்னுடைய குற்றத்தை யொத்துக்கொள்வாரென்ற நம்பிக்கையினாற் சும்மாவிருந்தேன். ஆனால் இப்பொழுது சதானந்தர் ஒன்றுந் தெரியாதவர்போல் அபிநயிக்கிறபடியால் சங்கதிகளை நான் சொல்லவேண்டியவனா யிருக்கிறேன். இன்னுமொரு நொடியில் தங்களுடைய சந்தேகத்தைப் போக்கி என்னுடைய செய்கையைத் தாங்கள் சரியென ஆமோதிக்குமாறும் செய்கிறேன். சதானந்தரே? நான் தெரிவிக்கவேண்டுமா? அல்லது தாங்களே உரைத்துவிடுகிறீர்களா?

சதா:—விவேகநாதரே! தம்முடைய பிதற்றல்கள் என்னிடத்தில் வேண்டாம். தங்கள் மனதிலிருப்பதைத் தாராளமாய் வெளியிடலாம்.

விவே:—என் வாயார இவைகளை என் சொல்லவேண்டுமென்று யோசித்தேன். தாங்கள் வற்புறுத்துகிறதால் நான் தெரிவிக்க வேண்டியது அத்தியாவசியகமாகும். (எல்லோரையும் பார்த்து) நண்பர்காள்! சரஸ்வதீ பீடமென்னும் இவ்வறையில் நேற்றுப் பிற்பகல் கொலையுண்டவரும் தற்சமயம் ஆஸ்பத்திரியில் பிரேதமாகக் கிடப்பவருமான அன்னவருக்கு விஷமிட்டவரும், அவர் மரிக்கும் தருணம் அவரைக் கத்தியாற் குத்திக் கீழே வீழ்த்தினவரும் இதோ இங்கமர்ந்திருக்கும் சதானந்தரா னென்பதை அறிந்துகொள்வீர்களாக.

என்றுரைத்ததைக் கேட்டவுடன், போலீஸ் இன்ஸ்பெக்டரைத் தவிர அவ்விடமமர்ந்திருந்த மற்றவர்களும், அருகில் நின்றிருந்த பணியாட்களும், இவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு அறையினுட்கார்ந்திருந்த மாதர்களும் ஆச்சரியத்தாற் பீடிக்கப்பட்டு, திறந்த வாயை மூடாமலும், கண்களை யிமைக்காமலும் பதுமைகளே போற் சலனமின்றிச் சற்று நேரம் உணர்வற்றிருந்தனர். கொஞ்ச நேரத்திற்குப் பின் அருணாசலம் பிள்ளை இன்ஸ்பெக்டர்பால் திரும்பி, "தங்களுடைய நண்பருக்குச் சற்றே சித்த சுவாதீனக் குறைவு ஏற்பட்டிருக்குமோவென ஐயுறுகிறேன்" என்று தெரிவித்தனர்.

டாக்:—நானும் அத்தகைய சந்தேகத்தையே கொள்ளுகிறேன்.

இன்:—விவேகநாதருடன் நெருங்கிப் பழகாம லிருந்திருப்பின் தங்களுக்குண்டா யிருக்கும் சந்தேகம் எனக்கும் ஏற்பட்டிருக்கும். இதற்குமுன் பல தடவைகளில் எனக்குச் சகாயமா யிருந்து முற்றிலும் மர்மமான பல்வேறு விஷயங்களின் அந்தரங்கங்களை எளிதில் கண்டறிந்து வெளியிட்டிருக்கிறா ராதலின், நான் தங்களைப்போல் நினைப்பதற்கில்லை. எனினும் விவேகநாதர் இனிக் காலதாமதமின்றி விஷயத்தை விவரித்துரைத்து நம்முடைய சந்தேகங்களை யறவே நீக்குவாரென நம்புகிறேன்.

விவே:—உலகம் ஒருவிதம் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது அதைத் தவறென்று கூறி அதற்கு முற்றும் எதிரிடையான விஷயங்களைச் சொல்லக்கூடிய என்னை நீங்களெல்லோரும் பைத்தியக்காரனெனக் கருதுவது ஆச்சரியமன்று. இவ்விஷயங்களை நான் எவ்விதந் தெரிந்து கொண்டேன் என்பதை விவரித்துரைக்கிறேன்; தயவுசெய்து கேளுங்கள். நான் இத்தோட்டத்தின் சிறப்பைப் பற்றிப் பன்முறை கேள்விப்பட்டிருக்கிறேனெனினும், இதற்குமுன் இக் காட்சியைக் கண்கூடாகக் கண்டு களித்ததில்லை. நேற்றுப் பிற்பகல் இங்கு வந்தேன். நான் இத்தோட்டத்தில் நுழைந்தபின் சதானந்தரைத் தான் முதன் முதலிற் சந்தித்தேன். அவர் அச்சமயம் தென்றல் விலாஸத்திலிருந்து இவ்விடத்திற்கு அதி விரைவாக வந்துகொண்டிருந்தார். சங்கரனென்பவனும் அவருடனிருந்தான். அவ்விதம் அவரை நான் சந்தித்த பொழுது அவருடைய முகம் விகாரமுற்றுக் காணப்பட்டது. அஃது இயற்கைக்கு முற்றும் முரணாக விருந்தது. திடீரென்று ஓர் அந்நியனை நாமெதிர்பாராத விடத்தில் சந்திப்போமாயின் நமக்கு ஆச்சரிய முண்டாகுமே யன்

றித் திகிலுண்டாகக் காரணமில்லை. சதானந்தர் என்னை இத் தோட்டத்தில் பார்த்தபொழுது திகலடைந்ததாக எனக்குத் தோன்றிற்று. ஆனால் இத்தகைய முக மாறுபாட்டில் ஏதேனும் விசேஷமிருக்கலாமென்ற சந்தேகம் அச்சமயம் என் மனதில் உதிக்கவில்லையெனினும், சதானந்தரின் முகம் என்னைப் பார்த்தவுடன் விகாரமுற்றதென்னும் சங்கதி மாத்திரம் என் மனதில் ஓரிருப்பிடத்தைத் தேடிக்கொண்டது. பிறகு சதானந்தரும் சங்கரனும், நானுமாக இவ்விடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தபொழுது, ஆதிமூலம் பிள்ளையின் தமையனார் சற்று நேரத்திற்கு முன்னர் மதுரையிலிருந்து வந்திருப்பதாகச் சதானந்தர் சொன்னதைக் கேட்க எனக்கு ஆச்சரியமுண்டாயிற்று. ஏனெனில் நானும் நேற்று மதுரையிலிருந்துதான் வந்தேன் நான் வந்த புகைவண்டித்தொடரில்தான் அவரும் வந்திருக்க வேண்டும். நெல்லிக்குப்பம் ஸ்டேஷனில் வண்டி வந்துநின்றதும் அதை விட்டிறங்கிப் பிரயாணச் சீட்டைக் கொடுத்துவிட்டு வெளியில்வந்து குதிரை வண்டியொன்றையமர்த்திக் கொண்டு நேராக இங்கு வந்தேன். வழியில் எவரையும் சந்திக்கவில்லை. நான் வந்த வண்டித் தொடரிலேயே அவரும் மதுரையிலிருந்து வந்திருப்பாரெனின், எனக்கு முன்னதாக அவர் இங்கு வந்திருக்க முடியாது. ஆனால் நான் வந்ததற்குச் சற்றுமுன் அவர் வந்ததாகச் சதானந்தர் தெரிவித்தார். ஆதலின் இவ் விஷயமானது என்னையுமறியாமலே எனக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று. எனினும் அச்சமயம் இதை ஒரு விசேட சமாசாரமாக நான் கருதவில்லை. இங்கு நாங்கள் மூவரும் வந்தவுடன் சிவகாமி ஆச்சி தெரிவித்த சங்கதியைச் செவியுற்றதும் குமாரனையும் எங்களுடன் அழைத்துக் கொண்டு அவ்வறையண்டைபோய் கதவைத் திறந்து பார்க்கவே, சுந்தரம் பிள்ளை கொலையுண்டு கிடக்கிறாரெனச் சங்கரன் கதறிக்கொண்டு கூவினான். பிறகு நாங்களெல்லோரும் உள்ளே சென்று பார்த்தபொழுது அறையின் மத்தியில் ஒருவர் கத்தியாற் குத்தப்பட்டிறந்து கிடந்ததும், பின்புறக் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்ததும் எங்களுக்குப் புலனாயின. கொஞ்ச நேரத்திற்குமுன் ஆதிமூலம் பிள்ளையும் சுந்தரம் பிள்ளையும் அங்கு கோபமாக வார்த்தையாடிக்கொண்டிருந்தார்களென்பதை அறிந்திருந்ததினால் எவரும் எளிதில் சந்தேகிக்கக் கூடியவாறு ஆதிமூலம் பிள்ளை தன் தமையனைக் கொன்றுவிட்டுப் பின்புற வாயிலின் வழியாக எங்கேனும் ஓடி மறைந்திருத்தலியலுமென வெண்ணி அதைப் பரிசோதிக்க விரும்பி அக்கதவின் வழியாக வெளியிற் சென்று பார்த்தேன். அங்கு வண்டிகள் சென்ற அடையாளமும் குதிரைகளின் அடிச்சுவடுமிருந்தனவேயன்றி மனிதரின் காலடிச் சுவடு காணப்படவில்லை. மேலும், சிவகாமி ஆச்சி தெரிவித்ததிலிருந்து நாங்கள் இவ் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தபொழுதுதான் இக்கொலை நடந்திருக்க வேண்டுமென்பதும் தோற்றம். அப்பொழுது, சரஸ்வதி பீடத்திலிருந்து எவரேனும் பின்புறக் கதவின் வழியாக வெளியில் வந்து சுவரோரஞ் செல்லாமல் நேர் பாட்டையிற் போயிருந்தால் எங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இத் தோட்டத்தின் காட்சிகளில் விருப்புற்று அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு வந்தேனாதலின் எவரேனும் அவ்விதம் வெளிக் கிளம்பிப் பாதையிற் போயிருந்தால் என் கண்களுக்குக் கண்டிப்பாய் யகப்பட்டிருக்க வேண்டும். ஆதலின் அவ்வழிச் சென்றிருக்க மாட்டாரென உணர்ந்து கொண்டு சுவரோரத்தில் கவனித்துப் பார்த்தேன். அங்கும் மணற்றரையாயிருப்பதினால் எவரேனும் அவ்வழியாகச் சென்றிருந்தால் காலடிகள் நன்றாகப் பதிந்திருக்க வேண்டும. ஆனால் அங்கு அடிச் சுவடுகளொன்றும் காணப்படவில்லை. ஆகவே ஆதிமூலம் பிள்ளை அவ்வறையின் பின்புறக் கதவின் வழியாக வெளியேறவில்லையென்பதை நிச்சயித்துக்கொண்டு மறுபடியும் அறைக்குள் வந்த சமயம் அங்கு போடப்பட்டிருக்கும் மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த வெள்ளிக் கிண்ணமொன்றைச் சதானந்தர் குமாரனுக்கும் சங்கரனுக்கும் தெரியாமல் எடுத்துத் தன் சட்டைப்பையில் மறைத்து வைத்துக்கொண்டு என் பக்கம் திரும்ப நான் அதைக் கவனியாதவன் போல் வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டேன். பிறகு விசாரித்ததில் ஆதிமூலம் பிள்ளை தற்கால நாகரிகத்திற் கேற்ப பிற்பகலில் காப்பியைக் குடியாமல் முன்னதாகவே நன்றாகக் காய்ச்சி வைக்கப்பட்டிருக்கும்

சனத்தோடு சனம் சேரும், சந்தனத்தோடு கர்ப்பூரம் சேரும்.

சுத்தமான பசும்பாலை அக்கிண்ணத்தில் வார்த்துச் சாப்பிடுவது வழக்கமென்பதைத் தெரிந்துகொண்டேன். ஆனால் சதானந்தர் அச்சமயம் அக்கிண்ணத்தை எடுத்து மறைத்து வைத்ததில் ஏதேனும் விசேஷ அந்தரங்க மிருக்க வேண்டுமென நினைத்து அது யாதாயிருக்கலாமென யோசித்துக்கொண்டே பிரேதத்தண்டை வந்து அதை நன்றாக உற்றுப்பார்த்தபொழுது சதானந்தரின் செய்கைக்குரிய காரணம் ஒருவாறு புலப்பட்டது. சாதாரணமாக ஒருவன கத்தியாற் குத்தப்பட்டு அந்த விடத்திலேயே விழுந்து மரிப்பானாயின் அங்கு இரத்தவெள்ளம் பெருகிக் கிடக்கும். இப்பிரேத மிருந்தவிடத்திற் சிந்திக்கிடந்த உதிரமோ மிகவும் சொஞ்சம். தேகத்திற் பலவிடங்களிற் குத்துக்காயங்கள் காணப்பட்ட போதிலும் அவைகளி லொன்றேனும் உயிரை வாங்கக்கூடிய அளவு அவ்வளவு பெரியதாயில்லை. மேலும் அக் காயங்களெல்லாம் ஏககாலத்தில் ஏற்பட்டிருந்தாலுங் கூட அவைகள் சுந்தரம் பிள்ளையைப் போன்ற ஓராடவனின் உயிரை அந்த க்ஷணத்தில் போக்கக்கூடிய அவ்வளவு அபாயகரமானவையும் அன்று. தவிரவும், கொலையுண்டவர் குத்தப்பட்டபொழுது எத்தகைய சப்தத்தையும் உண்டாக்கவில்லை யென்பது சிவகாமி ஆச்சி முதலியவர்கள் சொன்னதிலிருந்து நன்கு விளங்குகின்றது. அவர் அரவமிட்டிருந்தால் முற்றத்திலிருந்தோர்க்குக் கண்டிப்பாகக் கேட்டிருக்கும். ஆகவே அவர் குத்தப்பட்டபொழுது ஒருவிதமான சப்தமும் செய்யவில்லை யென்பது பெறப்படும். அவ்வறையில் அச்சமயம் வைக்கப்பட்டிருந்த சாமான்களின் ஒழுங்கையும் சிங்காரத்தையும் பார்த்தபொழுது கொல்லப்பட்டவருக்கும் கொலை செய்தவருக்கும் கைகலந்த சண்டை ஏற்படவில்லை யென்பதும் கரதலாமலகம் போல் தெற்றென விளங்கிற்று. அவ்விதமாயின் கொலையுண்டவர் தன்னைத் தன் எதிரி கத்தியாற் குத்தினபொழுது தனக்குண்டாக வல்ல ஆபத்தினின்றும் தன்னைத் தானே காத்துக்கொள்ள முயலவில்லை யென்றும். தனக்குச்சகாயமாக எவரையும் அழைக்கவில்லையென்றும் கொள்ளவேண்டும். அல்லது அவர் குத்தப்பட்டபொழுது தன்னுணர்வற்றுக் கிடந்திருப்பாரென நினைக்கவேண்டும். இவ்விரண்டிற் பின்னதே மனித இயற்கைக்கு முற்றிலும் பொருத்தமாகும். இன்னோரன்ன விஷயங்களையும் சதானந்தர் கிண்ணத்தை யெடுத்து மறைத்ததையும் ஒன்றுசேர்த்து ஆராய்ந்து பார்த்தபொழுது கொலையுண்டவருக்கு விஷங் கொடுத்திருக்க வேண்டுமெனவும், அதற்கு இக் கிண்ணம் உபயோகிக்கப்பட் டிருக்கலாமெனவும், இச்சங்கதி சதானந்தருக்குத் தெரிந்திருக்க வேண்டுமெனவும், இந்த இரகசியத்தைப் பிறர் அறிந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு அக்கிண்ணத்தை மறைத்திருப்பாரெனவும் சந்தேகித்தேன். பிறகு அக்கிண்ணத்தைப்பற்றி விசாரித்தறிந்தபொழுது நான் கொண்ட சந்தேகத்தை நிச்சயித்துக் கொண்டேன். இப்பொழுது டாக்டரவர்கள் சொன்னதிலிருந்து என் சந்தேகம் உறுதியாயிற்று. குமரனையும் சங்கரனையும் அனுப்பி விட்டபின் சதானந்தரும் நானும் இங்குவந் துட்கார்ந்ததும், அவருக்குத் தன் பெரிய தந்தை இறந்ததைப்பற்றி விசனமும், தன் சிறிய தந்தைக்கு உண்டாயிருக்கும் ஆபத்தைக் குறித்துக் கவற்சியும், தன் குடும்பத்திற் கேற்பட்டிருக்கும் அபகீர்த்தியை முன்னிட்டுக் கவலையும் கொஞ்சமேனும் தோன்றாமலிருப்பதின் காரணத்தை யொருவாறு அறிந்துகொள்ள விரும்பி, இச்சம்பவத்தால் அவருடைய அந்தஸ்துக் கேற்பட்டுள்ள விசேஷ மாறுதலைக் குறித்துப் பேசி அவருடைய அத்தையான அமராவதியம்மாளின் புதல்வி வள்ளியம்மையைப் பற்றிச் சம்பாஷித்த பொழுது அவருடைய வாயினின்றும் வெளிக்கிளம்பின வார்த்தைகள் என்னுடைய சந்தேகத்தை முற்றும் நீக்கிவிட்டன. ஆதிமூலம் பிள்ளை வள்ளியம்மையை விவாகம் செய்துகொள்ள விரும்பி நேற்று நிச்சய தாம்பூலம் வழங்க எண்ணியிருந்ததாகவும், அது தெய்வத்திற்கே சம்மதமில்லாமல் இவ்வாறு முடிந்து விட்டதென்றும் சொன்னார். இதிலிருந்து சதானந்தர் வள்ளியம்மையை மணந்துகொள்ள வெண்ணி யிருந்தாரென்பதும், ஆதிமூலம் பிள்ளை அம்மங்கையைக் கல்யாணம் செய்து கொள்வதென்னும் விஷயம் அவருக்குத் தீராக்கவலையை யுண்டாக்கி யிருக்குமென்பதும், அம்மணவினை நடைபெறாமல் தடைபடுவதற்கான மார்க்கத்தைத் தேடுவதில் முயற்சி செய்திருப்பாரென்பதும், அவரை

யறிந்தோ அறியாமலோ இச்சம்பவம் நிகழ்ந்ததால் அவர் பெரிதும் உவகை பூத்திருக்கிறாரென்பதும் வெள்ளிடை மலையன்னத் தெளிவாக விளங்கின. நான் முற்கூறின கிண்ணத்தின் சமாசாரமானது இக்கொலைக்கும் சதானந்தருக்கும் ஏதோ சப்பந்தமிருக்கவேண்டுமென்னும் எண்ணத்தை என் மனதில் முளைக்கச்செய்ய, மனித வியற்கைக்கு இலக்கணமாகச் சுந்தரம் பிள்ளை கொலையுண்டதைப் பற்றியும் ஆதிமூலம் பிள்ளை காணாமற் போனதைப் பற்றியும் பேசவேண்டியதிருக்க, வள்ளியம்மையைக் குறித்துச் சம்பாஷித்ததானது அவ்வெண்ணத்தை வேரூன்றச் செய்தது. ஆகவே இக்கொலையின் மர்மத்தைச் சதானந்தர் மூலமாகத் தெரிந்துகொள்ளக் கூடுமென்பதை நிச்சயித்துக்கொண்டு அவருடைய செய்கைகளையும் வார்த்தைகளையும் கவனிக்க வாரம்பித்தேன். சப் இன்ஸ்பெக்டரவர்கள் இங்கு வந்து விசாரித்தபொழுது சதானந்தர் கொடுத்த வாக்குமூலம் எனக்குச் சொல்லொணா ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று. அவர் தனக்குத் தெரிந்ததை மறைத்துப் பேசுகிறாரென்பதும், என்ன காரணத்தினாலோ பிறருக்குத் தப்பான வழியைக் காண்பிக்கிறாரென்பதும் எனக்கு நன்கு விளங்கின. போலீஸ் விசாரணையிலிருந்து மர்மம் ஏதேனும் வெளியாகக் கூடுமென நான் நினைத்திருக்க அது என் மனதிற் பல சந்தேகங்களை உண்டாக்கிவிட்டது. சங்கரனைச் சதானந்தர் அச்சமயம் மலர் பறிக்க அனுப்பவேண்டிய அவசியமென்ன? சுந்தரம் பிள்ளை வந்ததைச் சதானந்தர் கவனிக்காமலிருந்திருப்பாரா? சரஸ்வதிபீடத்திலிருப்பதாகச் சொன்ன ஆதிமூலம் பிள்ளை தன் தமையன் வந்த சமயம் அவ்விடத்திற் காணப்படாததற்குக் காரணமென்ன? குமரன் எதற்காக ஆலமரத்தண்டை அனுப்பப்பட்டான்? ஆதிமூலம் பிள்ளை மேன்மாடிக்கு எப்பொழுது எதற்காகச் சென்றிருப்பார்? அவ்விதஞ் சென்றது சதானந்தருக்குத் தெரியாமலிருந்திருக்குமா? கூஜாவையும் தட்டையும் எடுப்பதற்காக சதானந்தர் தென்றல் விலாஸத்திற்குச் செல்லவேண்டிய அவசியமென்ன? இக்காரியத்தைச் செய்யக் குமரனை ஏன் அனுப்பியிருக்கக் கூடாது? சதானந்தர் வெளியிற் சென்றது முற்றத்திலிருந்தோர்க்கு எவ்விதம் தெரியாமற் போயிற்று? சரஸ்வதீ பீடத்தின் கதவு எதற்காக மூடப்பட்டிருந்தது? அதை அவ்விதம் மூடினது யார்? ஆதிமூலம் பிள்ளை கோபித்துப் பேசவேண்டிய காரணமென்ன? கொலை செய்தபின் அவர் எந்த வழியாக வெளியிற் சென்றார்? என்னு மின்னோரன்ன கேள்விகளும் பிறவும் என் மனதில் ஒன்றன்பின்னொன்றாக உதித்தன. இவைகளிலொவ்வொன்றும் ஓரோர் அந்தரங்கத்தை யுடையதாக எனக்குத் தோன்றிற்று. அவ்வந்தரங்கம் யாதா யிருக்குமென்பதை ஆராய்ந்தறிய முயற்சித்தபோது ஆரம்பத்திலேயே இரண்டு விஷயங்கள் விகசிதமாக விளங்கின. சரஸ்வதீபீடத்திலிருந்தோர் பேசினது வெளியிலிருப்போர்க்குக் கேட்கக் கூடாதென்னும் காரணத்தால் அவ்வறை மூடப்படவில்லையென்பது தேற்றம். ஏனெனில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தது கூடத்தின் வழியாகச் சென்ற பாக்கியத்தின் காதில் விழுந்த விஷயத்தை யறிவோம். ஆதலின் சரஸ்வதி பீடத்தில் நடந்த செய்கைகளையோ அன்றி வேறெதையோ பிறர் பார்க்கக் கூடாதென்னும் காரணத்தால்தான் கதவு சாத்தப்பட்டிருந்ததென்பது வெளிப்படை. ஆனால் அவ்விதம் பார்க்கக்கூடாத அத்தகைய விஷயம் இன்னதென்று புரியவில்லை. ஆதிமூலம் பிள்ளை சரஸ்வதிபீடத்தின் பின்புறக் கதவு வழியாக வெளியிற் போயிருக்க மாட்டாரென்பதை விளக்கிக் காட்டினேன். அம்மாதிரியே அவர் தலைவாயில் மார்க்கமாகவும் செல்லவில்லை யென்பது நிச்சயம் இவ்வழியாக அவர் ஓடி மறைந்திருந்தால் பின்புறக் கதவைத் திறந்துவைக்கவும், முன்வாயிற் கதவை மூடிவிடவும் அவசியமில்லை. மேலும் அச்சமயம் சமையற் கட்டில் எவருமில்லை யென்பது ஆதிமூலம் பிள்ளைக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. சாதாரணமாகக் குற்றம் செய்த ஒருவன் பிறர் கண்களுக்குப் புலப்படாமல் ஓடி மறையவேண்டுமென்னும் எண்ணங்கொண்டால் யாவரும் செல்லக் கூடிய நேர்வழியைப் பற்றுவதில்லை யென்பது அனுபவவாயிலா யறிந்ததோருண்மையாகும். இக்காரணங்களால் ஆதிமூலம் பிள்ளை சரஸ்வதி பீடத்தின் தலைவாயில் வழியாகவும் செல்லவில்லை யென்பதை உறுதியாக வுரைக்கலாம். இவ்வகையில் முக்கியமாகக் கவனிக்கற்பால

தான இன்னுமொரு விஷயமிருக்கிறது. சம்பவங்களின் நிகழ்ச்சிக் காலங்களை ஒன்றுபடுத்திப் பார்க்கும்பொழுது ஆதிமூலம் பிள்ளை கொலை செய்துவிட்டு வெளியேறினதும், குமரன் ஆலமரத்தண்டை சென்று திரும்பிவந்ததும் ஏககாலத்தில் நடந்திருக்க வேண்டுமென்பது பெறப்படும். அப்பொழுது ஆதிமூலம் பிள்ளை எவ்வழியாகவேனும் சரஸ்வதி பீடத்தை விட்டுக் கிளம்பி இவ்வீட்டின் பின்புறமாகப்போய் தோட்டத்தைக் கடந்திருந்தால் குமரன் அதைக் கண்டிப்பாகப் பார்த்திருப்பான். ஆனால், அவ்வழியாக ஒருவரும் செல்லவில்லையென்று அவன் உறுதியாகச் சொல்லுகிறான். அவன் பொய் உரைக்கவேண்டிய அவசியமில்லை. இவ்வீட்டின் தலைவாயில் வழியாக ஆதிமூலம் பிள்ளை வந்திருந்தால் முற்றத்திலிருந்தவர்களுக்குக் கண்டிப்பாகத் தெரிந்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் பார்க்கவில்லையென்பதை அறிகிறோம். இத்தியாதி காரணங்களினால் ஆதிமூலம் பிள்ளை இவ்வீட்டை விட்டு வெளி யேறவில்லையென்பதும், சரஸ்வதி பீடத்தின் கதவு திறந்துவைக்கப்பட்டிருந்தது பிறரை ஏமாற்றும் பொருட்டென்பதும், இவ்வீட்டில் எவ்விடத்திலோ பிறருக்குத் தெரியாத கள்ள அறையேனும், நிலவறையேனுமிருக்கவேண்டுமென்பதும் ஆதிமூலம் பிள்ளை அதில்தான் மறைந்திருக்க வேண்டுமென்பதும், குன்றின்மேலிட்ட விளக்கைப்போல் ஐயமறத் தெரிகின்றன எனினும், இதிலிருந்து மற்றொரு சந்தேகம் பிறந்தது. இவ்வீட்டில் இரகசிய அறையாவது நிலவறையாவது உண்டெனின், சுந்தரம் பிள்ளையின் பிரேதத்தை ஆதிமூலம் பிள்ளை அத்தகைய அறையில் மறைத்து வைத்துவிட்டு வெளியில் வந்து முற்றத்திலிருந்தோர்களிடம் தன் தமையன் எவ்விடத்திற்கோ சென்றிருப்பதாகக் கூறி, அவர்களும் பிறரும் அக்கூற்றினை நம்புமாறும் செய்து இரவில் ஒருவருக்குந் தெரியாமல் அப்பிரேதத்தை வெளியேற்றி அடக்கஞ் செய்துவிட்டுத் தன்னை உலக நிந்தனையினின்றும் அரச தண்டனையிலிருந்தும் ஒருங்கே காப்பாற்றிக்கொண்டிருக்கலாம். அறிவில்லா மூடர்களுங்கூட இவ்விதந்தான் செய்திருப்பார்களென்றால், கல்விக் களஞ்சியமான ஆதிமூலம் பிள்ளை இச்சுலபமான மார்க்கத்தைக் கைக்கொள்ளாமல் சவத்தைச் சரஸ்வதி பீடத்தில் வைத்துவிட்டுத் தான் மறைந்துகொண்டது சொல்லொணா வியப்பையுண்டாக்கிற்று. மேலும், அவர் சுயமாக இவ்விதம் செய்திருக்க மாட்டாரென்றும், யாவருடைய துராலோசனைக்குக் கட்டுப்பட்டோ தான் செய்திருக்க வேண்டுமென்றும் எனக்குத் தோன்றின.

அவ்விதம் அவருக்கு ஏற்படவல்ல துர்மந்திரி யாவரா யிருக்கக்கூடுமென நான் யோசித்தபொழுது என்னை யறியாமல் என் மனம் சதானந்தரை நாடிற்று. இவ்விடத்திலிருந்து தென்றல் விலாஸத்திற்குச் சதானந்தர் சென்றது முற்றத்திலிருந்தோர்க்குத் தெரியாமற் போனதையும் சரஸ்வதி பீடத்திலிருந்த கிண்ணம் மறைக்கப்பட்டதையும், ஆதிமூலம் பிள்ளை மறைந்துகொண்டிருப்பதையுமோர்ந்து கவனித்துப் பார்த்தபொழுது, சோனாட்டிற் பலவிடங்களிலிருப்பதுபோல், இவ்வீட்டிலிருந்து தென்றல் விலாஸத்திற்குப் போகச் சுரங்கவழியிருக்கலாமெனவும், சுந்தரம் பிள்ளையைக் கொன்றவுடன் ஆதிமூலம் பிள்ளையை அச்சுரங்கவழிக்கு அழைத்துப்போய் அவ்விடத்திலிருக்குமாறு செய்துவிட்டுச் சதானந்தர் அவ்வழியாகவே தென்றல் விலாஸத்திற்குச் சென்று பிறர் தன் செய்கையிற் சந்தேகமுறாவண்ணம் சில சாமான்களை யெடுத்துக்கொண்டு தன்னால் மலர்பறிக்க அனுப்பப்பட்ட சங்கரனையுமழைத்துக்கொண்டு இங்கு திரும்பி வந்திருக்கலாமெனவும் எண்ணினேன். இவ்வெண்ணத்தை உறுதிப் படுத்திக்கொண்டு பார்த்தபொழுது நான் முன்னுரைத்துள்ள கேள்விகளிற் பலவற்றிற்குச் சரியான உத்தரங்கள் கிடைத்தன. ஆனால் அவைகள் சதானந்தரை மிகவும் கேவலமாய் நினைக்கும்படி செய்யக்கூடியனவாயிருந்தன. தக்க காரணங்களின்றித் திடீரென என் மனதில் தோன்றின அனுமானங்களினாலேயே அவரைப் பாமதுஷ்டரென்று நினைக்க என் மனமொப்பவில்லை. ஆதலின் வேறு மார்க்கமாக ஆராய்ந்தறிய முயற்சித்தேன். சுந்தரம் பிள்ளையின் கடிதம் வந்தபொழுது நடந்த சம்பாஷணையைக் கேட்க விந்தையாயிருந்தது. இருபது வருடங்கட்கு முன் அயல் நாடு சென்

சமுசாரக் குட்டு வெளி இட்டால் நஷ்டம்.

திருந்த தன் தமையன் மறுபடியும் திரும்பி வருகிறாரென்னும் சமாசாரத்தை ஆதிமூலம் பிள்ளை யறிந்தபொழுது கரைகாணாக் களிப் பெய்தி, அவர் இதுகாறும் எவ்விட மிருந்திருப்பார்; என்ன செய்துகொண் டிருந்திருப்பார்; என்ற இவைபோன்ற வினாக்களுதிக்க வேண்டியது இயற்கையாயிருக்க, அவர் எதற்காக இங்குவருகிறார் என்பதைப்பற்றி வார்த்தையாடினது மனோ சாஸ்திரத்திற்கு முற்றும் முரண்பட்டுத் தோன்றினதால் அக்கடிதமும் சாதாரணமானதா யிராதென்னுஞ் சந்தேகத்தைக் கொண்டேன். அச் சந்தேகத்தை அச்சமயம் நிவர்த்தித்துக் கொள்வதற்கான மார்க்கமொன்றும் தென்படவில்லை. பின்னர், குமரனும் நானும் தனியாக வார்த்தையாடிக் கொண்டிருந்தபொழுது அவன் தெரிவித்த சில விஷயங்கள் சதானந்தரைப்பற்றி என் மனதி லுண்டாயிருந்த அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தி விட்டன. ஆதிமூலம் பிள்ளை சுந்தரம் பிள்ளையின் கையெழுத்தைப்போல் தான் போடக் கற்றுக்கொண்டிருந்தா ரென்பதையும் அச்சமயம், அருணாசலம் பிள்ளை இவ்விதம் சொல்லக் கூடியவரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை; என்னுடைய சாமர்த்தியம் இவருக்குத் தெரியாதுபோ லிருக்கிறது; என்று தனக்குத் தானே வாய்விட்டுக் கூறினாரென்பதையும்; பிறருடைய கையெழுத்தைப் போடுவதென்னும் பெருங் குற்றத்தில் தான் தேர்ச்சி யுற்றதைப்பற்றி உவகை பூத்தவராய்த் தன் திறமையைச் சதானந்தருக்குத் தெரிவித்துக் களிப்பெய்தினா ரென்பதையுமோர்ந்து கவனித்துப் பார்த்தபொழுது ஆதிமூலம் பிள்ளை தன்னை யறியாமல் எக்கணத்திலோ பெருத்த ஆபத்தைத் துணைக்கொண்டா ரென்பதும்; சதானந்தர் அதற்குப் பேருதவியா யிருந்தாரென்பதும் விளங்கின. இதில் அருணாசலம் பிள்ளை யென்னும் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தா ரென்பது தெரிந்ததெனினும் அன்னவர் யாவரென்பதும் அவர்க்கும் இதற்கும் எத்தகைய சம்பந்த மிருந்திருக்கு மென்பதும் அச்சமயம் புலப்படவில்லை. இவை நிகழ்ந்த மறுநாள் சதானந்தர் தன்னுடைய அறையில், 'இவன் அப்பெண்ணை விவாகம் செய்துகொள்வதாம்; நான் பார்த்துக்கொண் டிருப்பதாம்; நன்று, நன்று; இக்கிழவி இவ்விதம் சொல்லுவாளென்று கனவிலும் நான் கருதவில்லை;' என, தனக்குத்தானே வாய்விட்டுச் சொல்லிக்கொண் டிருந்ததாகக் குமரன் தெரிவிக்க எனக்கு ஆச்சரியமாக விருந்தது. தான் மணப்பதாக எண்ணியிருந்த பெண்ணை ஆதிமூலம் பிள்ளை விவாகம் செய்துகொள்ள நிச்சயித்துக் கொண்டதை யறிந்த சதானந்தர் அக் கலியாணத்தை நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டதுடன் ஆதிமூலம் பிள்ளை அப்பெண்ணை எப்பொழுதும் பாணிக்கிரகணம் செய்ய முடியாமலிருக்கும் வண்ணம் அவரைப் பெரியதோர் ஆபத்திற் குள்ளாக்கவும் நிச்சயித்துக் கொண்டா ரென்பதையும் அறிந்துகொண்டேன். இவ்வற்ப காரணத்தை முன்னிட்டுத் தன் சிறிய தந்தையைச் சிறைச்சாலைக் கனுப்புவதற்கான மார்க்கத்தைத் தேடுவதில் முயன்ற சதானந்தரின் மனப்பான்மையை நினைக்குந் தோறும் எனக்கு விந்தையாகவே யிருந்தது. இவ்வுலகத்தின் தன்மையும் இவ்விதந்தான் போலும்! நேற்றுச் சாயங்காலம் பொழுதமருஞ் சமயம் சுப்பிரமணிய பிள்ளையும் நானும் தென்றல் விலாஸத்திற்குச் சென்றிருந்த பொழுது அவர் அருணாசலம் பிள்ளையைக் குறித்து ஆதிமூலம் பிள்ளை தன்னிடந் தெரிவித்த சங்கதிகளைச் சொல்லவும் கார்மேகத்தால் மறைக்கப்பட்டிருந்த சந்திரன் திடீரென்று வெளியில் வந்து பிரகாசித்தாற்போல் மர்மமாக விருந்த சில விஷயங்கள் சிக்கலின்றிப் பட்டப்பகல்போல் நன்கு விளக்கமுற்றன. சுமார் இருபது வருடங்கட்கு முன் அருணாசலம் பிள்ளைக்குத் தான் பத்தாயிரம் ரூபாய் கடனாகக் கொடுத்திருந்ததை மறந்துவிட்டதாகவும், ஞாபகக் குறைவால் இதுகாறும் எவ்விடத்திலோ வைக்கப்பட்டிருந்த அடமானப் பத்திரம் இப்பொழுது தற்செயலாகக் கிடைத்து அவரைப் பணம் கேட்டதில் அவர் கொடுக்க மறுத்துவிட்டதாகவும் ஆதிமூலம் பிள்ளை சொன்னாரென்று சுப்பிரமணிய பிள்ளை யுரைத்ததைக் கேட்ட எனக்கு ஆதிமூலம் பிள்ளை தெரிவித்தது முற்றிலும் உண்மை யல்லவென்பதை உடனே தெரிந்துகொண்டேன். பத்தாயிரம் ரூபாய் அற்பமான தொகையன்று. இதை யொருவருக்குக் கடனாகக் கொடுத்து மறந்துவிடுவதும் சாத்தியமன்று. அதிலும் ஆதிமூலம் பிள்ளை

கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.

யைப் போன்றார் அத்தகைய தொகையை மறந்துவிடக் கூடுமென்பது நம்பத்தகுந்ததா யில்லை. இதற்கு முன் எனக்குக் கிடைத்திருந்த தடையங்களால் இதன் அந்தரங்கம் இன்னதுதா னென்பதைத் திட்டமாகத் தெரிந்து கொண்டேன். ஆதிமூலம் பிள்ளையின் தமையனார் சுந்தரம் பிள்ளை என்பவர் கண்டிக்குச் செல்வதன் முன் அருணாசலம் பிள்ளைக்கு அடமானப் பத்திரத்தின் பேரில் பத்தாயிரம் ரூபாய் கடனாகக் கொடுத்திருந்து அவர் இவ்வூரைவிட்டுச் சென்றபொழுது இப் பத்திரத்தைத் தன்னுடன் எடுத்துப் போகாமல் மறந்து வைத்துவிட்டிருக்கலா மெனவும், அப் பத்திரம் தற்செயலாக ஆதிமூலம் பிள்ளைக்குக் கிடைத்திருக்கு மெனவும், இது விஷயமாக அவர் சதானந்தருடன் கலந்து ஆலோசித்திருக்கக் கூடுமெனவும், சுந்தரம் பிள்ளை கண்டிக்குச் சென்றபின் அவருக்கும் அருணாசலம் பிள்ளைக்கும் இப்பத்திர விஷயமாக எத்தகைய தகவல்கள் நடந்துகொண் டிருந்தன வென்பதையும் அருணாசலம் பிள்ளையின் நோக்கம் இத்தன்மைய தென்பதையும் அறியவேண்டிச் சதானந்தர் அருணாசலம் பிள்ளைபால் அனுப்பப்பட்டிருக்கலா மெனவும், தான் இச்சித்திருந்த பெண்ணை விவாகஞ் செய்துகொள்வதற்கு இடையூறா யிருந்ததுமன்றி அப் பெண்ணையே மணந்து கொள்வதாகவும் நிச்சயித்துக் கொண்ட ஆதிமூலம் பிள்ளையின் மனோபீஷ்டம் நிறைவேறாமல் தடைபடுவதற்கும் அவருக்குப் பெரியதோர் இன்னலை யுண்டாக்குவதற்குமான மார்க்கத்தை ஆவலுடன் தேடிக்கொண்டிருந்த சதானந்தருக்கு இவ்விஷயம் தெரிந்ததும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவராய் அருணாசலம் பிள்ளையிடம் செல்வதாகப் போக்குக் காட்டித் திரும்பிவந்து அன்னவர் பணம் கொடுக்க மறுத்துவிட்டதாகப் பொய்யுரைத்து ஆதிமூலம் பிள்ளைக்குக் கோபம் வரும்படி செய்து, அதன்மேல் அப் பணத்தை வசூலிக்க வழியிருப்பதாகவும் தெரிவித்துச் சுந்தரம் பிள்ளையிடமிருந்து அப் பத்திரத்தை மேடோவர் பெற்றிருப்பதாகப் பிறர் நம்புமாறு செய்துகொண்டு, பின் தேதியில் வட்டி வரவொன்றை வைத்துவிட்டால் அப் பத்திரத்திற்கு உயிர்வந்து விடுமெனவும் அதைக் கோர்ட்டில் போட்டுச் சுலபமாகப் பணத்தை வசூலித்து விடலாமெனவும் சதியாலோசனை கூறி அதற்கு ஆதிமூலம் பிள்ளையை இணங்கும்படி சதானந்தர் செய்திருக்க வேண்டுமெனவும் எனக்குத் தோன்றின. இதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த பொழுது தென்றல் விலாஸத்தில் நாங்களிருந்த அறையில் ஓரற்புத சம்பவம் நிகழ்ந்தது. இக் கொலையின் மர்மத்தைக் கூடிய சீக்கிரத்தில் நான் தெரிந்து கொள்வதற்காகவே முருகப் பெருமான் இவ்விதம் நடைபெறும்படி செய்திருக்க வேண்டுமென வெண்ணி அவரை மானஸீகமாகத் துதித்துப் போற்றிசெய்தேன். அவ்வறையில் எல்லோராலும் நிலைக்கண்ணாடியென்று கருதப்பட்டிருந்தது கதவுபோல் திறந்தது. அதினின்றும் சதானந்தர் விளக்கொன்றைக் கையிற் பிடித்தவண்ணம் அறைக்குள் வந்தார்; கதவைச் சாத்தினார்; விளக்கையும் அணைத்துக் கொண்டார். தென்றல் விலாஸத்தை விட்டு வெளியிற் புறப்பட்டுத் துரிதமாகச் சென்றார். கண்ணாடி கதவாக மாறினதிலிருந்தும், முன்னமேயே என் மனதிலுண்டாயிருந்த சந்தேகத்தின் பயனாகவும் இவ் வீட்டிலிருந்து தென்றல் விலாஸத்திற்கு வரச் சுரங்கவழி யிருக்கிறதென்பதை உடனே தெரிந்துகொண்டு அவ்வழி இந்த வீட்டில் எவ்விடத்தி லாரம்பிக்கிற தென்பதை யறிய வேண்டிச் சுப்பிரமணிய பிள்ளையை இங்கு அனுப்பிவிட்டு நான் சதானந்தரைப் பின் தொடர்ந்து சென்றேன். அவர் நேராக விரைந்துபோய் இரமணீ விலாஸத்தில் நுழைந்தார். அவருக்குத் தெரியாமல் நானும் அவரைப் பின்பற்றினேன். வள்ளியம்மையிருந்த அறைக்குட்சென்று அம் மங்கையுடன் சம்பாஷித்தார். அதனைக் கேட்பதற்காகக் கதவின் பின்புறத்தில் மறைந்து நின்றேன். அவர்கள் வாயினின்றும் வெளிப்போந்த வார்த்தைகள் சதானந்தரின் துர்க்குணத்தையும் வள்ளியம்மையின் தூய்மையான தன்மையையும் நன்கு விளக்கிக்காட்டின. மேலும் சதானந்தர் உரையாடினதிலிருந்து ஆதிமூலம் பிள்ளை வஞ்சித்துக் கொல்லப்பட்டேனும் அன்றி அயல் தேசத்திற் கனுப்பப்பட்டேனு மிருக்க வேண்டுமென்பதும் தெரிந்தது. வள்ளியம்மையாற் புறக்கணிக்கப்பட்ட சதானந்தர் அக் கன்னிகையிடம் தன்னுடைய திறமையைப்

கட்டிக்கொண்டு வாச்சொன்னால் வெட்டிக்கொண்டு வருவான்.

பற்றிப் பேசிச் சபதங் கூறிக்கொண்டு வெளியில் வந்தார். இத் தோட்டத்தின் காவற்காரர்களில் ஒருவனான முருகனின் மருமகன் மதிவாணன் என்பவனை இரகசியமாக அழைத்து வள்ளியம்மையை இரவு பன்னிரண்டு மணிக்குமேல் தென்றல் விலாஸத்திற்குத் தூக்கிச் செல்வதற்கான ஏற்பாட்டை அவனுடன் முடிவு செய்துகொண்டு புறப்பட்டார். இவர்களிருவரும் பேசிக்கொண்டதிலிருந்து இரண்டு விஷயங்கள் விகசிதமாயின. வள்ளியம்மையை எவ்விடத்திற்கோ தூக்கிச் செல்வதென்று முன்னதாகவே தீர்மானித் திருந்தார்களென்பது ஒன்று. இத் தோட்டத்திலுள்ள மூன்று மாளிகைகளுக்கும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்வதற்கான சுரங்கவழி யிருக்க வேண்டுமென்பது மற்றது. சதானந்தர் தென்றல் விலாஸத்தை நோக்கித் திரும்பினவுடன் நான் இங்குவரப் புறப்பட்டேன். அதுவரையிலும் எனக்குத் தெரிந்துள்ள விஷயங்களைப் பாகுபடுத்திப் புனைந்து பார்த்தபொழுது இக் கொலையின் மர்மம் முற்றும் விளங்கிவிட்ட மாதிரி எனக்குத் தோன்றிற்று. கேவலம் ஒரு பெண்ணின் விஷயத்தை யுத்தேசித்து, இதுகாறும் தன்னைத் தன் சொந்த மகன்போல் பாவித்துவந்த ஆதிமூலம் பிள்ளைக்கு அல்லலை விளைவிக்கக் கருதின சதானந்தர், வாயிதாக் கடந்துபோன அடமானப் பத்திரத்திற்கு உயிர் கொடுத்துப் பத்தாயிரம் ரூபாயையும் வட்டியுடன் வசூலித்து விடலாமெனக் கபடமற்ற தன் சிறிய தந்தைக்குத் தெரிவித்து, ஆகாயக் கோட்டை கட்டிக் காண்பித்து, அவர் அதனை நிஜமென நம்புமாறுஞ் செய்து சுந்தரம் பிள்ளையின் கையெழுத்தைப் போடக் கற்றுக்கொள்ளும்படி தூண்டினார். ஆதிமூலம் பிள்ளையும் தனக்கு நேரிடவல்ல ஆபத்தைக் கவனிக்காமல் பணத்தாசையின் மேலீட்டால் தன் தமையனின் கையெழுத்தைப் போட்டுப் பழகிக்கொண்டார். வட்டி வரவொன்றை வைக்க அருணாசலம் பிள்ளையின் கையெழுத்தைப்போல் போடத் தெரிந்து கொள்ளும்படி சதானந்தர் சொல்லியிருக்கலாம். 'வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் தண்ணீர்' என்று நினைக்கக்கூடிய ஆதிமூலம் பிள்ளையும் அதற்கிணங்கி யிருப்பார். இதற்குள்ளாக விவாக நிச்சயம் செய்வதற்கேற்படுத்தப் பட்டிருந்த தினமும் வந்தது. தான் விரும்பியிருந்த வண்ணம் அவ்வளவு சீக்கிரத்தில் விஷயம் முற்றுப் பெறாததால் வள்ளியம்மையை எவ்விதமேனும் ஒருவருக்குந் தெரியாமல் மதிவாணனின் உதவியைக் கொண்டு தூக்கிச் செல்வதென நிச்சயித்துக் கொண்டார். இங்ஙனம் ஆதிமூலம் பிள்ளை, தனக்குச் சகாயமாகத் தன் இஷ்டம்போல் சதானந்தர் வேலை செய்து வருகிறார் என்னும் மனப்பால் குடித்திருக்க, சதானந்தர் தன்னை நம்பின தன் சிறிய தந்தையை வஞ்சித்து அவருக்குக் கெடுதலை யுண்டாக்கவல்ல மார்க்கத்தைக் கையாண்டு வந்தார். இவ்வாறிருக்க இருபது வருடங்கட்குமுன் அயல் நாடு சென்றிருந்த சுந்தரம் பிள்ளை நேற்றுப் பிற்பகல் திரும்பி வருவதாக அவரிடமிருந்து திடீரென்று கடிதமொன்று வந்தது. அதைப் பார்த்தவுடன் ஆதிமூலம் பிள்ளையின் மனதில் குழப்ப முண்டாயிருக்கலாம். பத்திரத்திற் கண்ட பணத்தை இனி வசூலிக்க முடியாதே யென விசனப்பட்டிருக்கலாம். அவர் இப்பத்திரத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததினால் தன் தமையனின் கடிதத்தைப் பார்த்தவுடன் இதை யுத்தேசித்துத்தான் அவர் வருகிறார் போலும் என்று எண்ணினது ஆச்சரியமாகாது. சதானந்தருடன் ஏகாந்தத்திற் கலந்து ஆலோசிக்க விரும்பியிருப்பார். கடிதத்தின் விஷயத்தை யறிந்ததும் சதானந்தர் தான் எண்ணியிருந்தவைக ளெல்லாம் கேடுற்றன வென நினைத்திருப்பார். பிறர் கையெழுத்தைப் போடச் செய்து அரச தண்டனைக்குத் தன் சிறிய தந்தையைப் பாத்திரமாக்குதல் இனி இயலாமற் போவது மாத்திரமன்றி வள்ளியம்மையைத் தூக்கிச் செல்வதற்கும் இடையூறு ஏற்படுமோ வெனச் சந்தேகித்திருப்பார். ஆதிமூலம் பிள்ளையுடன் தனித்துப் பேசி அவருடைய மனோபாவத்தை யறிய இவரும் ஆவல் கொண்டிருப்பார். விருந்தினர்கள் பூந்தோட்டத்திற்குச் சென்றார்கள். ஆதிமூலம் பிள்ளையால் சதானந்தர் நிறுத்தப் பட்டார். இருவரும் கலந்து என்ன செய்வதென்பதைப் பற்றி ஆலோசித்தனர். சுந்தரம் பிள்ளை வந்தவுடன் அவர் இங்கு வருவதற்கான காரணத்தை யொருவாறு தெரிந்துகொண்டபின் அனுகூல முண்டெனின் இப்பத்திரத்தின்

விஷயத்தை அவருக்கு அறிவித்து இன்னும் பணம் வசூலிக்கப் படாமலிருந்தால் அவரைக் கொண்டே அக்காரியத்தை நிறை வேற்றிக் கொள்வதென்றும்; அல்லது அவர் கைப்பட வே மேடோவர் செய்து கொடுக்கச் சொல்லிப் பத்திரத்தை வாங்கிக் கொள்வதென்றும்; இவ்விரண்டிற்கு முடன்படாமல் அவர் மறுத்தால் சமயத்திற்குத் தகுந்தவாறு ஏற்பாடு செய்து கொள்வதென்றும் இருவரும் தீர்மானித்திருப்பார்கள். பின்னால் நிகழக் கூடியவற்றை உத்தேசித்துச் சதானந்தர் சங்கரனைத் தென்றல் விலாஸத்திற் கனுப்பி யிருக்கவேண்டும். அக்காரணத்தைக் கருதியே குமரனும் ஆலமரத்தண்டை அனுப்பப்பட் டிருக்கவேண்டும். சரஸ்வதி பீடத்திற் றனியே உட்கார்ந்திருக்கும் சுந்தரம் பிள்ளையை வரவேற்க ஆதிமூலம் பிள்ளையும் சதானந்தரும் சென்றிருப்பார்கள். எவரேனும் கூடத்தின் வழியாகச் சென்றால் அன்னவருக்குச் சதானந்தரும் அவ்வறையிலிருக்கிறாரென்பது தெரியாம லிருக்கக் கதவு மூடப்பட்டது. இஃது சதானந்தருடைய சூழ்ச்சியாயிருக்கும். ஆதிமூலம் பிள்ளையின் சம்மதத்தைக் கோராமலும், சுந்தரம் பிள்ளைக்குச் சந்தேக முண்டாகாமலும் மிக்க சாமர்த்தியமாக இக்காரியத்தைச் செய்திருக்கவேண்டும். பிறகு சுந்தரம் பிள்ளையிடம் சம்பாஷித்த பொழுது அவர் இவர்களுடைய ஏற்பாட்டிற்கு இணங்காம லிருந்ததுமன்றித் தனக்கு இன்னு மதிகமான பணம் தேவையாயிருக்கிறதெனத் தெரிவித்து ஆதிமூலம் பிள்ளையைக் கொடுக்கும்படி கேட்டிருப்பார். இவர் வெகுண்டு அதற்கு மறுத் துரைத்திருக்கலாம். பாக்கியத்தின் காதில் விழுந்ததும் இதுவேயாகும். சகோதரர்க ளிருவரும் கோபமாகப் பேசிக் கொண் டிருந்தபொழுது அவர்களைச் சமாதானம் செய்பவர்போல அபிநயித்து ஆதிமூலம் பிள்ளைக்குத் தெரியாமல் முன்னதாக விஷங் கலந்து வைக்கப்பட்டிருந்த பாலோ, அல்லது தேயிலைப் பானமோ ஏதோ வொன்றை முன் குறித்துள்ள கிண்ணத்தில் வார்த்தெடுத்துக் கொண்டு பயபக்தியுடன் சுந்தரம் பிள்ளையிடம் சென்று அதை அவருக்குக் கொடுத்துப் பருகும்படி மிக்க விநயமாக வேண்டிக்கொண்டிருப்பார். அதிலிருக்கும் சூதை யறியாமல் அவர் அதனைப் பெற்றுக் கபடமின்றிக் குடித்திருப்பார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸத்யவதி

[ஸ்ரீமதி விசாலாட்சி அம்மாள்]

VI

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்
அன்றி அது வரினும் வந்தெய்தும் — ஒன்றே
நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

என்பதுபோல் நாம் நினைக்கும்வாறு ஒன்றும் நடப்பதில்லை ஆயினும் மாயையால் மயக்கப்பட்ட மனதானது நம்மாலேயே எல்லாம் செய்யப்படுவதாக நினைத்து வருந்தியும் ஆனந்த மடைந்தும் அல்லலுறுகின்றது.

சென்னைமாநகர், கல்கத்தா, பம்பாய் இது போன்ற பெரிய நகரங்களில் மனிதர்கள் கெடுவதற்கு அநேக வழிகள் நிறைந்திருக்கின்றன. எப்பொழுதும் சிறிய ஊர்களைவிடப் பெரிய நகரங்களில் பிழைப்புக்கும் அநேக வழிகளுண்டு. அடியுடன் கெடுவதற்கும் அநேகம் ஆயிரம் வழிகளுண்டு. கல்கத்தாவில் திருட்டு, புரட்டு, விபசாரம், சூதாடுமிடம் இவைகள் அதிகமாய் இருந்துவந்தன. சுசிலன் கல்கத்தாவுக்கு வந்த இரண்டு மூன்று மாதம் வரை சுசிலனாகவே இருந்துவந்தான். ஆனால் ஒரு நாள் கடைவீதி வழியே சென்றபொழுது அவனுடைய கண்கள் சாராயக் கடையைக் கண்டன. அவனுடைய மனது பழைய ஞாபகத்தில் சென்றது. அவனுடைய கால்கள் தானாகவே அங்கு சென்றன. மறுபடியும் மதுபான மென்னும் பேய் அவனைப் பிடித்தாட்டத் தொடங்கியது. அத்துடன்கூட ஒரு வேசியின் சிநேகமும் ஏற்பட்டது ஸத்யவதியின் துரதிருஷ்டமே. காற்றும் நெருப்பும் சேர்ந்ததுபோல் இவ்விரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து முகுந்த னாதரால் வைக்கப்பட்ட ரொக்க ஆஸ்தியை எல்லாம் எரித்து சாம்பலாக்கி விட்டன; அநேக புதுக்கடன்களும் ஏற்பட்டன.

ஸத்யவதி தன்னுடைய 24-ம் வயதிற்குள்ளேயே சகல ராஜ வைபவங்களையும், கொடிய வறுமையையும், சகிக்க முடியாத துன்பத்தையும் அனுபவித்தாய்விட்டது. சுசிலன் கல்கத்தாவிற்கு வந்தபின் அவளுக்கு ஆயிரம் ரூபாய்க்கு ஆபரணம் செய்து கொடுத்திருந்தான். ஆனால் அவைகளை அவள் அணிவதேயில்லை. சந்

தோஷ மென்பது அவளுடைய மனதில் எப்பாகத்திலுமில்லை. அவளுக்கு ஒன்றிலும் பற்றில்லை. சதா மௌனமாகவே யிருப்பாள். இறந்து விட்டால் நலமென பலமுறை நினைப்பாள். ஆனால் தன் சிறு குழந்தைகளைக் கண்டு அதை மறப்பாள்.

ஒருநாள் சுசிலன் அவளிடமணுகி "எனக்கு ஆயிரம் ரூபாய் வேண்டும். ஆகையால் ஆயிரம் ரூபாய் சர்க்கார் கரன்ஸி நோட் ஒன்று கொடு." என்று கேட்டான். அதற்கு அவள் ஒப்பவில்லை. அன்றிரவு அவள் நகைப் பெட்டி மாயமாக மறைந்தது. இது நடந்த இரண்டு தினங்கழித்து ஒரு கடன்காரன் சுசிலனைக் கடனுக்காக சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டானென ஸத்யவதி அறிந்து மிகவும் வருந்தி அக்கடனைத் தீர்த்து சுசிலனை விடுவித்தாள். விடுபட்டவுடன் அம்மூடன் தன் வீட்டிற்கு வருவதற்குப் பதிலாக வேசி வீட்டை யடைந்தான். அவ் வேசியின் பெயர் குணவதி. ஆஹா! ஆச்சர்யம். பெயர்தான் குணவதி. அவள் குணம் அதற்கு நேர்விரோதம். கல்வி யறிவே யற்றவளுக்கு 'ஸரஸ்வதி' என்றும், பூனைக் கண்ணைப் போன்றும், கோணப் பார்வையையும் உடையவளுக்கு, 'கமலாக்ஷி' என்றும்' பெயர் வைப்பதுபோ லிருக்கிறது இவளுக்குப் பெயர். சுசிலனிடம் பணம் கிடையாதென்பது குணவதிக்குத் தெரியும். ஆயினும் ஸத்யவதியினிடம் அதிகமாக ஆஸ்தி யிருப்பதை யறிந்து அதை அவன் மூலமாக அபகரிக்க எண்ணினள் அந்தக் கற்பை விற்கும் காரிகை. ஆதலால் அவள் தன் சொந்தச் செலவில் சுசிலனுக்கு வேண்டிய மட்டும் சாராயமளித்து அவனிடம் மிகவும் அன்புடையவள்போல நடித்து தன் வலையில் அவனை சிக்கவைத்தாள்.

ஆஹா! வேசிகளின் கபட சாமர்த்தியமே சாமர்த்தியம். சுசிலன் அவள் வீட்டை அடைந்ததும் அவள் அவனை உள்ளே அழைத்துச் சென்று மிகவும் துக்கப்படுவதுபோல் அபிநயித்துக் கண்ணீர்விட்டு அவனுக்குச் சிரம பரிகாரமாக்க் கொடுப்பதுபோல் நிறைய சாராயத்தை அவனுக்குக் கொடுத்து, அவன் தன் நினைவே யற்றவனாய் மயங்கி இருக்கும்போது, ஸத்யவதியைக் குறித்து தூஷணையாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

"என் அன்பரே! தங்கள் மனைவி எவ்வளவோ குணசாலி என்று யாவரும் புகழுவதை நான் கேட்டிருக்கிறேன். அவளுக்கு உங்களிடமுள்ள அன்பு இப்பொழுதல்லவோ தெரிகிறது. வேண்டிய அளவு பணம் தன் கையிலிருக்கும்போது தன் சொந்தப் புருஷனை சிறைக்கு அனுப்பிய மனைவி, இன்னும் எதைத்தான் செய்ய மாட்டாள். நான் குலத்தில் தாசி. தாசிகளுக்கு உண்மை யன்பு இருக்காதென்று உலகம் உளறுகிறது. ஆயினும் உங்களை சிறையில் அடைத்தது முதல் நான் இதுவரை எழுந்திருக்காமல் அழுதவண்ணமே யிருந்தேன். ஒன்றும் சாப்பிடவுமில்லை. எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. இன்று நீங்கள் விடுதலை யடையாவிடில் நாளையதினம் என்னுடைய நகைகளையாகிலும் அடகுவைத்து உங்களை மீட்பதாகத் தீர்மானித்திருந்தேன். ஆயினும் என் வார்த்தையை யார் நம்புவார்கள்?" என்று பலவாறு கபட வார்த்தைகளை மொழிந்தனள். அதைக் கேட்ட சுசிலன் மனது பாகாயுருகியது இவ்வாறாக அன்று முழுவதும் கழிந்தது. இருவரும் சேர்ந்து ஸத்யவதியினிட மிருக்கும் பணத்தையெல்லாம் அபகரிக்க எண்ணி அவளை விஷமிட்டுக் கொல்லத் தீர்மானித்தனர்.

ஆஹா! துஷ்டர்களின் சேர்க்கையினால் ஒருவனுடைய குணமானது எவ்விதம் மாறுதலடைகின்றது பார்த்தீர்களா? அதனால்தான் நம் முன்னோர்கள்,

> "தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
> தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
> குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
> டிணங்கி யிருப்பதுவுந் தீது."

எனக் கூறியிருக்கின்றனர். ஆகையினால் துர்க்குணம் நிறைந்தவர்களுடைய சேர்க்கையை உடனே விலக்கவேண்டும்.

VII

நாட்கள் சென்றவண்ண மிருக்க, ஸத்யவதியின் கையிலிருந்த ரொக்கமான ஆஸ்திகளும் சிறிது சிறிதாக சென்றவண்ண மிருந்தன. கடைசியில் கையில் ஒரு காசுகூடக் கிடைக்காமல் சுசிலன் வருந்தினன். அவ் வூரில் யாரும் அவனுக்குக் கடனும் கொடுக்க உடன்படவில்லை. வேசியான குணவதியும் தன் செலவில் சாராயம் கொடுப்பதை நிறுத்தி விட்டாள். சாராயம் குடிக்க முடியாமல்

போனதால் சுசிலன் பைத்தியம் பிடித்தவன் போலானான். அவன் எப்பொழுதும் எப்படி பணம் சம்பாதிக்கலாமென யோசித்தவண்ணமே யிருந்தான்.

கடைசியில் அவன் தன் மாமனாரால் தன் மனைவிக்குக் கொடுக்கப்பட்ட வீட்டை விற்றுவிடத் தீர்மானித்து அவ்விஷயத்தை சிலருக்குத் தெரிவித்தான். உடனே அநேகம் பெயர்கள் எனக்கு எனக்கென்று போட்டியாக ஆரம்பித்தனர். ஏனெனில் இம்மாதிரியாக விற்கப்படும் பொருள்கள் விலை குறைவாகக் கிடைக்குமென யாவருக்கும் தெரியுமல்லவா! முகுந்தநாதர் எவ்வளவோ பாடுபட்டுப் பதினையிரம் ரூபாய் செலவழித்துக் கட்டின அவ்வீட்டை இப்பொழுது இரண்டாயிர ரூபாவுக்குமேல் ஒருவராவது கேட்கவில்லை. அவ்வீடு ஸத்யவதியின் பெயரால் சாஸனம் செய்யப்பட்டிருந்தாலும் அவளுக்கு மூன்று ஆண் குழந்தைகளிருந்தாலும் அவ்வீட்டை விற்க சுசிலனுக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. இந்நிலைமையில் யார்தான் அவ்வீட்டுக்கு அதிகமாகப் பணந்தர சம்மதிப்பார்கள்? சுசிலனுக்கோ இரண்டாயிரம் வந்தாலும் போருமென் றிருந்தது. அவன் தன்னுடைய அவசரத்தில் அதை விற்கச் சம்மதித்து 200-ரூபாய் முன் பணமும் வாங்கி, பத்திரமும் தயாரித்து அதில் கையெழுத்து வாங்குவதின் பொருட்டு ஸத்யவதியிடம் வந்தான்.

சுசிலன் வீட்டிற்கு வந்து அநேக தினங்களாயின. அது வழக்கமாகி விட்டதால் சத்யாவுக்கு தன் கணவன் வருவதினாலாவது, வாராமலிருப்பதினாலாவது சந்தோஷமாவது, துக்கமாவது ஏற்படுவதில்லை, வெண்ணெயைப்போன்ற மிருதுவான அவளுடைய ஹிருதயமானது கல்லினும் கடியதாகிவிட்டது. ஸ்திரீகளுடைய மனதானது வெறுக்கும்படி நடந்துகொள்ளும் புருஷர்கள் அநேகர் இப்போதும் உண்டு. ஸ்திரீகள் எவ்வளவுதான் தன் கடமைக்காக உழைத்திடினும், உள்ளன்புடனிருந்திடினும், ஆண்மக்கள் கபடமே நிறைந்தவர்களாய் அவர்களுடைய மெல்லிய மனத்தைப் புண்படுத்துகின்றனர். ஒற்றுமையுள்ள தம்பதிகளையே இப்பொழுது காண்பதரிதாக விருக்கிறது. அதற்குக் காரணம் பரஸ்பர நம்பிக்கை யின்மையே. இனி தன் பர்த்தா நல் வழியில் திரும்புவாரென்ற நம்பிக்கையே சத்யவதியின் மனதில் இல்லை. அவனுடைய மூர்க்கத் தனத்தினாலல்லவா மிருதுவான மனதையுடைய ஸத்யவதி மிக்க வருந்த நேர்ந்தது. அவளுக்கு இவ்வுலகில் எதுவும் பாழடைந் திருப்பதுபோல் காணப்பட்டது. உத்ஸாகமென்பதே சிறிது மில்லை. சுசிலன் அவளருகில் உட்கார்ந்து மிகவும் அன்புடன் பேசுவதைப்போல் நடித்து ஏதோ பேச ஆரம்பித்தான்.

ஆஹா! முதல்நாளிரவு அவளைக் கொல்வதாகத் தீர்மானித்த அவன் நெஞ்சம் இப்பொழுது எவ்வளவு கபடத்தன்மையுடன் அவளுடன் பேச ஆரம்பித்தது! இக்காலத்தில் சுத்த ஹிருதயமுள்ள மனிதர்களைக் காண்பதே அருமையா யிருக்கிறது. அவன் இவ்வாறு சிறிது நேரம் ஏதோ பேசிவிட்டு, "காந்தாமணி! நாம் இவ்வீட்டை விற்றுவிடலாமென நினைக்கிறேன் நாம் இப்பொழுது இருக்கும் நிலைமையில் இவ்வளவு பெரிய வீட்டிற்கு வரிப் பணம் கட்டுவதே கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் இதை விற்றுவிட்டு வேறே ஒரு சிறிய வீடு வாங்கிக்கொண்டு அதில் வசிக்கலாம்" எனப் பகன்றனன்.

இதைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டு நடுங்கினாள். "ஐயோ! நாதா! இப்பொழுது நமக்கிருக்கும் இந்த ஒரே வீட்டையும் விற்றுவிட்டால் நாமெங்கே செல்வது! யாருடைய நடத்தையினால் நம்முடைய வீட்டிலிருந்து லக்ஷ்மி துலைந்துபோக நேர்ந்தது? நாதா! இவ்வீட்டையும் விற்றுவிட்டால் நம் குழந்தைகள் தெருவில் நின்று நிற்க நிழலின்றித் தவிக்க நேருமே? உங்களுக்கு நம் குழந்தைகளைக் கண்டாகிலும் இரக்கம் தோன்றவில்லையா?" என்று கூறி வருந்தினாள்.

சுசிலன் மிக்கப் பிடிவாதமாக அதையே கூறினான். அதைக்கேட்ட ஸத்யா வருந்தி ஒன்றும் பதில்கூறாமல் எழுந்து வேறொரு அறைக்குள் சென்று கதவை சாத்திவிட்டு மிக்க வருந்தி அழலானாள். சுசிலன் சற்று நேரம் ஒன்றும் தோன்றாமல் அங்கேயே உட்கார்ந்திருந்துவிட்டு, பிறகு சற்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு, ஸத்யவதியிருக்கும் அறைக்குச் சென்று, "நான் இவ்வீட்டை விற்றுவிட்

கடைத் தேங்காய் எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாற்போல்.

டேன். அதற்கு முன்பணமும் வாங்கிவிட்டேன்: மிகுதிப் பணத்தையும் வாங்கவேண்டும். ஆதலால் இந்தப் பத்திரத்தில் கையெழுத்திடு" என்று அதட்டிக் கூறினன். அவள் அப் பத்திரத்தை கையில் வாங்கவும் நடுங்கினள்.

கையெழுத்திட அவள் சம்மதிக்காததால் வாசலில் உட்கார்ந்திருந்த சுசீலனுடைய தோழர்கள் அவளை பயமுறுத்த உள்ளே வந்தார்கள். அவர்களைக் கண்ட ஸத்யவதி புலியைக் கண்ட மான்போல் மிகவும் நடுங்கி தன் பர்த்தாவினுடைய பாதங்களில் பணிந்து ஓவெனக் கதறினள். அவளுடைய அந்த தீனமான அழுகைகூட அவனைக் கருணையுடன் கூடினதாகச் செய்யவில்லை. அவனுடைய தோழர்கள் அவளை உதைக்கவும், அடிக்கவும் நெருங்கினார்கள். அதைக்கண்டு ஸத்யவதி நடுங்கி, 'ஐயோ! குழந்தைகளே! உங்கள் கதி என்ன?' எனக் கதறினள். ஆ ஹா! அவளுடைய அன்பின் மகிமைதானென்ன! அப்பொழுதுகூட அவள் தன் குழந்தைகளுக்காகவே வருந்தினள். நாதா! என்னை இத் துஷ்டர்களிடமிருந்து ரக்ஷியும், ரக்ஷியுமென வாய்விட்டலறினள். நாலா பக்கமும் ஓடினள். அச்சமயத்தில்கூட அக்கொடியோனுடைய மனம் இளகவில்லை. அவளுடைய கூக்குரலைக் கேட்ட அண்டை அயலார்கள் ஓடிவந்தனர். அதைக் கண்ட சுசீலனுக்கு அடக்கமுடியாக் கோபமுண்டாகிவிட்டது. தன் காலிலுள்ள பூட்சினல் (Boots) ஸத்யவதியின் மார்பின்மீது பலமாக உதைத்தான். ஐயோ' என்றலறிய வண்ணம் அவள் கீழே விழுந்தனள். அவள் வாயிலிருந்து இரத்தம் கொட்டியது. குழந்தைகள் அவளைச் சுற்றி, அம்மா! அம்மா! என்று கூவி அழத்தொடங்கின. அதுவே காரணமாக அவளை மிருத்யு அணுகியதை அச்சிறுவர்கள் எவ்வாறு அறியக்கூடும்? வாயிலிருந்து இரத்தம் கொட்டுவதைக் கண்டதும் அத் துஷ்டர்களும், சுசீலனும் பயந்து ஓட்டமெடுத்தனர்.

இப்பொழுது சுசீலன் தன் மனைவி அப் பத்திரத்தில் கையெழுத்திடாததால் முன்பணமாக வாங்கிய 200 ரூபாய்களையும் திருப்பிக் கொடுக்கவேண்டியிருந்தது. ஆனால் அவன் அவைகளை வாங்கினவுடனேயே குணவதியிடம் கொடுத்து வேண்டியமட்டும் அவளால் கொடுக்கப்பட்ட சாராயத்தையும் குடித்துவிட்டான். பிறகு அவனும் அவன் தோழர்களும் யோசித்து அப்பத்திரத்தில் பொய்க் கையெழுத்திட்டு, மிகுதிப் பணத்தையும் பெறுவதாகத் தீர்மானித்தார்கள். குடியினால் எத்தனை கெட்ட வழக்கங்கள் தானாகவே உண்டாகின்றன? ஒரு கெட்ட வழக்கத்திலிருந்து பல கெட்ட வழக்கங்கள் தானாகவே உண்டாகின்றன. நம்முடைய சாஸ்திரத்தில் கூறியபடி எவ்வளவோ புண்ய கர்மங்களால் நல்ல ஜன்மமெடுத்தும் ஆங்கிலேயரைப்போல் அவரது நடை உடை பாவனைகளில் தேர்ந்திருக்க ஆவல்கொள்ளும் வாலிபர்கள் அநேகரைக் காண்கின்றோம்.

இவ்வாறே சகல துர்க்குணங்களும் தானாகவே ஒன்றிலிருந்து ஒன்றிற்கு இழுத்துச் செல்வதில் மிகவும் சாமர்த்தியமுடையது. அதற்கு மோட்டாராவது, புகை வண்டியாவது அவசியமில்லை. நிற்க,

சுசீலன் பொய்க் கையெழுத்திட்டு பத்திரத்தை ரிஜிஸ்டர் ஆபீஸில் பதிவுசெய்து பாக்கிப் பணத்தையும் வாங்கி தன் இஷ்டப்படி செலவழிக்கலானான்.

சுசீலன் தன் மனைவியை உதைத்ததுமுதல் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவளுக்கு அந்த உதையினால் ஹிருதயத்தில் பலமான காயமேற்பட்டது. ஹிருதயம் (Lungs) முழுவதும் ஒரே ரணமாகி எரிச்சலும், குத்தலுமாக அவளை மிகவும் துன்பத்திற்குள்ளாக்கியது. தினமும் அவள் வாயிலிருந்து இரத்தம் விழுந்தவண்ணமிருந்தது. ஆதலால் அவள் நடக்கவும் சக்தியற்று மிக்க பலஹீனமடைந்தாள். சில நாட்களில் படுத்த படுக்கையாக கிடக்க நேர்ந்தது. அவளுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டு, அவள் தந்தையின் சிநேகிதரான ஒரு டாக்டர் அவளிடம் கருணைகொண்டு அவளுக்கு சிகிச்சை செய்துவந்தார். அவளுடைய மார்பின் மீதுள்ள காயத்தைக் கண்டு அவர் அவள் எங்கேயோ விழுந்ததால் அது உண்டாயிருக்குமென நினைத்தார். அவளுக்கு நாளுக்கு நாள் நோயதிகரித்ததேயன்றி குறையவில்லை. ஒரு நாள் அவளுக்கு ஜ்வரம் அதிகமாக வந்தது. அதுமுதல் அவளுடைய வாயிலிருந்து இரத்

கடுஞ் செட்டி கண்ணைக் கெடுக்கும்.

தம் அதிகமாக வீறிய ஆரம்பித்தது. இப்பொழுது அவளுடைய வியாதி க்ஷயரோகமாக மாறியதென டாக்டர் கூறினர். குழந்தைகள் மூவரும் வாடிய முகத்துடன் தாயின் படுக்கை யருகில் உட்கார்ந்து அவளையே உற்று நோக்கினர். ஸத்யவதி தான் இன்னும் அதிக நாள் உயிருடன் இருக்கமாட்டோமென அறிந்தனள்.

அக் குழந்தைகளைக் கண்டு அவள் 'ஐயோ! இப் பச்சை பாலகர்களின் கதி என்ன? இவர்களை அன்புடன் ஆதரிப்பவர் யார்? இவர்களுக்கு அருகிலிருந்து யார் அன்புடன் போஜனமளிப்பார்? ஐயா! தீனரக்ஷகா! கிருபாநிதியே! உமக்குக் கருணையில்லையா? ஈசா! நீரே இவர்களைக் காப்பாற்றவேண்டும்'' என கண்களை மூடி கடவுளை தியானித்தாள். அவளுடைய கண்களின் கோடியிலிருந்து கண்ணீர் பெருகியது. அதைக்கண்ட நரேந்திரன் "அம்மா! அம்மா! அழாதே, நீ அழுதால் நாங்களும் அழுவோம். உனக்கு சீக்கிரம் உடம்பு குணமாகிவிடும். அழாதே அம்மா!" என்று கெஞ்சினன். சிறிய குழந்தைகளிருவரும் அவளுடைய கண்ணீரை துடைக்க ஆரம்பித்தனர். அப் பரிதாபகரமான சமயத்தில் ஒருவன் உள்ளே வந்து 'அம்மா! உங்களுடைய கணவர் இந்த வீட்டை எங்களுக்கு விற்றுவிட்டார். ஆதலால் இவ்வீட்டை உடனே காலி செய்யவேண்டும்'' என்றான்.

எந்த வீட்டை விற்கச் சம்மதிக்காததால் தனக்கு இவ்வாறான பிராண சங்கடம் நேர்ந்ததோ, அப்படிப்பட்ட அந்த வீடு விற்கப்பட்டதெனக் கேட்ட ஸத்யா ரொம்பவும் துடித்தாள். அருகிலுள்ள பெரிய மனிதர்களை வரவழைத்து 'உதயை யுள்ளவர்களே! நான் இவ்வீட்டை விற்கவில்லை. இவர்கள் கூறும் விஷயம் என்னவென்று விசாரியுங்கள்' என்று வேண்டினள். அவர்களும் அந்த விக்ரய பத்திரத்தை வாங்கிப்பார்த்து அதில் ஸத்யவதி என்று கையெழுத்திட்டிருப்பதை அவளுக்குத் தெரிவித்தனர். அவள் மிகவும் வியப்படைந்தாள். உண்மையை அறிந்தாள். வீட்டை வாங்கியவர்கள் அச்சமயம் அவள் அசௌக்யமா யிருப்பதை எண்ணி, இன்னும் மூன்று தினங்களில் வீட்டைவிட்டுப் போய் விட வேண்டுமெனக் கூறிச் சென்றனர்.

மறுநாள் காலையில் இச் சமாசாரங்களை எல்லாம் ஒரு வக்கீலிடம் கூறி, என்ன செய்வது என்று விசாரித்தாள். அதற்கவர் "வாங்கியவர்கள்மீது வியாஜ்யம் செய்து, பொய்க் கையெழுத்தென்பதை ருஜூ செய்தால் வீட்டை மீட்டுக்கொள்ளலாம்'' எனக் கூறினர்.

இதைக்கேட்ட ஸத்யவதி கேஸ் ருஜூவானல் தன் பர்த்தாவுக்கு சிறைவாசம் ஏற்படுமென்று உணர்ந்து, 'ஆ ஹா! நான் எவ்வளவு துரதிர்ஷ்டமுள்ளவள். என்னருமைத் தந்தையால் எனக்கு அன்புடன் அளிக்கப்பட்ட இவ் வீட்டை போக்கடித்துக்கொண்டு தவிப்பதா? அல்லது, வீட்டை அடைந்து என் தெய்வமான கணவரை, கொடிய சிறைக் கனுப்புவதா? ஐயோ ஒன்றும் புரியவில்லையே! ஜகதீசா! ஏதாவது ஒரு வழி காண்பித்து இச்சிறுவர்களை ரக்ஷியும்'' எனப் பலவிதமாக வருந்தினள். பிறகு வீட்டை வாங்கினவர்களுக்கு அந்த இரண்டாயிர ரூபாயையும் தான் திருப்பிக்கொடுத்து விடுவதாகவும், அந்த வீட்டை விட்டு விடும்படியும் சொல்லியனுப்பினள். ஆனல் அவர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை அபலையான சிறுமி உடனே அவ் வீட்டை விட்டுச் செல்லத் தீர்மானித்தாள்.

ஸத்யவதி கல்கத்தாவிற்கு வந்த உடனேயே தன் தாய்தந்தையர்கள் புதைக்கப்பட்ட இடத்தில் ஒரு அழகான சலவைக்கல் மண்டபமொன்று கட்டுவித்து அதில் அவர்களுடைய பிரதிபிம்பங்களை வைத்து ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும், தன் குழந்தைகளுடன் அங்கு சென்று அவைகளின் முன்பு பணிந்து தன் குழந்தைகளையும் நமஸ்கரிக்கச் செய்து தங்களை ஆசீர்வதிக்கும்படி வேண்டிக்கொண்டு திரும்புவாள். அவ்வளவு அன்புடன் வசித்த அவ் வீட்டை விட்டுவிட்டுப் போக நேர்ந்ததால் கடைசியாக ஒருமுறை தன் மாதா பிதாக்களுடைய ஆசிர்வாதத்தைப் பெற விரும்பி தன் குழந்தைகளுடன் அங்கு சென்று அவர்களுடைய பிரேமையை நினைத்து நினைத்து வருந்தி, ஓ "என் இனிய தாய் தந்தையரே! உங்களுடைய பிரிய குழந்தையான ஸத்யவதிக்கு எவ்விதமான துர்த்தசை நேர்ந்திருக்கிறதெனப் பாருங்கள். இக் குழந்

[இதன் தொடர்ச்சி 353-ம் பக்கம் பார்க்க.]

நவராத்திரி

NAVARATHRI

[ஸ்ரீமான் ல. அனந்தய்யர்,
"இந்துநேசன்" பத்திராசிரியர்.]

மகிஷாசுர மர்த்தனம்

'நவராத்திரம்' என்னும் சொல்லுக்கு ஒன்பது தினங்கள் என்று அர்த்தம். இங்கே இராத்திரம் என்பது இரவைக் குறிப்பதன்று. நவராத்திரம் என்னும் வடமொழிச் சொல் 'நவராத்திரி' என மருவியது. பகலிற் செய்யும் பூசை ஈசுவரனுக்கும், இரவிற் செய்யும் பூசை ஈசுவரிக்கும் உரியதென்பது சாமானிய வழக்கு. ஆனல் இந்த ஒன்பது தினங்களில் பகலிற் செய்யும் பூஜையும் இரவிற் செய்யும் பூஜையும் ஈசுவரிக்கே உரியனவாகும். ஒவ்வொரு தேவதையை உபாசிப்பதற்கும் பூஜிப்பதற்கும் ஒவ்வொரு விரத தினம் குறிப்பிட் டிருக்கும். நவராத்திர பூஜை மற்ற பூஜைகளைவிட விசேஷமானது. மற்றத் தேவதைகளைவிட ஒன்பது மடங்கு அதிகமாக ஈசுவரியைப் பூஜிக்க வேண்டு மென்னுங் கருத்தை யுணர்த்தும் பொருட்டே இதற்கு ஒன்பது தினங்கள் குறிப்பிடப்பட் டிருக்கின்றன.

நவராத்திரி விரதம் புரட்டாசி மாதத்தில் அனுஷ்டிக்கத் தக்கது. சித்திரை மாதமும் புரட்டாசி மாதமும் யமனென்னும் காலனுடைய இரண்டு கோரப்பற்களாம். கோரப்பற்கள் என்பவை நச்சுப் பற்கள், விஷத்தன்மை யுடையவை. ஆகலினல் அவ்விரண்டு மாதங்களிலும் பலவிதமான விஷ வியாதிகள் உண்டாகும். அவைகளைத் தடுப்பதற்கும் போக்குவதற்கும் ஈசுவரியின் அருள் அவசியமாக வேண்டும்; அந்த அருள் படைப்பதற்காகச் சித்திரை மாதத்தில் வசந்த நவராத்திர விரதமும், புரட்டாசி மாதத்தில் பாத்திரபத நவராத்திர விரதமும் ஏற்பட்டன. இவ்விரண்டினுள் பாத்திரபத நவராத்திர விரதமே பிரபலமாக நடைபெற்று வருகின்றது. தீர்க்க வொண்ணுத நிகிலேயும் துன்பத்தையும் தீர்க்கத்தக்க தேவதை பராசக்தியே. மகிஷன் என்னுமோர் அரக்கன் இருந்தான். அவன் எந்தத் தேவதையினுலும் வெல்ல முடியாத வரம் பெற்றிருந்தான். பிரமன், விஷ்ணு, ருத்திரன் முதலானவர்களும் அவனை வெல்லமாட்டாது வருந்தினர்கள். அவர்கள் முதலாக தேவதைகளனைவரும் அவனை வெல்லுவதற்கு வகை தெரியாமல் தாபம் மிகுந்திருந்தபோது, அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு உக்கிரமான சக்தி வெளிப் போந்து 'மகாசக்தி' யென்னும் ஒருருவாகத் திரண்டு தோன்றியது. அந்த மகாசக்திக்கு ஒவ்வொரு தேவதையும் தத்தம் ஆயுதாதிகளை அளித்து உதவினர்கள். எல்லாவற்றையும் வெல்லத்தக்க பராக்கிரம மிகுந்த அந்தப் பராசக்தியானவள் மகிஷாசுரனை மர்த்தனஞ் செய்து உலகமனைத்தினுக்கும் மங்களமருளினள். எல்லா வகையிலும் வெற்றியை விரும்பிய மானிடர்கள், முக்கியமாக அரசர்கள், அந்தப் பராசக்தியைப் புரட்டாசி மாதத்தில் ஆண்டுதோறும் ஆராதிக்கலாயினர்.

தேவி பூசை

இந்தக் காலத்தில் தேவியின் மூன்று ஸ்வரூபங்களும் வேறு வேருக ஆராதிக்கப் படுகின்றன. அவையாவன:— துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி. ஒவ்வொரு ஸ்வரூபத்திற்கும் மூன்று நாள் வீதமாக, ஒன்பது தினங்களில் பூஜை ஏற்பட்டது. இம் மூன்று ஸ்வரூபங்களும் ஏன் அவசியமென்பதும், அவைகளைப் பூசிக்கும் முறையும், அத்தகைய பூஜையின் உத்தேசம் தாத்பரியம் முதலிய விஷயங்களும் தேவி உபநிஷத்திலும், தேவி பூசையைக் குறித்துச் சொல்லும் அதர்வ வேதத்தின் சில பாகங்களிலும் விவரித்துரைக்கப்பட் டிருக்கின்றன. தேவி அல்லது சக்தியை சூட்சும ரூபமாகவும், ஆத்ம சைதன்யமாகவும் பூஜிக்கும் இவ்வொன்பது தினங்களுக்கும் நவராத்திரம் என்பது சிறப்புப் பெயராம். அதற்கு அடுத்ததான பத்தாம் நாளில்

[352-ம் பக்கத் தொடர்ச்சி.]

தைகளை ஆசிர்வதியுங்கள்' எனக் கூறி கதறி அழுதனள். பின்பு அம்மண்டபத்திலுள்ள மண்ணை எடுத்துத் தன் குழந்தைகளின் உடம்பில் பூசி, நெற்றியிலும் இட்டு தாய் தந்தையர்களிடத்திலுள்ள அன்பை விடமுடியாமல் அவர்களுடைய பிரதி பிம்பமான சித்திர படங்களை எடுத்துக்கொண்டு மிகவும் துக்கத்துடன் அவ்வீட்டைவிட்டு வெளியேறி ஒரு சிறிய குடிசையில் வசிக்கலானள். "துன்பம் வந்தால் தொடர்ந்துவரும்" என்பது உண்மையாகிவிட்டது.

(தொடரும்.)

கோரை குடியைக் கெடுக்கும்.

தேவியின் ஸ்தூல ரூபத்தைப் பூஜிப்பது வழக்கம்.

'சக்தி' என்னும் பதத்திற்கு விசை, ஆண்மை, வல்லமை, ஊக்கம் என்று அர்த்தம் சொல்லலாம். இந்தத் தினங்களில் பூஜிக்கப்படும் தெய்வம் அந்த ஆண்மை அல்லது வல்லமையின் உருவமேயாம். இவ்வாறு பூஜிக்கப்படும் சக்தி அல்லது வல்லமையே உலகத்தின் சிருஷ்டிக் கிரமத்தில் அதன் ஊடே நிகழும் மகா சைதன்யமாம். மனிதர்களின் காரியங்களை யெல்லாம் நடத்துவது இதுவேயாம். யாவரையும் இரட்சிக்கும் திறனுடையது இதுவே. இதன் கிருபையை ஒவ்வொருவரும் ஏதேனுமொருவகையில் நாடல் அவசியமாகும். அந்தணர் முதலான துவிஜர்கள் தினந்தோறும் ஆவாகனஞ் செய்து காயத்ரீ எனத் தொழுவதும் அந்தச் 'சக்தி' யையேயாம் இவ்வுலகில் எந்தக் காரியஞ் செய்ய வேண்டியிருப்பினும் அதற்குச் சக்தி வேண்டும். ஜனங்கள் ஏதேனுமொரு காரியத்தைச் செய்யவோ, அல்லது எதனையேனும் சாதிக்கவோ தமக்குச் 'சக்தியில்லை' என்று முறையிடுவதைக் கேட்டிலோமா? இவ்வாறாக நமக்கு இஷ்டமிருப்பினும் இல்லாவிடினும், நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் மானிடரான நாமனைவரும் இந்தத் தேவியின் ('சக்தி'யின்) சகாயத்தை ஏதேனுமொரு விதமாக விரும்புகின்றோம்; பிரார்த்திக்கின்றோம்; இவளுடைய அருள் நமக்கு அவசியமாய் வேண்டியிருக்கிறது. ஆகவே ஸ்வபாவத்தில் இயற்கையில் அமைந்துள்ள இந்தத் தெய்வ சைதன்யத்தை (சக்தியை) ப் பூசிப்பது ஆவசியகமென்று எற்படுத்தியது மேன்மையான காரியம். இத்தகைய பூர்வாசாரத்தை ஒருபொழுதும் கைவிடாது மிகுந்த பக்தியோடும் சிரத்தையோடும் நாம் அனுஷ்டிப்பது கடமையாகும்.

ஸரஸ்வதீ பூஜை

இந்த உற்சவத்தின் கடைசித்தினமான பத்தாம் நாள் தேவி பூஜையில் பிரதான தினமாகும். இந்த உற்சவத்தின் 6-வது அல்லது 7-வது தினத்தில் மூலம் என்னும் நட்சத்திரம் உச்சமா யிருக்கும்பொழுது ஸரஸ்வதியை ஆவாகனஞ் செய்வது வழக்கம். இது கலைமகள் பிறந்த நாள் என்பது கொள்கை. அஃதாவது அவள் ஸ்தூல வடிவங் கொண்ட தினமாம், இந்த ஸரஸ்வதி பூஜை சிரவணம் என்னும் நட்சத்திரம் உச்சமாகுந் தினத்தில் பூர்த்தி செய்யப்படும். இது சாதாரணமாக இவ்வுற்சவத்தின் 10-ம் நாளாகும். ஸரஸ்வதியை ஆவாகனஞ்செய்யுங்காலத்து நட்சத்திரம் மூலம் (ஆரம்பம்) ஆகும். அஃதாவது, ஒரு புஸ்தகம் அல்லது ஒரு சாஸ்திரத்தைப் படிப்பதற்கு ஆரம்பம் செய்வது என்று அர்த்தமாகின்றது. ஆரம்ப காரியம் ஸரஸ்வதியின் அருள் கிடைப்பதற்காகச் செய்யும் ஆராதனையே. இதனால் அறிந்து கொள்வது என்னை யெனின், நாம் வித்தையை நாடின், முதன் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்; வித்தியாப்பியாசம் அடிப்படையிலிருந்து ஆகவேண்டும்; மத்தியிலோ எங்கோ முறை துறையின்றி ஆரம்பிப்பது கூடாது என்பதேயாம். அதமபட்சம் வருஷத்திற்கொரு முறையேனும் ஒரு புதிய விஷயத்தை புதிய சாஸ்திரத்தை புதிய புத்தகத்தைப் படிக்கவும், ஆராயவும் ஆரம்பித்து, மறுவருஷம் அந்தத் தினம் வருவதற்குள் அதனை நன்றாகக் கற்று ஊக்கத்துடன் அதனில் உழைத்துத் தேர்ந்து வேறு கிரந்தத்தை ஆரம்பிக்கவும் சித்தமாயிருக்கவேண்டும் என்னுங் கருத்து புத்திக் கூர்மை யுள்ளவர்களுக்கு இதனால் புலப்படுமன்றோ? கல்வி கற்பதற்கு மிகவும் அநுகூலமான நல்ல முறை இதுவேயன்றோ? இவ்வாறு ஒருவன் வருடந்தோறும் ஒவ்வொரு புதிய சாஸ்திரத்தை யப்பியசித்துப் பெரிய பண்டிதனாக விளங்குதல் கூடும். இந்தக் கருத்தின் விசேஷத்தைக் கவனிக்கக் கவனிக்க நம் முன்னோர்களின் உத்தேசத்தின் உபயோகமும் பெருமையும் நன்கு விளங்குகின்றன.

மூலம் என்னும் நட்சத்திரத்தில் ஸரஸ்வதி பூஜையை யாரம்பித்து இடையில் ஒரு தினமும் தவறாது பத்தாம் நாள் சிரவண நட்சத்திரம் வரைக்கும் தினந்தோறும் செய்துவர வேண்டுமென்பது விதி. சிரவணம் என்றால் (ஆசாரியாது மொழிகளைக் கேட்டல்) என்று அர்த்தமாகும். அன்றியும், சிரவணமென்பது வித்தியாப்பியாசத்திற்குரிய நால்வகைச் சாதனங்களுள் (சிரவணம், மனனம், நிதித்தியானம், ஸ்வாநுபவம் என்னும் நான்கனுள்) முதலாவதாகும். இவ்விடத்தில் அந்நான்கினையும் குறிப்பதற்குப் பதிலாக முதலாவதான சிரவணத்தை

மாத்திரம் குறித்தபோதிலும், ஏனைய மூன்று முறைகளையுங் கூடச் சேர்த்துச் சொன்னதாக வே கொள்ளல்தகும். ஸரஸ்வதி பூஜையைச் சிரவண நட்சத்திரத்தில் ஆரம்பித்த கல்வி முயற்சியை அது சித்தியாகுமளவும் அதற்குரிய சாதனங்களனைத்தையுங் கொண்டு அஃதாவது படித்தல், ஆசாரியாது வியாக்யானம் முதலிய மொழிகளின் விஷயத்தை மனத்தில் ஆலோசித்தல் (ஊக்கத்துடன் ஆராய்தல்), உறுதியான ஞானம் சம்பாதித்தல், அதனையாசரித்தல் (அதற்குத் தக்கபடி நடத்தல்) என்னும் இவ்விதங்களாக அந்தப் படிப்பைப் பூர்த்திசெய்ய வேண்டு மென்பதாயிற்று. கட்டுக்கதை போலவும் மூடபக்திக்குரியது போலவும் தோன்றுகின்ற இவ் வுற்சவத்தில் இவ்வளவு பெரிய அரும்பொருள் நீதி யடங்கியிருக்கின்றது.

புஸ்தக பூஜை

கல்விக்கு அறிகுறியான ஸ்தூல வடிவம் எவர்க்கும் எளிதிற் கிடைக்கக் கூடியதாயிருக்கின்றது. அஃதாவது, புஸ்தகமேயாம். ஆனதுபற்றி நவராத்திரி பண்டிகையில் கடைசியில் புஸ்தகங்களைப் பூசிப்பது வழக்கமாயிற்று. இது மிகவும் நல்ல வழக்கம், வெகு அனுகூலமானது; மூலை முடுக்குகளிற் கிடக்கும் பழைய புத்தகங்களும் ஏடுகளும் தேடி யெடுக்கப்படுகின்றன. அவற்றின் மீது படிந்துள்ள தூசியைத் தட்டித் துடைத்துச் செப்பனிட்டுப் பூஜையில் அவைகளை வைக்கிறார்கள். இந்த வழக்க மில்லாவிடின், நம் நாட்டிலுள்ள பல அருமையான ஓலைப் புத்தகங்கள் கறையான் முதலியவைகளுக்கு இரையாகி நசித்திருக்கும். அரிய பெரிய பொருள்க ளடங்கிய வித்தியா நிதிகளின் பிரயோஜனம் நமக்கு எட்டாமற் போயிருக்கும். கல்வியைக் காப்பாற்றித் தலைமுறை தலைமுறையாக வைத்து ஜனங்களுக்கு உதவுவதற்குப் பயபக்தியுடன் செய்யப்படும் இந்தப் புஸ்தக பூஜை எவ்வளவு உபயோகமா யிருக்கின்றது. நாம் தமோ குணம் மேலிட்டுச் சோம்பேறிகளாகிக் கெட்டலைவோமென்று தமது ஞானதிருஷ்டியின் மகிமையினு லுணர்ந்த முனிச் சிரேஷ்டர்கள் வித்யா விஷயத்தில் நமக்குச் சிரத்தை யூட்டுமாறு செய்துள்ள பல நல்ல ஏற்பாடுகளுள் இந்தப் புஸ்தக பூஜையு மொன்றும்.

துர்க்கா பூஜை, ஆயுத பூஜை

'அறிவே சக்தி, ஞானமே பலம்' என்பது

யாவருக்குந் தெரிந்த விஷய மாதலின், நாம் ஸாஸ்வதியை, அஃதாவது, கலைமகளை இயற்கையி லமைந்துள்ள மூன்று வல்லமைகளுள் (திரிசக்திகளுள்) ஒன்றெனத் தொழுவது அதிசயமாகாது. இந்த நவாரத்திரி உற்சவத்தில் சக்தியை (வல்லமையை) இன்னுமொரு விதமாகவும் (வடிவமாகவும்) தொழுவதுண்டு. அந்த ஸ்வரூபம் துர்க்கை அல்லது காளி எனப்படும். இதனை யனுசரித்து வங்காளத்தில் இந்த நவாரத்திரி பண்டிகையை 'துர்க்காபூஜை தினங்கள்' என வழங்குகின்றார்கள். வீரம், தைரியம், பராக்கிரமம் முதலியவைகளுக்கு உபயோகப்படும் பதார்த்தங்களே இக் குணங்களை உணர்த்துகின்றன. அவை சரீரம் திடப்பட்டு நரம்பு, சதை முதலியன உறுதியுறுவதற்கேற்றவைகளாகவாவது, போர்த்தொழிலில் ஆயுதங்களை உபயோகிப்பதன் பயன்களாகவாவது இருக்கும். ஆனால், துர்க்கைக்கு மிருகங்களைப் பலிகொடுப்பதும், இறைச்சி, மதுவர்க்கம் (கள், சாராயம் முதலியன) ஆகிய இவற்றை அவளுக்கு முக்கிய நிவேதனமாகக் கொடுப்பதும், தாமஸத் தன்மைவாய்ந்த பூஜையென்றும், அது நீசமானது, தகாதது, ஆதலின் அத்தகைய பூஜையைத் தவிர்க்கவேண்டுமென்றும் நமது சாஸ்திரங்கள் தெளிவாக விதித்திருக்கின்றன. இவற்றிற்குப் பதிலாக உளுந்து, பயறு முதலியவற்றாற் செய்த பணியாரங்களையும் இன்னும் இவை போன்ற இராஜஸ குணத்திற்குரிய பதார்த்தங்களையும் நிவேதனம் செய்யலாமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தச் சக்தி இத்தேசத்தில் அநேகம் பெயர்களால் வழங்கும். அவற்றுள் துர்க்கை, பத்திரகாளி, வைஷ்ணவி, விஜயை, முகுந்தை, சண்டிகை, மாதவி, கிருஷ்ணை, நாராயணி, கன்னிகை, மாயை, ஈசானி, சாரதை, அம்பிகை என்பன சிலவாம். கல்விக்குரிய தேவதையாகிய ஸாஸ்வதிக்கு அறிகுறியாகப் புஸ்தகங்களைக் கொள்வது போல சரீரபலத்திற்கும் உருவமா யேற்பட்ட துர்க்கைக்கு ஸ்தூல அறிகுறியாக ஆயுதங்களைக் கொண்டு அவ்வாயுதங்களை இவ்வுற்சவத்தின் கடைசிதினத்தில் பூசிப்பது வழக்கம். ஆயுதங்களை நன்றாகத் துலக்கி அவற்றிற்குக் குங்குமம், சந்தனம், புஷ்பம் முதலியன இட்டு அலங்கரித்துத் தூபதீபங்கள் கர்ப்பூரஹாரத்திகள் முதலிய உபசாரங்கள் செய்து இந்துக்களனைவரும் தொழுவார்கள். அன்றைத்தினம் பழைய கத்தி, கேடயம் முதலிய இரும்புக் கருவிகளும், எஃகு ஆயுதங்களும் எண்ணெய் காணும்; பளபளப்பாகப் பிரகாசிக்கும்.

சூரத்தன்மை, உக்கிரம், யுக்த சாமர்த்தியம், தேகபலம் முதலியவைகளைத் துர்க்கையின் ஸ்வரூபம் குறிக்கின்றமையின், இந்தியாவில் எங்கும், முக்கியமாக வட இந்தியாவிலும் ஸ்வதேச இராஜாங்கங்களிலும், ஜனங்கள் ஆயுதபூஜை தினத்தில் வெகு உற்சாகத்துடன் மும்முரமாகத் தத்தம் புஜபல பராக்கிரமங்களைப் பிரகடிப்பார்கள்; எங்கே பார்த்தாலும் குஸ்தியும், கஸரத்தும், வேடிக்கையும் பந்தயமுமாயிருக்கும். அன்றைத்தினத்தில் தம் திறமையைக் காண்பிக்கும் கருத்துடன் ஜனங்கள் வருஷமெல்லாம் பயிலுவார்கள். இது தேகப் பயிற்சிக்காக ஏற்பட்டதோர் நியமனமாம்.

பாரதத் தாலாட்டு

NATIONAL LULLABY

[ஸ்ரீ சுத்தாநந்த பாரதியார்.]

இராகம் - நீலாம்புரி, தாளம் ஆதி

மன்னுபுகழ் பாரதியின்
மணி வயிற்றுச் செல்வனே
உன்னுடைய புண்ணியத்தால்
உதித்தனை இந்த நாட்டில்!
முப்பத்து முக்கோடி
முனிவரின் மரபினை
செப்பி விளக்க வந்த
தீரனே கண்வளராய்!

கர்ணன் பிறந்த நிலம்
கண்ணன் சிறந்த நிலம்
தர்மன் தழைத்த நிலம்
தசரத ராமன் நிலம்
வீர விஜயர் புகழ்
வித்தகத் தத்துவத்தோர்
பேர் விளங்கப் பிறந்த
பிள்ளையே கண்வளராய்!

கண்ணன்போல் விளையாடிக்
கற்பகம் போன்றே யுதவி
எண்ணத்தில் வீரமே
யிலகிடக் கண்வளராய்!

பாரத தேவியின்
பச்சிளம் மைந்தனே
வீராதி வீரனக
விளங்கிடக் கண்வளராய்!

வேத முபனிடதம்
விளங்கு மறநூல்களும்
கீதையுந் தாலாட்டக்
கீர்த்தியே கண்வளராய்!

போர்முனை வெற்றியும்
புனித நற்றவமுடன்
பாருன்னை யேத்திடப்
பரிதிபோல் விளங்குவாய்!

உத்தமர் குலத்தையும்
உயர்ந்த நம் மறத்தையும்
பத்தினியர் மாண்பையும்
பாலிக்கக் கண்வளராய்!

சத்தியவரிச் சந்திரனைய்
சாந்தத்தில் காந்தியாய்
புத்தனின் சந்ததியே
புனிதமாய்க் கண்வளராய்!

மனுநீதிச் சோழன் வந்த
மரபினில் வந்தவனே
அனுதினமும் உயர்ந்தே
அறங் காக்கக் கண்வளராய்!

சந்திரகுப்த னசோகனும்
சமுத்திரகுப்தன் ஹர்ஷனின்
சந்ததியிற் பிறந்த
சாட்சியே கண்வளராய்!

மாரதர் மரபினில்
மணி விளக்காகவந்த
வீர சிவாஜி போன்றே
விளங்கிடக் கண்வளராய்!

அக்னி குலதிலகன்
ஆண்மை ப்ரதாப சிங்கன்
மிக்கவுன் மனத்தினில்
மேவிடக் கண்வளராய்!

பாரத தர்மத்தைப்
பக்தியோ டுயர்த்திய
வீரன் குரு கோவிந்தன்
விளங்குக வுன்னுள்ளத்தில்!

சிங்கம்போல் நெஞ்சுடன்
சிலைபோன்ற தோளுடன்
அங்கும் எங்கும் ஆண்மை
அழகுற விளங்குவாய்!

வீரச் செயல் களுடன்
வேதாந்த மனதுடன்
சோர்வுற்ற நம்மறஞ்
சுடருறக் கருதுவாய்!

அடிமைப் பிசாசுகள்
அஞ்சி நடுங்கிட
வறுமை யிருள் நீங்கும்
வன்பணி யாற்றுவாய்!

கல்வியுந் தொழில் களும்
கலைகளும் மலைபோலச்
செல்வமும் சீர் பெருகச்
செஞ்செயல் புரிகுவாய்!

திலகரும் காந்தியும்
செய்த அருட்பணியை
நலமுறச் செய்திட
நற்றவம் புரிகுவாய்!

சுதர்மம் சுயராஜ்யமும்
சுடர் விரிந் தொளிரவே
இதமுள்ள தொண்டுசெய்ய
இன்பமே கண்வளராய்!

ஆத்ம பலத்துடனே
அஞ்சாத நெஞ்சுடனே
பூத்ததோர் பாரதப்
புதல்வனே கண்வளராய்!

இந்த உன் நாட்டினை
எந்த வுலகமும்
வந்தே மாதா மென்றே
வழிபட வளருவாய்!

வாழ்க உன் பாரதம்
வாழிய பாரதர்
வாழ்க பாரத தர்மம்
வாழிய வையகம்.

———

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[பிரபஞ்சா எழுதியது]

கனோர் நாட்டரசி

ராஜஸ்தானத்தில் **கனோர்** என்ற சிறு நாடு ஒன்று இருக்கிறது. பல வருஷங்களுக்கு முன் அந்நாட்டில் **தேவசிம்மன்** என்ற அரசன் ஆண்டுவந்தான். ராஜபுத்திர வீரர்களுக்கு அணிகலன்களாக விளங்கிய வீரத்தன்மை, குடியோம்பல், எளியோருக்கு உபகாரஞ்செய்தல், மகளிர் மானம் காத்தல் முதலிய பல நற்குணங்கள் அவனுக்கும் அமைந்திருந்தன.

அவன் அரசுசெய்த காலத்தில் வடக்கிலிருந்து பட்டாணி அரசர் ராஜஸ்தானத்தில் படையுடன் சென்று பல மன்னர்களைச் சுலபமாகத் தோற்கடித்து, அவாது நாடுகளைக் கைப்பற்றினர். ராஜபுத்திர மன்னர்களெல்லாம் உயர்ந்த வீரர்களே; அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண் சிங்கங்களே. ஆனால் நாட்டின் மேன்மையைக் கருதி (ஒருவரோடு ஒருவர் ஒற்றுமை) ஆபத்து காலங்களில் ஒன்றாகச் சேர்ந்து எதிரிகளுடன் போர்செய்து, அவர்களை அடித்து ஓட்டுவதற்குப் போதிய ஒற்றுமை மாத்திரம் அம் மன்னர்களிடையில் இருக்கவில்லை. ஆகையினால் பட்டாணியர் படையெடுத்து வந்தபோது தம்முடன் தனியே எதிர்த்துப் போர்செய்த பல குறுநில மன்னர்களை எளிதாக வென்றனர். பல நாடுகளில் பட்டாணியர் ஆட்சி பரவிவந்தது.

கனோர் நாட்டையும் சுலபமாக ஜயிக்கலாம் என்ற எண்ணமுடன் **அப்பாஸ் கான்** பெரும் படையைத் திரட்டிக்கொண்டு புறப்பட்டான். அந்நாட்டில் பல மலைக்கோட்டைகள் இருந்தன. கான் கனோர்க் கோட்டையை முற்றுகை யிட்டான். தேவசிம்மன் தன் படையைக்கொண்டு பட்டாணியரைத் துரத்திவிட நினைத்தான். பல மாதங்களாகக் கொடும்போர் நிகழ்ந்து வந்தது. இதுவரையில் சுலபமாகக் கிடைத்த வெற்றி, கனோரில் கிடைப்பது அரிதாயிற்று. பல்லாயிரக் கணக்கான பட்டாணியர் போர்க்களத்தில் மாண்டனர். கனோர் நாட்டு வீரமக்களில் பெரும்பாலோர் இறந்துவிட்டனர். ஆனால் சண்டை முடிவது காணோம்.

இனி தாம் ஜயிக்கப்போவதில்லை என்று நினைத்த பட்டாணியர் கூடாரங்களைக் கிளப்பிக்கொண்டு புறப்படலாயினர். அப்போது புதிய பட்டாணிச் சைந்நியம் ஒன்று கானுக்கு உதவி புரிய அங்கு வந்துசேர்ந்தது. மீண்டும் கோட்டையைப் பகைவர் வளைத்துக் கொள்ளவே, ராஜபுத்திரர் 'இன்று ஜயமடைந்து வீடு திரும்புவோம், அல்லது போர்க்களத்தில் இறந்து வீர சுவர்க்கம் புகுவோம்' எனத் தீர்மானித்துப் போர் தொடங்கினார்கள். கனோர் நாட்டரசன் அன்று நடந்த போரில் முன் அணியில் நின்று சமர்புரிந்தான்; பல பட்டாணிய வீரரைக் கொன்று வீழ்த்தினான்; கடைசியில் யுத்தகளத்தில் கடுங்காயப்பட்டு இறந்து வீழ்ந்தான்.

தேவசிம்மன் மரணத்தோடு போர் முடிந்துவிடவில்லை. ராஜபுத்திரர்கள் போர் தொடங்கினால் வெற்றிமாலை சூடி ஊரில் செல்லுவர், அல்லது உயிர் உடலில் உள்ளவரை சண்டை செய்வர். அரசன் இறந்து விட்டபோதிலும் ஒரு ராஜபுத்திர ஸ்திரீ சைந்நியத்தை நடத்தி நின்றாள். அவள்தான் தேவசிம்மன் மனைவி; **கனோர் நாட்டரசி.**

கணவன் இறந்ததைக் கண்ட அம்மாது, உடனே ஒரு குதிரையின்மீது ஏறி இங்கும் அங்கும் கோட்டையைச் சுற்றிச்சென்று தன் படைவீரர்களைத் தட்டிக்கொடுத்தாள். வீர மொழிகளால் அவர்களை உற்சாகப்படுத்தினாள். ஆனால் பகைவர் பெருஞ் சைந்நியத்தை எதிர்த்து நிற்க ராஜபுத்திரர்களால் முடியவில்லை. அன்று இரவு இரகசிய வழியே ராஜபுத்திரர்கள் கோட்டையை விட்டு வெளியேறி வேறு ஒரு கோட்டைக்குச் சென்றனர். கனோர் நாட்டரசி மீண்டும் ஒரு சிறு சைந்நியம் சேர்த்துக்கொண்டு அந்தக் கோட்டையிலிருந்து வந்தாள்.

இதையறிந்த அப்பாஸ்கான் அங்குச் சென்றான். தன் சிறு படையைக்கொண்டு ராணியால் கடல்போன்ற பகைவர் சேனையை எவ்வாறு ஜயிக்கமுடியும்? ஒன்றன்பின் ஒன்றாகப் பல கோட்டைகளைப் பகைவர் கைப்பற்றி

சிறுமையும் பெருமையும் தான் தர வருமே.

விட்டனர். "கடைசியில் நர்மதா நதிக்கரையி லிருக்கும் நமது மலைக்கோட்டைக்குச் செல்லு வோம்" என்று ராணியார் தீர்மானித்துக் கொண்டு எஞ்சிய சிறு சைந்நியத்துடன் அங் குச் சென்று தங்கினுள்.

அப்பாஸ்கான் கனேர் நாட்டை கைக் கொள்ள வந்தவனல்ல ; அது அவன் கருத்தா யின் நாட்டில் அவன் அரசு செலுத்தி யிருக்க லாம்; ஏனெனில் நாடுமுழுவதும் அவன் வச மாய் விட்டது. ஆனல் கனேர் ராணியின் பேரழகைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த கான் அவளைத் தன் ராணியாக்கிக் கொள்ளவேண் டும் என்னும் உறுதியுடன் நர்மதை நதிக்கரைக் குச் சென்று மலைக்கோட்டையைத் தாக்கி னன். பெரும்போர் நிகழ்ந்தது. கோட்டை யைக் கான் கைப்பற்றினன். பிறகு தன் காரியத்தை முடித்துக்கொள்ளக் கருதி ரா ணிக்குப் பின் வருமாறு ஒரு நிரூபம் வரைந்து அனுப்பினன் :—

"உமது வீரத்தைக்கண்டு உளமகிழ்கின் றேன். பல்லாயிரம் போர் வீரர்களை இந் நாட் டில் பறிகொடுத்து நான் வெற்றி யடைந்துள் ளேன் என்பது உமக்குத் தெரியும். என்னு டைய பெருஞ் சைந்நியத்துடன் நீர் எதிர்த்து நின்று இவ்வளவுகாலம் போர்புரிந்த உமது வீரத்தன்மையையும் தைரியத்தையும் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். இராணி என்ற பெயர் உமக்கே தகும். இந்நாட்டில் தாங்க ளே ராணியாக அரசாண்டுவர வேண்டுமென் பது என் கோரிக்கை. இந் நாட்டுக்கு ராணி யாக இருப்பதுடன் எனக்கும் ராணியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்"

அப்பாஸ்கான் விடுத்த கடிதத்தை கனேர் ராணி வாசித்தாள். கடுங் கோபத்தினல் அவள் முகம் சிவந்தது. அவன் இஷ்டத்திற்கு இணங்காவிடில் எவ்வாருவது தன்னை கான் பலாத்காரமாக மணப்பான் என்று ராணி நினைத்தாள். மானம் போனபின் அவள் உயி ருடன் இருக்க நினைப்பாளோ? அவள் உட னே தன் உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணி னுள். ஆனல் கனேர் நாட்டை அழித்தவனும் பல்லாயிர ரஜபுத்திர வீரர் மரணத்துக்குக் கா ரணமாய் இருந்தவனுமாகிய கானைக் கொன்று விட்டுப் பிறகு தான் உயிர் விடுவது சாலச் சிறந்தது என்று நினைத்தாள். "மானம் அழிந்தபின் கூட நான் உயிருடன் இருப் பேனு? நான் இறக்குமுன் என் சத்துருவும் இறந்து ஒழிதல் வேண்டும்" என்று தீர்மா னித்துக்கொண்டாள். "உனது இஷ்டப்படி நடக்கத் தயாராகக் காத்திருக்கிறேன். ஆனல் மணச் சடங்குகள் நமது ஜாதி வழக்கப்படி என் அரண்மனையிலேயே நடக்கவேண்டும். விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய எனக்கு ஐந்து நாழிகை அவகாசம் கொடுக்க வேண்டும்" என்று கானுக்குச் சொல்லி அனுப்பிவிட்டாள்.

இச் செய்தியைக் கேட்ட கான் எல்லையில் லா ஆனந்தக் கடலுள் ஆழ்ந்தான். தன் விவாகத்தைக் கொண்டாடும்படி தன் சைந் நியங்களுக்கு உத்திரவிட்டான். பாசறை எங் கும் கூத்தும், குடியும் சந்தோஷமுங் குடி கொண்டன. குறிப்பிட்ட ஐந்து நாழிகை கடந்ததும் கான் தன் காவலர் படை சூழ ராணியின் அரண்மனைக்குச் சென்றுன். வாத் தியங்களின் இனிய முழக்கம் எங்குங் கேட் டது. விவாக சுப காரியத்திற்கு ஏற்ற விதமாக அரண்மனை எங்கும் அலங்கரிக்கப்பட் டிருந் தது. ஜனங்கள் எல்லோரும் நேர்த்தியான உடை உடுத்து மலர்ந்த முகத்துடன் இங்கு மங்குஞ் சென்றனர். எங்கு கண்டாலும் சந் தோஷக் குறிகளே காணப்பட்டன.

கானைப் பெரியோர்கள் மரியாதையுடன் வரவேற்று, அரண்மனையின் மேல் மாடிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவன் வரு கையை எதிர்பார்த்து நின்ற கனேர் நாட்டரசி விவாக காலத்திற்கெனத் தயார் செய்யப்பட்ட உயர்ந்த பட்டாடைகளைக் கானுக்குக் கொ டுத்து உடனே உடுக்கும்படி செய்தாள். விலை மதிப்பற்ற ஆரங்களையும் பல ஆபரணங் களையும் அளித்து அவைகளை அணியவேண்டு மென்று சொன்னுள். கான் அரசியின் அழ கை இமைகொட்டாமல் பார்த்து மகிழ்ந்தான்; அவள் பிரிய வசனங்களைக் கேட்டு உள்ளம் பூரித்தான். அவள் அருகில் அமர்ந்து அவ ளுடன் வார்த்தையாடக் கொண்டிருந்த கா னுக்கு நாழிகைகள் விநாடிகளாகத் தோன் றின.

சிறிது நேரத்திற் கான், "காற்று இன்மையால் உடம்பு எரிவதுபோலத் தோன்றுகிறதோ என்னமோ?" என்று சொல்லவே, இரண்டு தாதியர் அவனருகில் சென்று விசிறி கொண்டு விசிறினர். வேறிருவர் குளிர்ந்த பானகங்களைக் கானுக்குக் கொடுத்தனர். ஆனால் கான் உடல் குளிரவில்லை. இருக்கையை விட்டு எழுந்து வெறி கொண்டவன் போல "எரிகின்றதே, எரிகின்றதே" என்று ஓலமிட்டான்; ஓடினான்; கீழ் விழுந்து புரண்டான்; தன் உடையை கந்தை கந்தையாகக் கிழித்தெறிந்தான், சிறிது நேரத்திற்குள் தரையில் விழுந்து ஈனசுரத்தில் அழலானான்.

இதைக்கண்ட அரசி அவனைப் பார்த்து, "அயோக்கியனே, உன் வாழ்நாள் முடியப் போகின்றது. நீ சற்றுநேரத்தில் உயிர் துறப்பாய். நமது மணச்சடங்கு பிணச்சடங்காக முடியப்போகின்றது. நீ உடுத்தியிருக்கும் ஆடைகள் விஷத்தில் தோய்க்கப்பட்டவை. உன் கயமையினால் உன் முடிவைத் தேடிக் கொண்டாய். மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள எனக்கு வேறு வழி இல்லாமல் போய்விட்டதனால் நான் இவ்வித சூழ்ச்சி செய்ய நேரிட்டது" என்று கூறி திடீரென்று கீழே ஓடிய நதியில் குதித்து உயிர்விட்டாள். பக்கத்தில் இருந்தோர் ஆச்சரியத்தினால் பிம்பங்கள்போல் அசைவற்றுத் திகைத்து நின்றனர்.

கனோர் நாட்டரசி நதியில் குதித்தவுடன் அங்கிருந்தோர் உணர்ச்சிபெற்று கான் இறந்து கிடப்பதைக் கண்டனர். தம்மை வஞ்சித்த ராஜபுத்திரர் மீது உடனே பாய்ந்தனர். அப்போது திடீரென அரண்மனை வெடிக்கவே எல்லோரும் கீழே எரிந்து கொண்டிருந்த நெருப்புக் குழியில் விழுந்து இறந்தனர். கனோர் ராணி அரண்மனைக்கு அடியில் வைத்திருந்த மருந்துக்கு தீவைக்க எற்பாடு செய்திருந்தாள். அவள் மாடியினின்றும் குதித்தபோது மருந்து அறைக்குத் தீ வைக்கப்பட்டது. அதனால்தான் உடனே அரண்மனை வெடித்து எல்லோரையும் தீயில் வீழ்த்தியது. தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகத்தான் கனோர் ராணி, தன் எதிரிகளை வஞ்சித்துக் கொல்ல இவ்வித சூழ்ச்சி செய்தாள்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

தேனியின் சுறுசுறுப்பு

தேனி மிகவும் சுறுசுறுப்புள்ளது என்பது யாவருக்கும் தெரியும். ஒரு தேனி ஒரு நிமிஷ நேரத்தில் 27 பூக்களுக்குச் சென்று தேன் சேர்த்துச் சென்றிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சராசரி, நிமிஷத்துக்கு 15 பூக்களுக்குச் செல்லுவதாகக் கணக்கிட்டாலும், ஒரு மணி நேரத்துக்கு 900-புஷ்பங்களுக்கு ஒரு தேனி செல்லுவதாகச் சொல்லலாம். தேனீக்கள் நாள் ஒன்றுக்கு எட்டுமணி நேரம் வேலை செய்கிறதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

* * *

40–பவுனில் மோட்டார்

ஆகாய விமானம் செய்பவரான ஜேம்ஸ் மார்ட்டின் 2-பேர்கள் உட்காரக்கூடிய புதிய மோட்டார் ஒன்றை தயாரிக்க ஏற்பாடுசெய்து வருகிறார். இதன் விலை சுமார் ரூபா 600. மோட்டார் வேகமாகவும் சிக்கனமாகவும் ஓடக்கூடியபடி தயாரிக்கப்படுமாம்.

* * *

துக்க சம்பவங்கள்

நமது பத்திரிகைக்கு பல தடவை விஷய தானம் செய்துவந்தவரும், அநேக உயரிய நூல்களின் ஆசிரியரும், சிங்கப்பூரில் ஏறக்குறைய 20-ஆண்டுகள் கோர்ட்டு துபாஷியுமாயிருந்து சமீபத்தில் உதவிச் சம்பளம்பெற்று அங்கேயே தமது குமாரர்களுடன் காலங் கழித்துவந்த ஸ்ரீமான் மஹேச குமார சர்மா என்ற M. குப்புசாமி ஐயரவர்கள் காலஞ் சென்றாரெனக் கேட்டு மிகவும் வருந்துகிறோம். இவரது பிரிவு இவர் குடும்பத்தாருக்கு மட்டுமல்ல, தமிழுலகிற்கே பெரிய நஷ்டமெனச் சொல்லவேண்டும். மாயவரம் சேர்ந்த கொறநாடு முனிசிபல் ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயராயிருந்து 55-வயதானது காரணமாக சென்ற வருஷம் வேலையிலிருந்து விலகி ஓய்வு எடுத்துக்கொண்டு மாயவரத்திலே வசித்து வந்த ஸ்ரீமான் S. நாராயணசாமி ஐயரவர்கள் காலகதியடைந்ததைக் கேட்டுத் திடுக்குற்றோம். இப்பெரியார் அருங்குணம் வாய்ந்தவர்; பெரிய உபகாரி; எமது காரியாலயத்தின் அபிவிருத்தியில் மிகவும் அக்கறை கொண்டவர். இவர் பிரிவுக்காக மிகவும் வருந்துகிறோம்.

சிற்றான் எட்டு ஆளுக்குச் சரி.